வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 107 பக்கங்கள் : 20


07 அனல் கிளப்பும் ராகுல் காந்தி பதவி இழப்பு விவகாரம்!

08 சர்வதேச நாணய நிதியத்தின் 'ராடருக்குள்' வரும் முதல் ஆசிய நாடாக இலங்கை


09 மதவாதமும் மொழிவாதமும் இனவாதத்துடன் போட்டி!


11 வௌத்த ஆக்கிரமிப்புக்குள் சிக்கிக்கொண்டது கச்சதீவு

# பதவியை இழந்ததும் ரணிலுக்கு தண்டனை!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 26

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீறிச் செயற்படுவதால் அவர் ஜனாதிபதிப் பதவியை இழந்ததும் தண்டனையை எதிர்கொள்ள வேண்டி வரும்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார். 19

## நாணய நிதியக் கடனால் இந்தியாவுக்கும் மகிழ்ச்சி

கொழும்பு, மார்ச் 26

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள பிணையெடுப்பு குறித்து இந்தியா தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.

இந்த பிணையெடுப்பு இலங்கையின் பொருளாதார மீளெழுச்சி மற்றும் அபிவிருத்திக்கு உதவும் என்றும் இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் எந்தவொரு தரப்புக்குக்கும் பக்கசார்பற்ற வகையில், வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெற வேணடும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய பிணையெடுப்புக்கான வழியை 19

## உள்ளூராட்சித் தேர்தலால் மாற்றம் ஏதும் ஏற்படாது!

### கூறுகிறார் அமைச்சர் ஹறின்

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக நாட்டில் எவ்வித மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களை நிறைவு செய்து, நாடு சற்று கட்டியெழுப்பப்பட்டதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலைக் கூட நடத்த முடியும். எனவே இன்னமும் தாமதமாகவில்லை , எதிர்தரப்பினரை எம்முடன் இணையுமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ அழைப்பு விடுத்துள்ளார்.

அத்தோடு எதிர்வரும் வாரங்களில் ஐக்கிய 19

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவதே தமிழர்களின் தீர்வுக்கான முதற்படி!

### யாழ்ப்பாணத்தில் கூறினார் வசந்த முதலிகே

யாழ்ப்பாணம், மார்ச் 26

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக தமிழ் மக்கள் ஒன்றிணைந்து போராடுவது ஊடாக வடக்கில் காணிப்பிரச்னை, இராணுவ மாயக்கல் பிரச்னை, வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் ஏனைய பிரச்னைகள் தீர்ப்பதற்கான முதற் படியாக அமையு மென அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் எற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

அனைத்து 19



## இழுபறியில் தேர்தல்!

### மீண்டும் கூடுகிறது ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் குறித்து அடுத்த கட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு அடுத்த வாரம் மீளவும் கூடவுள்ளது.

ஏப்ரல் 25ஆம் திகதி, தேர்தலை நடத்துவதில் உள்ள தடைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது என்று தேர்தல்கள் 19

## ஹர்ஷவை வளைத்துப்போட ஜனாதிபதி கடும் பிரயத்தனம்!

### நிதி அமைச்சுப் பதவியும் தயார்

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசுடன் இணைந்தால் அவருக்கு நிதி அமைச்சு கிடைக்கும் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரை வளைத்துப் போடும் முயற்சியை ஜனாதிபதி 19

## பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்னவுக்கு மூன்று மாத காலத்துக்கு பதவி நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 26

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவுக்கு மூன்று மாத காலம் பதவி நீடிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்நிலையில் அடுத்த பொலிஸ்மா அதிபராக யாரை நியமிப்பது என்பது 19

## தென்னாபிரிக்காவுடன் சேர்ந்து அரசியல் தீர்வை எட்ட செயற்குழு

### அமைப்பதற்கு இலங்கை தீர்மானம்

கொழும்பு, மார்ச் 26

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கையில் முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் வழிமுறைகளை வகுக்க தென்னாபிரிக்காவுடன் இணைந்து இலங்கை செயற்குழு ஒன்று அமைக்கப்படும் என வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் இணைந்து மார்ச் 21 மற்றும் 25 ஆம் திகதி வரை அவர் தென்னாபிரிக்கப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். 19

## நாவலர் மண்டபத்தில் இருந்து உடனடியாக வெளியேறுங்கள்!

### யாழ்.மாநகர சபைக்கு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டத்திலிருந்து எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபையினை வெளியேறுமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்திருக்கும் நாவலர் மண்டபம் யாழ்.மாநகர சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள இந்து கலாசார அமைச்சு குறித்த மண்டபத்தைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தபோது அது பல தடவைகள் 19

## இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறுவது எப்போது என்பது இன்னமும் பில்லியன் டொலர் கேள்வி. உள்ளூராட்சி தேர்தலை நடத்த பணம் இல்லை என்று கூறிக்கொண்டிருக்கின்றது அரசு.

அடுத்த ஆண்டுதான் இந்த நாட்டில் தேர்தல் நடைபெறும் என்றும் அந்தத் தேர்தல் மூலம் மக்கள் நாட்டில் தாம் விரும்பிய ஆட்சியை ஏற்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாக தெரிவித்துவிட்டார்.

அப்படியெனில் முதலில் ஜனாதிபதி தேர்தலையோ அல்லது பாராளுமன்ற தேர்தலையோதான் அவர் நடத்த விரும்புகின்றார் என்பதை ஊகிக்க முடிகின்றது.

அண்மையில் தன்னைச் சந்தித்த தமிழ் கட்சி ஒன்றின் தலைவருக்கு ஜனாதிபதி தேர்தலே முதலில் வரும் என்று அவர் கூறியதாகவும் ஒரு தகவல்.

இந்த நிலையில், மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய விகிதாசார தேர்தல் முறையில் நடத்துவதற்கான தனிநபர் பிரேரணையை தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஆபிரகாம் சுமந்திரன் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்.

இதே பிரேரணையை அவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பது இது மூன்றாவது தடவை என்பதையும் கவனிக்க வேண்டும்.

பாராளுமன்றில் ஒரு தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அது பாராளுமன்றத்தில் ஆளுந்தரப்பின் அனுசரணையில்லாமல் தாக்கல் செய்யப்பட்டால் அது எப்பொ நிறைவேறும் என்பது கூறமுடியாது.

மாகாணசபை தேர்தல்கள் அது நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்து விகிதாசார தேர்தல் முறையிலேயே நடந்து வந்தது. அதனை தற்போது உள்ளூரட்சி தேர்தல் சட்டத்தில் இருப்பது போல தொகுதிவாரி மற்றும் விகிதாசார கலப்பு தேர்தல் முறையாக மாற்றுவதற்காக நடைமுறையிலிருந்த சட்டத்தை ரத்துச் செய்யும் தீர்மானம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. ஆனால் பின்னர் புதிய முறையில் நடத்துவதற்கான சட்டம் பாராளுமனறத்தில் இன்றுவரை தாக்கல் செய்யப்படவில்லை. அப்படியொரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தேர்தல் திணைக்களமே அதற்கும் தேர்தல்நடாத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கும்.

ஆனால் அப்படி தேர்தல் திணைக்களம் செய்யாமல் இருப்பதற்காகத்தான் நடைமுறையில் இருந்ததை ரத்து செய்யும் தீர்மானத்தை மாத்திரம் பாராளுமன்றில் நிறைவேற்றிய அன்றைய ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம், புதிய சட்டத்தை நிறைவேற்றவில்லை.

அதனால்தான் பழைய சட்டத்திலேயே தேர்தலை நடத்துகின்ற தீர்மானத்தை பராளுமன்றில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி தேர்தலை நடத்தலாம் என்று பலரும் யோசனை தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக இந்தப் பத்தியிலும் பல தடவைகள் எழுதியிருக்கின்றோம்.

இந்த நிலையிலேயே கடந்த வாரம் சுமந்திரன் பழைய முறையிலேயே தேர்தலை நடத்தக் கோரும் தனிநபர் பிரேரணையை தாக்கல் செய்திருக்கின்றார்.

முன்னதாக நல்லாட்சி அரசில் ரணிலுக்கு முண்டுகொடுப்பதையே தமது பிரதான அரசியல் பணியாக கருதி செயற்பட்டுவந்த கூட்டமைப்பு அப்போது பழைய முறையை ரத்துச் செய்வதற்கான பிரேரணையை மூன்றில் இரண்டு ஆதரவுடன் நிறைவேற்றுவதற்கு தன்னலான முயற்சியை எடுத்த பாவத்தைப் போக்குவதற்காகவோ என்னவோ இப்போது சுமந்திரன் தொடர்ந்து தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்து வருகின்றார்.

உள்ளூராட்சி தேர்தலை தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி- தேர்தல் செலவிற்கு பணத்தை வழங்க அரசு மறுத்துவருவதால், பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பையும் விமர்சனங்களையும் அரசு எதிர்கொண்டு வருகின்றது.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கே பணம் இல்லாமல் நடத்த முடியாமல் இருக்கின்றபோது, மாகாண சபைகளின் தேர்தலை நடத்துவதற்காக பிரேரணை சமர்ப்பிப்பது பலருக்கும் நகைப்பிற்கிடமாக தெரிவது தவிர்க்கமுடியாததுதான்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடத்தப்படவேண்டியது. ஆனால் மாகாணசபை தேர்தல், அதுவும் பழையமுறையில் நடத்துவதெனில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியாகவும் நடத்தலாம். அப்படி நடத்துகின்றபோது உள்ளூராட்சி தேர்தல் செலவிற்கு தேவைப்படுவதுபோல பல பில்லியன் ரூபாய்கள் ஒரே தடவையாக தேவையேற்படாது.

இந்த விடயங்களை சுட்டிக்காட்டி சுமந்திரன் தனக்கு ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்ற தொடர்பை பயன்படுத்தி தனது தீர்மானத்தையே அரசின் தீர்மானமாக பாராளுமன்றில் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சிக்கவேண்டும்.

மாகாணசபைகளுக்கான தேர்தலையாவது நடத்தினால், அரசின் மீதான விமர்சனங்களும் குறைந்துவிடும்!

- ஊர்க்குருவி.

# சீர்குலைக்கும் தலையீடுகளை உடனடியாக தடுத்து நிறுத்துக!

### ஜனாதிபதியிடம் சிவில் அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 26

நீதிமன்றம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையை சீர்குலைக்கும் வகையில் அதில் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டாம் என சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத்தடை உத்தரவுக்கு மதிப்பளிக்குமாறும் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் அவர் தலைமையிலான அரசாங்கத்திடமும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

83 சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்டு கூட்டு அறிக்கையில், நீதிமன்றக் கட்டமைப்பை அச்சுறுத்துவதற்கு ஜனாதிபதியினாலும் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் ஜனநாயக செயன்முறையைப் புறந்தள்ளும் வகையிலான அரசாங்கத்தின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ள அவர்கள், இது ஆபத்தான போக்கிலான அரசாங்கத்தின் செயற்பாட்டைக் காண்பிக்கின்றது என்றும் குறிப்பிட்டனர்.

எனவே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது மிக முக்கியமான விடயம் என்றும் இவ்வாறானதொரு பின்னணியில் எவ்வித தாமதமுமின்றி தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(அ)

# நெல்லியடியில் கஞ்சா பொதியை கைமாற்ற காத்திருந்தவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 26

நெல்லியடி பொலிஸ் பிரிவில் கஞ்சா பொதியுடன் கைதான இளைஞன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேவரையாளி பகுதியில் கஞ்சா பொதி கைமாற்றப்படுவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் இளைஞனை மடக்கிப் பிடித்தனர்.

இளைஞன் கஞ்சா பொதியை பிறிதொருவருக்கு வழங்குவதற்காக வீதியோரம் காத்திருந்த போது கைதாகினார். அவரிடமிருந்து 2.09 கிலோகிராம் நிறையுடைய கஞ்சா கைப்பற்றப்பட்டது.

வியாபாரிமூலை பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞனே கைதாகினார். (அ-2)

# யாழ்ப்பாணத்தில் போராட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 26

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளின் யாழ்ப்பாண விஜயத்தை கண்டித்தும் யாழ்ப்பாணத்தை குழப்ப வேண்டாமென தெரிவித்தும் சிலர் பதாகைகளை ஏந்தி கோசமெழுப்பினர்.

நேற்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் யாழ் நகரிலிருந்து ஒரிருவர் ரிம்மர் மண்டபம் வரை நடந்து வந்து சத்தமிட்டு, கலைந்து சென்றனர்.

தொழிற்சங்க நடவடிக்கை வேண்டாம், வன்முறை வேண்டாம், யாழ்ப்பாணத்தை குழப்பாதே போன்ற கோஷங்களை எழுப்பினர்.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தின் ஒன்றுகூடிய போதே இந்த குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தை கலைக்க அரசாங்கம் தயாரில்லை!

கொழும்பு, மார்ச் 26

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைக் கலைப்பதற்கான எவ்வித ஏற்பாடுகளும் அரசாங்கத்திடம் இல்லையென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு அமைச்சரவை பத்திரத்திற்கமைய சிவில் பாதுகாப்பு சேவை, காலாவதியாகும் சேவையாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அதன் காலம் நிறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதன் பிரகாரம், சிவில் பாதுகாப்புத் திணைக்கள உறுப்பினர்களுக்கு 60 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு, 55 வருடங்களில் சேவைக்கால நீடிப்பைக் கோர முடியும் எனத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, அவ்விடயங்கள் எதுவும் மாறவில்லை எனக் குறிப்பிட்டதுடன், எதிர்காலத்திலும் மாற்றம் செய்யும் நோக்கம் இல்லையென்றும் அவர் வலியுறுத்தினார்.

மொரட்டுவை கட்டுப்பெத்தவில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையகத்தில் அத் திணைக்கள அதிகாரிகளால் ஆற்றப்படும் சேவையை பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம், தாய்நாட்டுக்கு ஆற்றி வரும் சேவை பாராட்டப்பட்டது.

சாகல ரத்நாயக்க, சிவில் பாதுகாப்புத் திணைக்கள உறுப்பினர்களின் தகவல்களைக் கேட்டறிந்து அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டதுடன், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ரஞ்சித் லமாஹேவகேவினால் இந்த விஜயத்தை முன்னிட்டு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

(அ)

# நிதி அமைச்சருக்கு எதிராக நீதிமன்றத்தை நாட முடிவு

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 26

**உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் விடுவிக்கப்படாமை தொடர்பில், நிதி அமைச்சருக்கு எதிராக நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைக்க தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தீர்மானித்துள்ளன.**

எதிர்வரும் சில தினங்களில் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்திடம் விடயங்களை முன்வைக்கவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய, நிதி விடுவிக்கப்படவில்லை என்பதுடன், அது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்திற்கும் நிதி அமைச்சிடமிருந்து எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என அவர் கூறினார்.

நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போதிலும் நிதியை விடுவிக்காதிருப்பது, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படாமை தொடர்பில் சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்தியுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க குறிப்பிட்டார்.

தேர்தலை நடத்துவது குறித்து பல அரசியல் கட்சிகளின் ஆர்வமும் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிவதாக அவர் கூறினார். (அ)

# கட்டாரில் இலங்கையர் பலி!

கொழும்பு, மார்ச் 26

கட்டாரில் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமற்போயுள்ளார்.

கட்டாரின் பின் டர்ஹமி அல் மன்சூரா பகுதியில் அமைந்துள்ள 4 மாடிக் கட்டடமொன்று கடந்த புதன்கிழமை இடிந்து வீழ்ந்தது.

இந்த அனர்த்தத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு இலங்கையர் காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

56 வயதான நிஷங்க சில்வா என்பவரே உயிரிழந்துள்ளதுடன், 60 வயதான அப்துல் ரசாக் ஜமீல் என்பவர் காணாமல் போயுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்விருவரும் கட்டாருக்கு தொழிலுக்காக சென்று குறித்த கட்டடத்தில் தங்கியிருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தம் தொடர்பில் ஆராய்வதற்காக கட்டாரிலுள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் பிரிவு அதிகாரிகள் கள விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய 12 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கட்டாரிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் 13,042 இலங்கையர்கள் கட்டாருக்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளதுடன், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது அங்கு தொழில் புரிந்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

## மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு;

# 23 அரச திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு அழைப்பாணை

மன்னார், மார்ச் 26

மன்னார் - சதொச மனிதப் புதைகுழி வழக்கு தொடர்பில் 23 அரச திணைக்களங்களின் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு அழைப்பாணை விடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் நிரஞ்சனி முரளிதரன் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தின விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, 23 அரச திணைக்களங்களின் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு அழைப்பாணை விடுக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய, குறித்த திணைக்களங்களின் தகுதிவாய்ந்த அதிகாரிகளை ஜூலை 05 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டு, அன்றைய தினம் வரை வழக்கு விசாரணையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் ஆராய ஜனாதிபதியால் குழு நியமனம்

கொழும்பு, மார்ச் 26

அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையிலான குறித்த குழுவில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, நிதி இராஜாங்க அமைச்சர், மாகாண ஆளுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக, மக்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து பணிகளையும் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 03 ஆம் திகதி ஆளுநர்கள் மற்றும் பிரதேச செயலக தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், மக்களுக்கான சேவைகள் குறித்து சுற்றறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மாகாண சபைகளின் விவகாரங்களை ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத போதிலும் மக்களுக்கான சேவைகள் இடையூறின்றி முன்னெடுக்கப்படுவதையே ஜனாதிபதி எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர மேலும் தெரிவித்தார். (அ)

# உள்ளூராட்சிச் சபை தேர்தல் குழப்பம் பற்றி ஆணைக்குழுவுடன் ஆராயவுள்ளார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சிச் சபை தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் நிச்சயமற்ற தன்மை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவை அழைக்கவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.




உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பில் நிச்சயமற்ற நிலையில் விவாதம் முடிவடைந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என அவர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், "உள்ளூராட்சித் தேர்தல் ஆணைக்குழுவின் நிச்சயமற்ற தன்மை குறித்து தேர்தல் ஆணைக்குழுவை விரைவில் கூட்டத்திற்கு அழைப்பேன் என்று நம்புகிறேன்," என்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளும் தேர்தல் ஆணைக்குழுவும் உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்றத் தீர்ப்புகளை அரசாங்கம் மதித்து அதன்படி செயல்படும் என்றும் பிரதமர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து கேட்டபோது, புத்தாண்டுக்கு முன்னதாக அரசு ஊழியர்களுக்கு இரண்டு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய பல முன்னுரிமைகளை அரசாங்கம் சந்திக்க உள்ளதாக கூறினார். (அ)

# அரசின் திட்டத்தை முறியடிக்க வெளியாருக்கு பயிற்சி இல்லை

## மின்சாரசபை பொறியியல் சங்கம்

கொழும்பு, மார்ச் 26

மின்சார சபை, துறைமுக அதிகாரசபை போன்ற நிறுவனங்களுக்கு இராணுவ மயமாக்கலை அறிமுகப்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும், இதனால் எதிர்காலத்தில் எந்த வெளிநபர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதில்லை என மின்சார சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் தலைவர் திநிஹால் வீரரத்ன தெரிவித்தார்.

சில வெளி நபர்களை அந்த நிறுவனங்களுக்கு அனுப்பி அவர்களின் கடமைகள் குறித்த பயிற்சிகளை வழங்க அரசாங்கம் முயற்சித்ததாகவும், இனி மேல் அவ்வாறான ஒருவருக்கு பயிற்சி வழங்கவேண்டாம் என தீர்மானித்ததாகவும் வீரரத்ன மேலும் கூறினார். (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இணையத்தளம் மூலம் பதிவு செய்யலாம்

கொழும்பு, மார்ச் 26

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தனிப்பட்ட ரீதியில் செல்வோர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இணையத்தளம் மூலம் பதிவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முதற்தடவையாக அல்லது பதிவுகளை புதுப்பிக்க இந்த இணையத்தளத்தை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.slbfe.lk எனும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளத்தில் Online Self Registration எனும் பகுதிக்குள் பிரவேசித்து சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய தரவுகள் தொடர்பான விபரங்களையும் இணையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ள 1989 என்ற துரித அழைப்பு இலக்கத்தை தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்துவதற்கு தீர்மானம்

கொழும்பு, மார்ச் 26

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக அடுத்த வாரம் முதல் தமது தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தவுள்ளதாக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வரிக்கொள்கை தொடர்பில் ஜனாதிபதியுடன் முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்த கலந்துரையாடல் இதுவரை நடைபெறாமையினால் அவர்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்து யாழில் இருந்து தப்பிச்சென்ற தம்பதியை இலங்கைக்கு நாடு கடத்த உத்தரவு!

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் பெருந்தொகை பணத்தை மோசடி செய்து கொண்டு சட்டவிரோதமாக தமிழகத்திற்னு தப்பிச் சென்ற தம்பதிக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த தண்டனையை இலங்கைச்சிறையில் அனுபவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முகமட் சிகாப், பாத்திமா பர்சானா தம்பதியினர் பிரிவெல்த் குளோபல் என்ற நிதி நிறுவனத்தின் நாடு முழுவதும் ஆயிரம் கோடி ரூபாவிற்கும் அதிகமான நிதியை சுருட்டிக் கொண்டு தமிழகம் தப்பிச் சென்றனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து படகில் தப்பிச் சென்றனர். அவர்களை ஆட்கடத்திய வடமராட்சி வாசி சில வாரங்களின் முன் கஞ்சா கடத்தல் வழக்கில் தமிழகத்தில் சிக்கினார்.

அவர்கள் எந்த ஆவணங்களுமின்றிச் சட்டவிரோதமாக தமிழகத்திற்குள் நுழைந்த குற்றச்சாட்டில் இரண்டு மாதங்கள் சிறை தண்டனையும், தலா 5000 ரூபாய் அபராதம் விதித்து வேதாரணியம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவர்கள் இருவரையும் உடனடியாக இலங்கைக்கு நாடு கடத்தி, இலங்கைச் சிறைகளில் இருவரின் தண்டனைக் காலத்தை அனுபவிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது. (அ)

# 8 மோட்டார் சைக்கிள்களுடன் ஒருவர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, மார்ச் 26

அதிக இயந்திர திறன் கொண்ட 08 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல்மாகாண புலனாய்வுப் பிரிவுக்குட்பட்ட கல்கிஸை பிரிவின் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இந்த மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொரலஸ்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்தனபிட்டிய பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்களுக்கு போலியானவை என சந்தேகிக்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளமை தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேநீர் விலை குறைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 26

ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு பால் தேநீரின் விலை 100 ரூபாவாக உள்ளது.

ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 200 ரூபாவினாலும் 400 கிராம் ஒன்றின் விலை 80 ரூபாவினாலும் குறைக்கப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் மன்றம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், பால் தேநீரின் விலையும் குறைக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி



கொழும்பு, மார்ச் 26

அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகள் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் இவை அனைத்தும் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதேவேளை, புத்தாண்டுக்கு முன்னர் அரச ஊழியர்களுக்கு இரண்டு தடவை சம்பளம் வழங்கவேண்டி இருப்பதால், அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக பிரதமர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதியை விடுவிக்குமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். (அ)

# நாட்டில் பெருமளவு உணவு வீணாகிறது!

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் வருடாந்தம் பெருமளவு உணவுப் பொருட்கள் வீணாவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டில் வீணான உணவின் அளவு 10 மில்லியன் மக்களுக்கு போதுமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் முறையான போக்குவரத்து இன்மையால், வருடாந்தம் 19 வீத மரக்கறிகளும் 21 சதவீத பழங்களும் அழிவடைகின்றன.

இதன்படி வருடாந்தம் 21,955 மெட்ரிக் தொன் மரக்கறிகள் அழிவடைகின்றன.

நுகர்வுக்கு எடுத்துக்கொள்ள முடியாத பழங்களின் அளவு 90,151 மெற்றிக் தொன்னாகும்.

அறுவடைக்கு பின்னரான அழிவுகளும் அதிகமாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக நகர்ப்புறங்களிலும் அதிகளவு உணவு வீணாகின்றது. 2021 ஆம் ஆண்டில் வீணான உணவின் அளவு 10 மில்லியன் மக்களுக்கு போதுமானது-என்றார். (அ)

# வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 26

அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்து வருவதால், இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவேண்டுமென வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இறக்குமதி தடையை தளர்த்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சிடம் தாம் முன்னர் கோரிக்கை விடுத்ததாக அதன் செயலாளர் கூறியுள்ளார்.

மூன்று வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாததால், இறக்குமதியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மனுக்களை இடைநிறுத்த அரசு பிரயத்தனம்!

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மனுக்களை இடைநிறுத்த பாராளுமன்றம் அவதானம் செலுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளின் நீதிமன்றம் தலையிடாத நிலையில் நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் முறையற்ற வகையில் தலையிடுவது குறித்து ஜி.எல்.பீரிஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

உயர் நீதிமன்றத்துக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை உயர்நீதிமன்றம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது என்றும் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

உண்மையில் உயர் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவால் பாராளுமன்றத்தில் அதிகாரம் மற்றும் கௌரவம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் நீதித்துறையினதும் கௌரவத்தை பாதுகாக்க சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு குழுவாக செயற்பட தாம் தயார் என்றும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார். (அ)

# எவரது உரிமையையும் பறிக்கப்போவதில்லை

## கூறுகிறார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, மார்ச் 26

எவரது உரிமையையும் பறிக்காமல் சட்டத்திற்கிணங்க உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்தில் அரசாங்கம் செயற்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் பல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவை குறித்து தான் பேசப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் ஆணைக்குழு எடுத்த தீர்மானம் குறித்து பொது நிர்வாக அமைச்சர் என்ற ரீதியில் அவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வேன் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இது ஒருபுறம் இருக்க அடுத்த வாரத்தில் நாம் எதிர்கொள்ளவுள்ள பெரும் நெருக்கடி குறித்தே தானும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார். (அ)



ஈழநாடு
Eelanadu
26.03.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னாபிரிக்க உதவி?

இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு தென்னாபிரிக்காவிடமிருந்து உதவிகளை பெறவுள்ளதாகவும், தென்னாபிரிக்க அனுபவத்தின் அடிப்படையில் செயல் குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கின்றார். பல வெளிநாட்டு அமைச்சர்கள் காலத்திற்கு காலம் கூறிய பல கதைகளை தமிழ் மக்கள் கேட்டுவிட்டனர். இப்போது அலி சப்ரி புதியதொரு கதையை கூறியிருக்கின்றார். தென்னாபிரிக்க கதை முன்னரும் சிலரால் கூறப்பட்ட கதைதான். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், அரசுசாரா நிறுவனங்களின் தாராளமான நிதியின் கீழ் தென் னாபிரிக்க சுற்றுப்பயணங்கள் பலவும் இடம்பெற்றிருக்கின்றன. இதில் பங்குகொண்டு, சுற்றுலாக்களை அனுபவித்த தமிழர்களும் இருக்கின்றனர்.

யுத்தம் நிறைவுற்று 13 வருடங்கள் முடிந்துவிட்டது. இந்த 13 வருடங்களில் நல்லிணக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் எவையுமே வெற்றிபெறவில்லை. இனியும் வெற்றி பெறுமா என்பது சந்தேகமே! ஏனெனில் நல்லிணக்க முயற்சிகளுக்கான அடிப்படை அரசியல் தீர்வாகும். அரசியல் தீர்வின்றி, ஒருபோதுமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால், கடந்த 13 வருடங்களாக நல்லிணக்கம் தொடர்பில் பேசியவர்கள் அனைவருமே தோல்வியடைந்திருக்கின்றனர். அரசு சாரா நிறுவனங்களும், நல்லிணக்கம் தொடர்பில் பேசும் கொழும்பு சிவில் சமூக அமைப்புக்களை சேர்ந்தவர்களும் நல்லிணக்கம் என்பதன் அடிப்படையை தெளிவாக புரிந்து கொண்டிருப்பதாக தெரியவில்லை.

தென்னாபிரிக்க அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள முடியுமா? அந்த அனுபவங்களை இலங்கையின் இனப்பிரச்னையை தீர்க்கும் முயற்சிகளுக்கு பயன்படுத்த முடியுமா? இந்த இரண்டு கேள்விகளுக்குமான பதில் இல்லையென்பதுதான். ஏனெனில், தென்னாபிரிக்க அனுபவம் என்பது அடிப்படையிலேயே மாறுபட்டது. தென்னாபிரிக்காவில் ஒடுக்குமுறைக்குள்ளான தரப்பு கறுப்பின பெரும்பான்மை மக்களாவர்.

எண்ணிக்கையில் சிறுபான்மையான வெள்ளையின மக்களே அரசியலில் மேலாதிக்கம் பெற்றவர்களாக இருந்தனர். அவர்களை எதிர்த்தே கறுப்பின மக்கள் போராடினர். தவிர, தென்னாபிரிக்க மக்கள் கிறிஸ்தவர்கள். அங்கு அரசியலில் மதம் ஒரு மேலாதிக்கமாக தொழில்படவில்லை. இலங்கையில் இவைகள் தலைகீழாக இருக்கின்றன. அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களையே தமிழ்மக்களுக்கு அதிகமென்று கூறும் சிங்கள - பௌத்த மேலாதிக்கம், தென்னிலங்கை அரசியலில் புரையோடிப் போயுள்ள சூழலில், தென்னாபிரிக்க அனுபவங்களை எவ்வாறு இலங்கைத் தீவின் நல்லிணக்கத்திற்கு பயன்படுத்த முடியும்?

இலங்கையின் இனப்பிரச்னையை தீர்ப்பதிலுள்ள அடிப்படையான பிரச்சினை, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பலவீனமான தரப்பாக இருக்கின்றனர். சிங்கள ஆளும்வர்க்கம் யுத்த வெற்றியுடன் விடயங்களை அணுகுகின்றன. இந்த நிலையில் பலமான சிங்களவர்களும் பலவீனமான தமிழர்களும் எவ்வாறு நல்லிணக்க பொறிமுறையொன்றுக்குள் உடன்படுவது? இலங்கையின் நல்லிணக்க வாதத்திலுள்ள அடிப்படையான சவால் இதுதான். இந்த சவாலை வெற்றிகொள்ள முடியாமையால்தான், கடந்த 13 வருடகால நல்லிணக்க முயற்சிகள் பூச்சியத்திலேயே இருக்கின்றன.

# தேசிய நல்லிணக்கத்துக்கு நிலைமாறுகால செயன்முறை!

தென்னாபிரிக்காவில் இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் இடம்பெற்ற நல்லிணக்கச் செயன்முறைகளைப் பற்றியும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைப் பற்றியும் ஆராய்வதற்காக அமைச்சர்கள் குழுவொன்று அந்த நாட்டுக்கு விஜயம் மேற்கொள்வதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இன ஒதுக்கலுக்கு எதிரான பல தசாப்த காலப் போராட்டத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களைக் கையாண்டதில் ஒரு முன்னோடியாக அமைந்தமைக்காக தென்னாபிரிக்காவின் நல்லிணக்கச் செயன்முறைகளும் குறிப்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றன.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான அம்சம் அதன் ஒளிவுமறைவின்மையும் திறந்த போக்குமாகும். ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட பகிரங்க விசாரணைகள் இன ஒதுக்கல் வருடங்களின்போது இழைக்கப்பட்ட மீறல்களை தென்னாபிரிக்கர்கள் அறிந்துகொள்வதை உறுதிப்படுத்தின. அப்பட்டமான மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கையர்களுக்கு புதிய நம்பிக்கையை அத்தகைய ஆணைக்குழுவொன்றினால் ஏற்படுத்தமுடியும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

உள்நாட்டுப் போர் மற்றும் இடதுசாரிக் கிளர்ச்சிகளின்போது காணாமல்போன தங்கள் உறவினர்களுக்கு நேர்ந்த கதி பற்றி அவர்களின் குடும்பத்தினர் அறிந்துகொள்வதற்கு ஆணைக்குழுவினால் வகைசெய்யக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நல்லிணக்கச் செயன்முறை இலங்கையின் இயல்பான நிலைவரங்களுக்கு ஏற்புடையதாக உள்நாட்டில் வகுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அந்த செயன்முறை அவ்வாறு அமைந்தால் மனித உடல் அதன் அவயவத்தை எவ்வாறு அந்நியமானது என்று நிராகரிக்க முடியாதோ அதே போன்று அதையும் நிராகரிக்க முடியாதுபோகும்.

தீங்கிழைப்புக்கு இழப்பீடு வழங்கும் நீதி ( Restorative Justice ) மற்றும் தண்டனை வழங்கும் நீதி ( Retributive Justice ) செயன்முறைகளுக்கு அப்பால் செல்வதற்கு இலங்கை முயற்சிக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. குற்றவியல் நீதி முறைமை ஒரு தடுப்பு நடவடிக்கையின் வடிவமாக தண்டனை வழங்கும் நீதியை பயன்படுத்துகிறது. இது குற்றம் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கான பாதுகாப்பை வழங்கவில்லை.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka


போருக்கு முன்னரான நிலைவரத்துக்கு சமூகத்தை மீள ஏற்படுத்துவது நல்லிணக்கத்தைச் சாதிக்கப் போதுமானதல்ல. இயல்பான சமூக குற்றவுணர்வு இல்லாத நிலையில் மீறல்களுக்கு பொறுப்பானவர்களுக்கு தண்டனை வழங்குவது சமூகத்தை துருவமயப்படுத்தும். இன மோதல்களுக்ககோ அல்லது பெரிய பரந்தளவிலான மோதல்களுக்கோ பொருத்தமில்லாத தண்டனை வழங்கும் நீதிச் செயன்முறையை விடவும் தென்னாபிரிக்கா பாணியிலான நிலைமாறுகால அணுகுமுறை (Transformative approach ) பொருத்தமானது என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

வன்முறையை நிராகரிக்கின்ற அதே வேளை இலங்கை மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய - இலங்கையின் விழுமியங்களுக்கும் நீதி வடிவங்களுக்கும் இசைவான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதே சவாலாக அமையும். எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமையவேண்டியது அவசியம் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

தென்னாபிரிக்காவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு சுயாதீன தெரிவுக்குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டே நியமிக்கப்பட்டனர். அந்த தெரிவுக்குழு நாட்டில் உள்ளை சகல அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் மத அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருந்தது. அதேபோன்றே இலங்கையிலும் உகந்த கலந்தாலோசனைச் செயன்முறை மூலமாக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம் இடம்பெறவேண்டியது மிகமிக முக்கியமானதாகும்.

அதனால், தென்னாபிரிக்காவின் ஆணைக்குழுவின் செயன்முறைகளை ஆராய்பவர்கள் இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை அடையும் முகமாக ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யவேண்டியது அவசியமாகும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -73

# ஒரு கிராமம் எழுச்சிபெறுகிறது

**கணபதி சர்வானந்தா**

ஒரு கிராமத்தின் செயற்பாடுகளிலும் அதன் வளர்ச்சியிலும் அக்கிராமத்தி மக்கள் எவ்வாறு பங்களிக்கலாம்? என்றதற்கு உதாரணமாக இணுவில் அறிவாலயத்தில் ஒரு சந்திப்பு நடைபெற்றது. இணுவில் வட கிழக்கை ஒரு பால் உற்பத்திக் கிராமமாகத் தெரிவு செய்த அரசு அதன் செயற்பாடுகளை ஊக்கிவிப்பதற்கா ஒரு கோடி பெறுமதியான உற்பத்திச் சாதனங்களை வழங்கியுள்ளது. மிகுதி ஒரு கோடிக்கான பங்களிப்பை கிராமம் செய்ய வேண்டும். இத் திட்டத்திற்கு யாழ். குடாநாட்டில் இருந்து இரண்டு கிராமங்கள் தெரிவாகியிருந்தன. அதில் இயங்கு நிலையில் தற்போது இணுவில் கிராமமே இருக்கிறது.

அதனை விரிவாக்கி அத்திட்டத்தை ஒரு வெற்றி கரமான நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பை உணர்ந்த இணுவில் பிரித்தானிய ஒன்றியம் இணுவில் அறிவாலயத்திற்கூடாக ஒரு பெரு முயற்சியை எடுத்துள்ளது. அந்த வகையில் இணுவில் வடகிழக்கு சௌபாக்கியா பாற் பொருள் உற்பத்திசங்கமும் இணுவில் அறிவாலயமும் இணைந்து சௌபாக்கியா உற்பத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினர்.

இதில் அறிவாலயத்தின் தலைவர் ஓய்வுநிலை பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் அவர்கள் இணுவில் பிரித்தானிய ஒன்றியத்தின் செயலாளர் பதஞ்சலி நவேந்திரன் அவர்கள், சௌபாக்கிய சங்க தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், துறைசார் அனுபவம் மிக்கவர்கள்., அறிவாலய நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஒரு கிராமம் எழுச்சிபெற அக்கிராம மக்களின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இம் முயற்சி ஒரு நல்ல உதாரணமாகக் காணப்பட்டது. இணுவில் கிராமத்தைச் சேர்ந்த பால் உற்பத்தி தொடர் பான துறைசார் நிபுணர்களும் தாமாக முன்வந்து இதிலே பங்கெடுத்துக் கொண்டதென்பது மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று.





ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் நான் இப்படியான பல முயற்சிக் கூட்டங்களிலே கலந்து கொண்டிருக்கிறேன். ஒன்றில் அது பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் போன்ற அரச நிறுவனங்களால் ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்கும். அல்லது வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டத்திற்கேற்ப ஒழுங்கு படுத்தப்பட்டதாக இருக்கும். பெரும்பாலும் இரண்டுமே குதிரையை வலிந்திழுத்துக் கொண்டு சென்று தண்ணீர் குடிக்க வைக்கும் செயற்பாடுகள் போலத் தானிருக்கும். அவை அப்போது அத்துடன் முடிந்துவிடும். தொடர்ச்சியாக நடைபெறாது.

ஆனால் மக்கள் தமது கிராமத்தின் பொறுப்பை உணர்ந்து, ஒரு அரச நிறுவனம் என்ன செய்ய வேண்டுமோ, அதற்கு இணையாக நிகழ்சி நிரலை ஒழுங்குபடுத்தி துறைசார் நிபுணர்களையும், மற்றும் அத்துறையில் நீண்ட கால அனுபவ முடைய கிராம மக்களையும் தேர்வு செய்து ஒரு முயற்சியை முன்னெடுப்பதென்பது இலகுவான காரியமல்ல.

தற்போது சௌபாக்கியாவின் விரிவாக்கத்திற்கான முன் முயற்சிகள் நடைபெறுகின்றன. நிதி வளத்தை இணுவில் பிரித்தானிய ஒன்றியம் வழங்கவிருக்கிறது. அடுத்த கட்ட உற்பத்திக்கான செயற்திட்ட வரைபை இணுவில் அறிவாலயம் மேற்கொள்ளுகிறது.

அரச பங்களிப்பில் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்கள் இன்னும் இயங்காதிருக்கின்றன. அவற்றின் எழுச்சிக்கு இது போன்ற முயற்சிகள் முன்னுதாரணமாகக்கூட இருக்கலாம். எதிலும் தன்னார்வமாக மக்கள் வந்து இணைந்து செயற்படுவ தென்பது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயம். அது இணுவிலில் நடைபெறுகிறது.

ஒரு தேசத்தின் அபிவிருத்தி என்பது கிராமத்தில் இருந்துதான் தொடங்க வேண்டும். கிராமத்தின் எழுச்சி என்பது அக் கிராமத்திலுள்ள மக்கள் தன்னார்வத்தோடு பங்களிப்புச் செய்கின்ற திட்டங்களை அக்கிராமம் நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும்.அதற்கு இணுவில் சௌபாக்கியா ஒரு நல்ல முன்னுதாரணமாகக் கூட இருக்கலாம். •

# இந்தவார ராசிபலன் 26.03.2023 - 01.04.2023

**நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி**

**மார்ச் 26 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - பங்குனி 13**

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

புத்திக் கூர்மையுடன் செயல்களை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக திடீர் பயணங்கள் ஏற்படும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குடும்பத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாக நடந்து முடியும். செயல்திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் யோகநிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தினருடன் விருந்து நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எதையும் ஆராய்ந்து பார்த்து செய்ய வேண்டியது அவசியம். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை பற்றிய கவலை நீங்கும். நிர்வாகத்தின் ஆதரவும் இருக்கும்.மாணவர்களுக்கு எதிர்காலம் பற்றிய திட்டங்கள் மனதில் தோன்றும். கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவர்

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வாக்கு வன்மையால் எளிதாக தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்க பெறுவர். பிரச்னைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு ,கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவர். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

ஆக்க பூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புதுவியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பர். பயணங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய பயம் நீங்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். அனுபவ பூர்வமான அறிவு திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் குடும்பத்தினரை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். எதிலும் அவசரப்படாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். கணவன், மனைவிக்கிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மன தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். வீண் அலைச்சலும், எதிர்பாராத செலவும் உண்டாகும். மனதடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல நேரலாம்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நீங்கள் நல்லதாக பேசினாலும், எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. சூரியன் சஞ்சாரத்தால் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை தீரும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். உத்யோகத்தில் பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் மனைவி குழந்தைகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கலாம். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையை அனுசரித்து செய்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை.

# ‘திருடர்கள் எப்படி மோடி என்ற பொதுப்பெயர் பெற்றிருக்கிறார்கள்?’



சென்னை மடல்
-பகவான் சிங்-

இந்தியா பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. அலறி விடாதீர்கள். இது வெறும் அரசியல் அனல் மட்டும்தான். விளக்கமாகப் பார்ப்போம். ஆளும் பாஜக அரசியல்வாதிகள் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் திளைத்துள்ளனர். எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் வெகுண்டு எழுந்து எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஊடகவியலாளர்களுக்குப் பெருந்தீனி கிடைத்துவிட்டது. எங்கும் இதுபற்றிய விவாதங்கள். சாமானியன் கொட்டாவி விடுகிறான்.

இத்தனை பரபரப்புக்கும் காரணம், வியாழனன்று, நரேந்திர மோடியின் மாநிலமான குஜராத்தில் உள்ள சூரத் நீதிமன்றத்தில், 2019 ஏப்ரலில் குஜராத் சட்டமன்ற உறுப்பினரான பாஜகவைச் சேர்ந்த பூர்ணேஷ் மோடி தொடுத்த மானநஷ்ட வழக்கில் ராகுல் காந்திக்கு எதிரான குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு, இரண்டாண்டு சிறைத் தண்டனை உத்தரவிடப்பட்டதுதான். இந்திய பாராளுமன்றச் செயலகம் இந்த உத்தரவின் பேரில் விரைந்து நடவடைக்கை எடுத்து, கேரளாவின் வயநாடு தொகுதி உறுப்பினரான ராகுல் காந்தியைப் பாராளுமன்றத்திலிருந்து தகுதி நீக்கம் செய்தது.

உலகின் மிகப்பெரிய வைர உற்பத்தி நகரமான சூரத் நீதி மன்றத்தில் தனது வழக்கைத் தொடுத்தார் பூர்ணேஷ் மோடி. 2019 பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது கர்நாடகாவில் உள்ள கோலாரில் தன்னை அவதூறு செய்ததாக பூர்ணேஷ் மோடி, ராகுல் காந்தி மீது வழக்கு தொடுத்தார். இங்கு நான் கோலார் பற்றிய ஒரு சுவாரஸ்யமான விஷயத்தையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். கோலார் நகரம் தான் இந்தியாவின் தங்க நகரம் என்று புகழப்படுவது.

## அனல் கிளப்பும் ராகுல் காந்தி பதவி இழப்பு விவகாரம்!

கேஜிஎப் (கோலார் கோல்ட் பீல்ட்ஸ்) எனப்படும் தங்கவயல்தான் நாட்டின் மிகப்பெரிய தங்கச் சுரங்கம். குறைந்த தங்க உற்பத்தி மற்றும் அதிகரிக்கும் செலவுகள் காரணமாக, 2001 பெப்ரவரியில் இது மூடப்பட்டது.

காங்கிரஸ் கட்சி மற்றும் ராகுல் காந்தி, இந்திய ஜனநாயகம் குறித்துப் பரப்பி வரும் ‘அவதூறு’களின் குரல்களை ஒடுக்க பாஜக செய்யும் தீய முயற்சியே இந்த சூரத் வழக்கும், அதற்கான சிறைத் தண்டனையும், தகுதி நீக்கமும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கர்கே குற்றம்சாட்டி வருகிறார். அரசுக்கு ஆதரவாகப் பேசுபவர்கள், ராகுலின் உரை, கண்ணியமான அரசியல் உரை என்ற வரம்பை மீறி, பிரதமர் நரேந்திர மோடியைத் தாக்கும் விதத்தில் இருந்ததாகவும், சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்றும் வாதிடுகிறார்கள். அப்படி அந்த கோலார் பொதுக்கூட்டத்தில் ராகுல் என்னதான் பேசினார்?

“நீரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி” இவர்கள் அனைவருக்கும் எப்படி மோடி என்ற பொதுவான குடும்பப் பெயர் இருக்கிறது? திருடர்கள் அனைவரும் எப்படி மோடி என்ற பொதுப் பெயர் பெற்றிருக்கிறார்கள்” - என்றார், காங்கிரஸின் இளவரசர்,

அவர், கோலாரில் உதிர்த்த பொன் மொழிகள் இவைதாம். இந்தியச் செய்திகள் குறித்து அதிகம் அறியாதவர்களுக்காக - இந்தியாவில் நிதி மோசடி செய்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று, இந்திய நீதிமன்றங்களால் விசாரணைக்கு உட்பட்டிருக்கும் குற்றவாளிகள், நீரவ் மோடியும் லலித் மோடியும். இப்படிச் சில வர்த்தக ஜாம்பவான்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டுச் சிறப்புச் சலுகைகளை வழங்குவதாக நரேந்திர மோடி அரசின் மீது தொடர்ந்து தீவிர குற்றச்சாட்டுகளை அடுக்கி வருகிறார்கள், ராகுலும் அவரது காங்கிரஸ் தொண்டர்களும். இதில் குறிப்பாக இலக்காகியிருப்பவர், குஜராத்தைச் சேர்ந்த தொழிலதிபர் அதானி. இலங்கையின் ஒரு துறைமுகத் திட்டம் உட்பட, பல முக்கிய இந்திய உட்கட்டமைப்புத் திட்டங்களை இவர் வசப்படுத்தியுள்ளார்.

சுவீடனிலிருந்து போபோர்ஸ் பீரங்கி வாங்கிய வழக்கில் 1980களில், ராகுலின் தந்தை ராஜீவ் காந்தியை அப்போதைய எதிர்க்கட்சிகள் தொடர்ந்து திருடன் என்றுதான் குறிப்பிட்டு வந்தன என்பதை நான் இங்கு நினைவு கூர்கிறேன். பூர்ணேஷ் மோடி தொடுத்த வழக்கில் ராகுல், பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக அவதூறு பரப்பினார் என்று கூறவில்லை. தன்னையும் மிக முக்கியமாக, மோடி என்ற இனத்தவரை ஒட்டுமொத்தமாகவும் திருடர்கள் என்று குறிப்பிட்டு அவமானப்படுத்தியிருப்பதாகத்தான் வழக்கு. ஆனால் நீதிமன்றத்தில், ‘மோடி’ என்பது ஒரு சமூகத்தைக் குறிப்பிடுவதாகத் தான் அறிந்திருக்கவில்லை என்று தெரிவித்தார் ராகுல். தானியங்களிலிருந்தும் விதைகளிலிருந்தும் எண்ணெய் எடுக்கும் சமூகத்தினர் தான் ‘மோடி’ சமூகத்தினர். அவர்கள் ‘எண்ணெய் வணிகர்கள்’ என்று குறிப்பிடப்படுகின்றனர்.

2021 ஜூன் மாதம் நடந்த விசாரணையில், சூரத் நீதிமன்றம், ராகுலிடம், அவர் பிரதமர் மோடி ஒரு தொழிலதிபருக்கு முப்பது கோடி ரூபாய் கொடுத்ததாகக் கோலாரில் கூறியது குறித்துக் கேட்டது. அதற்குப் பதிலளித்த ராகுல், ஓர் எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமரின் தவறான செயல்கள் குறித்துச் சுட்டிக்காட்டுவது தனது கடமை என்றும், அவரது குடும்பப் பெயரான மோடி என்பதை மட்டுமே தான் குறிப்பிட்டதாகவும், மற்ற மோடிகளைப் பற்றி அவதூறு எதுவும் செய்யவில்லை என்றும் கூறினார். மோடி என்ற குடும்பப் பெயர் கொண்ட அனைவரும் திருடர்கள் என்று கூறினீர்களா என்ற கேள்விக்கு, தான் அப்படி எதுவும் கூறவில்லை என்று அவர் பதிலளித்துள்ளார். ஆனால், உண்மை என்னவென்றால், அவரது கோலார் உரையின் அதிகாரபூர்வ வீடியோ பதிவுகள் ஆதாரங்களாக இருந்தன. இப்படிப்பட்ட இக்கட்டான சூழலிலிருந்து வெளிவந்திருக்க அவருக்கு ஓர் அருமையான வாய்ப்பு இருந்தது. தனது பொறுப்பற்ற பேச்சுக்காக அவர் மன்னிப்பு கேட்டிருக்கலாம். அது, அரசியல் நாகரிகமாக இருந்திருக்கும். ஆனால், காந்தி குடும்பத்தின் வாரிசு மன்னிப்பு கேட்கலாமா?



சூரத் நீதிமன்றம் ராகுலுக்கு உடனடி சிறைப்படுத்தலுக்கு எதிரான பிணையும், உயர்நீதிமன்றத்துக்கு மேல் முறையீட்டுக்குச் செல்ல நேரமும் அளித்திருந்தாலும், இவரது குற்ற உறுதியையோ சிறைவாசத்தையோ தடை செய்யவில்லை. இந்திய சட்டப்படி (மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்) குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு இரண்டாண்டுகள் அல்லது அதற்கு மேலான சிறைத் தண்டனை பெற்ற எம் எல் ஏ அல்லது எம் பி, தனது அவை உறுப்பினர் தகுதியை இழக்கிறார்கள். பாஜக உறுப்பினர்கள், ராகுலின் இந்தக் கோலார் பேச்சால் ஆத்திரமடைந்து நாடு முழுவதும் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்த நிலையில், ராகுல் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார். தான் தவறு எதுவும் செய்யவில்லை என்றே அவர் கூறிவந்தார். வழக்கு தொடுக்கப்பட்ட போதும், விசாரணையின் போதும்கூட, தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்றே கூறிவந்த அவர், ‘திருடர்கள்’ என்ற வார்த்தையைத் திரும்பப்பெறவில்லை. நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் அதே மறுப்பு மனநிலையில்தான் அவர் இருந்தார். தீர்ப்பு வெளியான சில நிமிடங்களில் அவர் ட்விட்டரில் மஹாத்மா காந்தியின் பொன்மொழிகளை மேற்கோள் காட்டித் தனது அரசியல் முதிர்ச்சியின்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். ராகுலின் ட்வீட்டில் இருந்த காந்தியடிகளின் மேற்கோள் - ‘எனது மதம் சத்தியம் மற்றும் அஹிம்சையின் அடிப்படையிலானது. சத்தியமே எனது கடவுள், அஹிம்சை அதை அடையும் வழி’.

## ‘சத்தியமே எனது கடவுள்’ இதில் ராகுல் சொல்வது என்ன?

அதாவது, அனைத்து மோடிகளும் திருடர்களே என்று அவர் கூறியது உண்மைதான் என்று நம்மை நம்ப வைக்கப் பார்க்கிறார். அல்லது, தான் “அப்படிக் கூறவில்லை” என்று சூரத் நீதிமன்றத்தில் அவர் கூறியது உண்மை என்று நம்மை நம்ப வைக்கப்பார்க்கிறாரா? அரசையும் பிரதமரையும் அவர்களது ‘தவறான செயல்களுக்காக’ கேள்வி கேட்பதில் உறுதியாக இருக்கும் ஒரு தேசியத் தலைவராக, அரசியல் நாகரிகம் மற்றும் உண்மைகளைப் பற்றிக் கவலைப்படாமல், தான் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று நம்மை நம்ப வைக்க முயற்சிக்கிறாரா?

நடக்கும் கூத்துகள் அனைத்தையும் வேறோர் அரசியல் கோணத்தில் பார்க்கலாம் - உலகெங்கிலும் அரசியலுக்குப் பல கோணங்கள் உள்ளன! இந்தக் குற்ற உறுதியையும் சிறைத் தண்டனையையும் இந்திய பாராளுமன்றச் செயலகம் தகுதி நீக்க உத்தரவைப் பிறப்பித்த வேகத்தையும் பார்த்தால், பொது மக்களின் இரக்கத்தைப் பெற அரசியல் ரீதியாக ராகுலுக்கு உதவலாம். வரும் மாதங்களில், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் களத்தில், இந்திய அரசியலில், மோடியை வெளிப்படையாக எதிர்த்தவர் என்ற அங்கீகாரம் இவருக்குக் கிடைக்கலாம். இந்த நீதிமன்றத் தீர்ப்புக்கும், எம் பி தகுதி நீக்கத்துக்கும் முன்பு வரை, சமூக ஊடகங்களில் வேடிக்கை மீம்களாக மட்டுமல்லாமல், முக்கிய பெரிய செய்தி ஊடகங்களில்கூட இவரது அரசியல் பேச்சுகள் ஒரு நகைச்சுவையாகவே பார்க்கப்பட்டு வந்தன. இந்த விவகாரத்தில் எனது எண்ணம் என்னவென்றால், ‘ஆம், ராகுலும் காங்கிரஸும் பெறப்போகும் வாக்குகள் சற்றே அதிகரிக்கலாம், ஆனால், மோடி மூன்றாவது முறையாகப் பிரதமராவதைத் தடுக்கும் அளவுக்கு நிச்சயம் இல்லை’ என்பதே.

எனினும், இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, இதை ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய வீழ்ச்சி என்றும் இணைந்து பாஜகவை எதிர்க்க வேண்டும் என்று உறுதிபூணுவதாகவும் குரல் கொடுக்க வைத்துள்ளது. மற்றொரு பக்கம், இந்தச் சவாலை எதிர்கொள்ள பாஜக தலைமை தயாராக இருப்பதாகவே தெரிகிறது. காரணம், எதிர் தரப்பில் குறைந்த பட்சம் நான்கு பிரதமர் வேட்பாளர்கள் இருக்கிறார்கள் - பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் மற்றும் நோயுற்றிருந்தாலும் மஹாராஷ்டிராவின் வலிமையான தலைவராகக் கருதப்படும் ஷரத் பவார். இவர்களில், மற்ற தலைவர்கள் மோடி அரசின் ‘பழிவாங்கும் அரசியல்’ பற்றித் தீவிரமாகக் கருத்துகளை வெளியிட்டு வரும் நிலையில், நிதிஷ் குமாரின் மௌனம் கவனத்தை ஈர்க்கிறது.

இந்திய அரசியலில் பறக்கும் அனல் குறித்த மரத்தன் உரையாடலை நிறைவு செய்யும் முன்னர், ஒரு சிறிய தகவலையும் கருத்தையும் பகிர விரும்புகிறேன். ராகுலின் காங்கிரஸ் உள்ளிட்ட 14 எதிர்க்கட்சிகள் வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றத்தில் கூட்டாக ஒரு மனுவைச் சமர்ப்பித்துள்ளன. மத்திய விசாரணை அமைப்புகளான மத்திய புலனாய்வுத் துறை - சிபிஐ (Central Bureau of Investigation), அமலாக்கத்துறை (Enforcement Directorate) ஆகியவற்றைத் தனக்கு எதிரான குரல்களை ஒடுக்கப் பயன்படுத்தவதாக மத்திய அரசின் மீது குற்றம் சாட்டுகிறது இந்த மனு. அரசியல் எதிரிகளைக் கைதுசெய்வதற்கு முன்னும் பின்னும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை வகுக்குமாறும் நீதிமன்றத்திடம் முறையிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 5 அன்று இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தலைமை நீதியரசர் சந்திரசூட் ஒப்புக்கொண்டுள்ளார்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# ஆட்சிமுறை சர்வதேச நாணய நிதியத்தின் 'ராடருக்குள்' வரும் முதல் ஆசிய நாடாக இலங்கை



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை அரசாங்கம் கடந்த செப்ரெம்பரில் சர்வதேச நாணயநிதியத்துடன் கண்ட உடன்பாட்டுக்கு அதன் நிறைவேற்று சபை ஏழு மாதங்களுக்கு பிறகு கடந்தவாரம் (மார்ச் 20 ) அங்கீகாரம் வழங்கியதையடுத்து விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதியாக (Extended Fund Facility) 300 கோடி அமெரிக்க டொலர்கள் கடனுதவி கிடைக்கிறது.

நான்கு வருட காலத்தில் எட்டு தவணைகளில் வழங்கப்படவிருக்கும் இந்த கடனுதவியின் முதல் தவணைக் கொடுப்பனவு 30 கோடி 30 இலட்சம் டொலர்கள் உடனடியாகவே கடந்த வாரம் கிடைத்தது. இதில் 12 கோடி 10 இலட்சம் டொலர்கள் இந்தியாவிடம் இருந்து பெற்ற தொடர் கடனை (Credit Line) திருப்பிச் செலுத்துவதற்கான முதல் தவணைக் கொடுப்பனவுக்கு பயன்படுத்தப் படும் என்று அரசாங்கம் அறிவித்தது.



பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு முற்றுமுழுதாக நாணய நிதியத்தின் இந்த கடனுதவியை நம்பியிருக்கும் அரசாங்கம் ஒரே குதூகலத்தில் இருக்கிறது. நிறைவேற்று சபை உடன்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கிய செய்தி வெளியான உடனே கொழும்பில் அரசாங்க ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினார்கள். இவர்கள் பெரும்பாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்களே என்று கூறப்படுகிறது. கட்சியின் தலைமையகம் சிறிகோத்தாவின் முன்பாகவும் பட்டாசுகள் வெடித்தன.

வெளிநாட்டு கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை பிரகடனம் செய்து பிறகு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி கிடைக்கப்பெற்ற வேறு எந்தவொரு நாட்டிலாவது பட்டாசு வெடித்து கொண்டாட்டங்கள் இடம்பெற்றிருக்குமோ தெரியவில்லை.

உள்நாட்டுப்போரில் அரசாங்கப் படைகள் விடுதலை புலிகளை வெற்றி கொண்ட பிறகு ராஜபக்சாக்களிடம் காணப்பட்டதைப் போன்ற குதூகலத்தை "பொருளாதாரப் போரை" வெற்றி கொண்டவராக தன்னை காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் இப்போது காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை இனிமேலும் வங்குரோத்து அடைந்த நாடாக கணிக்கப்படமாட்டாது. தனது கடனை மறுசீரமைக்கக் கூடிய ஆற்றல் கொண்ட நாடு என்று இலங்கையை நாணய நிதியம் உறுதிப்படுத்தியிருக்கிறது. இதையடுத்து வழமையான பொருளாதார நடவடிக்கைகளை தொடரக்கூடியதாக இருக்கும் என்று நிறைவேற்று சபையின் அங்கீகாரம் கிடைத்த உடனடியாகவே விக்கிரமசிங்க அறிவித்தார்.

நாணய நிதியத்தின் கடனுதவி முற்றிலும் புதியதொரு யுகத்துக்குள் பிரவேசிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பை இலங்கைக்கு வழங்குகின்றது என்பது போன்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் முயற்சிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. கடன் மறசீரமைப்பு மாத்திரமல்ல நாட்டின் எதிர்காலமே நாணய நிதியத்துடனான உடன்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது என்று கூறும் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை இந்த உடன்பாட்டை கைவிட்டால் இலங்கைக்கு மீட்சி இல்லை என்ற நிலைப்பாட்டை கொண்டவராக இருக்கிறார் என்பது தெளிவானது.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உடன்பாட்டை சமர்ப்பித்து விசேட உரையாற்றிய ஜனாதிபதி ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மேலதிகமாக பல சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதி செயற்திட்டத்தின் மூலமாக புதியதொரு நிதிக்கலாசாரம் உருவாக்கப்படும் என்றும் கூறினார். இந்த உடன்பாட்டுடன் மாத்திரம் இலங்கை திருப்திப்பட்டுவிட முடியாது. இது முடிவு அல்ல. இன்னொரு நீண்ட பயணத்தின் தொடக்கம் என்று அவர் பிரகடனம் செய்தார்.

**வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்த நாடு இன்னொரு கடனுதவியைப் பெற்றிருக்கிறது. இதை தவிர அரசாங்கத்துக்கு வேறு வழியில்லை என்பதே யதார்த்தம்.**

நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே அதன் கடனுதவி கிடைக்கப்பெற்றிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் செயற்பாடுகளையே அரசாங்கம் "பொருளாதார சீர்திருத்தங்கள்" என்று சொல்கிறது.

விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பட்ஜெட் மற்றும் 2023 பட்ஜெட் மூலமாக ஏற்கெனவே நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள் கணிச மானளவுக்கு முன்னெடுக்கப்பட்டிருக் கின்றன. இவற்றின் மூலமாக அதிகரிக் கப்பட்ட நேரடி வரிகளும் மறைமுக வரிகளும் சேவைகள் கட்டணங்களும் ஏற்கெனவே மக்களுக்கு பெரும் சுமை யாக இருக்கின்றன. பொருளாதார சீர்திருத்தங்கள் என்று கூறிக்கொண்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலில் அரசாங்கம் வரும் நாட்களில் முன்னெடுக்கப்போகும் நடவடிக்கைகள், வானளாவ உயர்ந்திருக்கும் வாழ்க்கைச் செல வின் சுமையில் இருந்து விடுபடுவதற்கு கிடைக்கப் பெற்றிருக்கும் கடனுதவியின் மூலம் நிவாரணங் களை எதிர்பார்த்திருக்கும் மக்க ளுக்கு ஏமாற்றத்தை தரக் கூடாது.



வரும் நாட்களில் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்வு, எரிபொருட்கள் உட்பட அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் குறைப்பு தொடர் பில் அரசாங்கம் தெளிவான சில சமிக்ஞைகளை காட்டியிருப்பது வரவேற்கத்தக்கது.

தற்போதைய தடவையுடன் சேர்த்து இலங்கை இதுவரையில் நாணய நிதியத்தை 17 தடவைகள் நாடியிருக்கிறது. முன்னைய சந்தர்ப் பங்களில் காணப்பட்ட உடன்பாடுகளின் நிபந்தனைகளை இலங்கை அரசாங்கங்கள் ஒருபோதும் முற்றாக நிறைவேற்றவில்லை. அதனால் கடனுதவியின் முழுத்தொகையையும் அந்த அரசாங்கங்களினால் பெறமுடியவில்லை.

நாணய நிதியத்துடனான உடன்பாடுகளை மதிப்பதில்லை என்ற ஒரு கெட்ட பெயர் இலங்கைக்கு இருந்தது. ஆனால், முதற்தடவையாக தற்போதைய அரசாங்கம் முழு நிபந்தனைகளையும் நிறை வேற்றியிருக்கிறது என்று கடந்த வாரம் அமைச்சரவை பேச்சாளரான பந்துல குணவர்தன கூறினார்.

மக்களின் அதிருப்தியை சம்பாதிக்கக்கூடிய கடுமையான தீர்மானங்களை எடுக்கத் தயங்கிய காரணத்தினால் கடந்த காலத்தில் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கங்கள் தவறியிருக்கக் கூடும்.

ஆனால், தற்போதைய அரசாங்கத்திடம் அத்தகைய தயக்கம் எதையும் காணவில்லை. முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் முறைகேடுகள் மற்றும் தவறான பொருளாதார முகாமைத்துவம் காரணமாக இலங்கை அதன் வரலாற்றில் இதுவரை காணாத பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமானால் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக ஏற்றுக்கொணடு நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று விக்கிரமசிங்க அரசாங்கம் மக்களை ஒரு விதமான "பணயக்கைதிகளாக" வைத்திருக்கிறது.

வழமையாக அமெரிக்கா மற்றும் மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற பல்தரப்பு நிதி நிறுவனங்களை நாடுவதை எதிர்க்கின்ற ஜனதா விமுக்தி பெரமுன போன்ற இடது சாரி கட்சிகளினால் கூட நாணய நிதியத்தை அரசாங்கம் நாடுவதை எதிர்க்க முடியவில்லை. இது நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றுவ தனால் ஏற்படக் கூடிய எதிர்கால பாதக விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் அரசாங்கம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வசதியான சூழ் நிலையை உருவாக்கிவிட்டது. உருப்படியான மாற்றுத் திட்டங்களை எதிரணியினால் முன்வைக்க முடியாமல் இருப்பது அரசாங்கத்துக்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

பொருளாதார மீட்சிக்கான சகல நடவடிக்கைகளும் நாணய நிதியத்தின் மூலோபாயத் திட்டத்தின் பிரகாரமே முன்னெடுக்கப்படவிருக்கின்றன என்பது வெட்ட வெளிச்சமானது. நிபந்தனைகளில் சிலவற்றை அரசாங்கம் இன்னமும் பகிரங்கமாக கூறவில்லை என்ற குற்றச்சாட்டும் எதிரணி கட்சிகளிடமிருந்து வருகிறது.

அதேவேளை, கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களின் ஆசிரியர்களை சந்தித்துப் பேசிய விக்கிரமசிங்க தெற்காசியாவிலேயே மிகவும் சிறந்த ஊழல் தடுப்புச்சட்டமொன்றை பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றுவதற்கு தனது அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்று அறிவித்தார். ஆனால், தற்போதைய பாராளுமன்றத்தை வைத்துக்கொண்டு ஊழலுக்கு எதிராக உருப்படியான நடவடிக்கைகளை ஜனாதிபதியினால் எடுக்கக்கூடியதாக இருக்கும் என்று மக்கள் நம்பமாட்டார்கள்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்று வரும்போது அண்மைய கடந்த கால பொருளாதாரக் குற்றங்களைச் செய்தவர்களை பொறுப்புக்கூற வைக்க வேண்டியது முக்கியமான விடயமாகும்.

ஆனால், கடந்த மாத தொடக்கத்தில் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைத்து கொள்கை விளக்க உரையை நிகழ்த்திய விக்கிரமசிங்க வங்குரோத்து நிலையடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்து நிலையுறுதிப் படுத்துவதே தனது முன்னுரிமைக்குரிய பணி என்றும் கடந்த கால பொருளாதாரக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் விவகாரத்தை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறியது ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற ஆதரவில் ஆட்சியை நடத்தும் அவருக்கு அது விடயத்தில் இருக்கும் சிக்கலை தெளிவாக உணர்த்துகிறது.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் ஆட்சிமுறைச் சீர்திருத்தங்களுக்கும் நாணய நிதியம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இதை இலங்கையை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்ததில் ஊழலுக்கும் தவறான ஆட்சி முறைக்கும் இருக்கும் பிரதான பங்கின் பின்னணியிலேயே நோக்கவேண்டும்.

ஆசியப் பிராந்தியத்தில் ஆட்சிமுறை நாணய நிதியத்தின் உன்னிப்பான கண்காணிப்பின் கீழ் வருகின்ற முதல் நாடாக இலங்கை இருக்கிறது என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இலங்கையில் நிலவும் ஊழல் முறை கேடுகளுக்கு எதிராக அரசாங்கம் மேற் கொள்ளப்போகும் நடவடிக்கைகளையும் ஆட்சிமுறைக் குறைபாடுகள் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் கண்காணித்து கிரமமான அறிக்கைளை நாணய நிதியம் வெளியிடும். இது உடன் பாட்டின் முக்கியமான ஒரு மைல்கல் என்று அதன் அதிகாரிகள் கூறியிருக்கி றார்கள். அந்த அறிக்கைகளைப் பொறுத்தே கடனுதவியின் அடுத்தடுத்த கட்ட கொடுப்பனவுகள் அமையக்கூடும். ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் ஆட்சி நிருவாகம் நாணய நிதியத்தின் 'ராடருக்குள்' வருகிறது. •

# மதவாதமும் மொழிவாதமும் இனவாதத்துடன் போட்டி!

பனங்காட்டான்

இலங்கை மக்கள் இருட்டினில் மட்டுமன்றி பசியுடனும் வாழப் பழக வேண்டுமென்று ஒன்பது மாதங்களுக்கு முன்னர் கூறப்பட்ட வேளையில், அதனைத் தன்னால் மாற்ற முடியுமென்ற அசட்டுத் துணிச்சலுடன் ஜனாதிபதியாகிய ரணில் விக்கிரமசிங்க தமது முதலாவது கண்டத்தைத் தாண்டியுள்ளார்.

இவரை ஜனாதிபதி கதிரைக்குக் கொண்டு வந்த 'வெள்ளை' நாடுகளின் ஆசீர்வாதமும், அவர்களின் ஆதரவில் இயங்கும் சர்வதேச நாணய நிதியம் தாராளமாக வழங்கியுள்ள பங்களிப்பும் இவரை நெஞ்சை நிமிர்த்தி தோள்களை உயர்த்தி தலைதூக்க வைத்துள்ளது.



ஆட்சியிலிருந்து பதவி துறந்தவர்களையும், நாட்டைவிட்டு ஓடிப்போனவர்களையும் ஒரு தடவை திரும்பிப் பார்க்க வைத்துள்ளார் ரணில் என்றும் சொல்லலாம். நான்கு வருடங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 333 மில்லியன் அமெரிக்கன் டாலர் இப்போது கிடைத்துள்ளது. இதனை எதிர்க் கட்சிகள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த மக்களுக்கு வயிறு குளிர வைத்துள்ளது சர்வதேச நாணய நிதியம். இந்தக் கடனுக்காக பல நிபந்தனைகளை ரணில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் எதிர்வரும் நாட்களிலும் மாதங்களிலும் வெவ்வேறு விதமான வரிகளை முதற்தடவையாக மக்கள் எதிர்கொள்ளவுள்ளனர்.

இருப்பினும், இப்போதுள்ள பொரு



ளாதார நெருக்கடிகளிலிருந்து சற்று விடுதலை பெறவும், இறக்குமதிகளை தாமதமின்றி மேற்கொள்ளவும், மேலும் பல நாடுகளிலிருந்து உதவி பெறவும் சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் கதவுகளை திறந்து விட்டிருப்பதால் எதிர்கட்சியினருக்கு பெரும் திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால், ரணிலைப் பாராட்டியே தீரவேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டை சர்வதேசத்துக்கு அடகு வைக்க வேண்டாமென்று எச்சரித்து வந்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ரணிலைப் பாராட்டியுள்ளார். அரசியல் ரீதியாக கருத்து வேற்றுமை இருந்தாலும் ரணிலின் வெற்றிக்கு பாராட்டுக் கூறியுள்ளார்.

எதிர்கட்சியின் பொருளாதார வல்லுனர் என வர்ணிக்கப்படும் ஹர்ஷ டி சில்வாவும் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனது பங்குக்கு பாராட்டியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தை எதிர்ப்பவர்களை நாட்டின் எதிரிகள் (துரோகிகள் என்று சொல்லவில்லை) என்று சாடியுள்ளார் எதிர் கட்சியின் சுயாதீன எம்.பியான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

நெஞ்சுக்குள் ஒன்றை மறைத்துக் கொண்டு இவர்கள் வழங்கிய பாராட்டை 'வஞ்சகப் புகழ்ச்சி' என்றுதான் கூறவேண்டும். கிடைத்துள்ள நிதி உதவியை மூலாதாரமாகப் பயன் படுத்தி வரப்போகின்ற அத்தனை தேர்தல்களிலும் ரணில் தலைமையிலான அணி வெற்றி பெறும் என்ற அச்சம் இவர்களிடம் உண்டு. ஆனாலும், பொது மக்கள் மத்தியில் தங்களுக்கு அவப் பெயர் வராமல் தடுக்கவே ரணிலை பாராட்டும் சூழ்நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஒருபுறத்தில் பாராட்டைத் தெரிவித்திருக்கும் இவர்கள், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் ஒவ்வொரு பக்கத்தையும், ஒரு வரிகளைக் கூட மறைக்காமல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென வேண்டி வருவதிலிருந்து இதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

1970ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 45 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, ஐந்து தடவைகள் பிரதமராக பதவிகளை வகித்த ரணில் ஒருமுறைகூட ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியாதுபோன



'ராசியில்லாத ராசா'.

கடந்த பொதுத்தேர்தலில் தாம் தோல்வி கண்டது மட்டுமன்றி தமது ஐக்கிய தேசிய கட்சிக்கும் படுதோல்வியை பெற்றுக் கொடுத்தவர் இவர். பிரித்தானியர் நாட்டைவிட்டு போனபின்னர் உருவான முதலாவது அரசாங்கத்தின் தேசிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சி முதன் முறையாக ரணில் தலைமையில்தான் படுதோல்வி கண்டது. இதற்குக் காரணம் ராஜபக்சக்கள் உருவாக்கிய பொது ஜன பெரமுன அல்ல. ஐக்கிய தேசிய கட்சியை உடைத்துக் கொண்டு பெரும் பான்மையினரை தம்மோடு இணைத்துக் கொண்டு புதிய கட்சியை உருவாக்கிய சஜித் பிரேமதாசவே முக்கிய காரணம்.

கடந்த பொதுத்தேர்தலில் இவரது கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் தேசிய பட்டியல் ஆசனமொன்று கிடைத்தது. பத்து மாதங்கள் பொறுத்திருந்து, 2021 யூன் 23ம் திகதி ரணில் நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு தேசிய பட்டியலே வழிவகுத்தது. அவ்வேளை, தமது எதிர்காலம் பற்றி பெரியளவில் கனவு கண்டிருக்க மாட்டார்.

2022 மே 31ஆம் திகதி உருவான அறகலய, மே மாதம் 9ஆம் திகதி மகிந்தவையும், யூன் 9ஆம் திகதி பசிலையும் அவரவர் பதவிகளிலிருந்து வெளியேற வைத்தது. யூலை 9ஆம் திகதி நாட்டைவிட்டுத் தப்பியோடிய கோட்டாபய ராஜபக்ச வெளிநாட்டிலிருந்தவாறு தமது பதவியை துறந்ததையடுத்து யூலை 13அல் ரணில் தற்காலிக ஜனாதிபதியா னார். 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தெரிவுக்கான போட்டியில் வெற்றி பெற்றார். முதன் முதலாக நாடாளுமன்றத்தால் தெரிவான ஜனாதிபதியானவர் இவரே.

கடந்த ஒன்பது மாதங்களில் ஒரு போதுமே பின்கதவு வழியாக இவர் நிய மனங்களைப் பெறவில்லை. இலங்கை அரசியல் யாப்பின்படியே எம்.பியாகி, பிரதமராகி, ஜனாதிபதியாகி - இப் போது தமது ஆயுட்காலம் முழுவதும் அப்பதவியை வகிப்பதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறார்.

மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து விலகியபோது எதிர்கட்சித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாசவை ஜனநாயக நியமங்களுக்கு உட்பட்ட வகையில் அப்பதவியை ஏற்குமாறு கோட்டாபாய கேட்டார். அச்சம் காரணமாக சஜித் மறுத்ததால் இப்பதவி ரணிலை நாடிச் சென்றது.

இப்போது அரசியல் காற்று வீசும் முறைமையைப் பார்க்கும்போது, ரணிலுக்குத் தேவையான பிராண வாயு போதியளவு கிடைத்து வருவது தெரிகிறது. சர்வதேச நாணய நிதியமே இதன் பிரதானி.

இது தொடர்பாக இரண்டு கருத்துகள் பொதுவெளியில் பகிரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை வங்குரோத்து நிலைக்குச் செல்கிறது என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரித்தது. அவ்வேளையில் நிதி அமைச்சராகவிருந்த பசில் ராஜபக்ச சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தபோது கோட்டாபய அதனை உதாசீனம் செய்ததாக அவரது அணியினர் சொல்கின்றனர். ஆதலால் இப்போது ரணிலுக்குக் கிடைத்த நிதி உதவிக்கு பசிலே வழிகாட்டியதாகக் கூறி அந்த வெற்றியை ரணிலிடம் இருந்து பறிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மறுதரப்பில், ரணிலின் சோதிட நம்பிக்கை பற்றி சஜித் பிரேமதாச வெளியிட்ட சுவைமிகு தகவல் ஒன்று பல மட்டங்களிலும் விமர்சிக்கப்படுகிறது. தமது தந்தை முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பிறந்த நாளான யூன் 23ஆம் திகதியை நல்வாய்ப்பு நாளென சோதிடம் பார்த்து, அந்தத் திகதியில் தேசிய பட்டியல் எம்.பியாக ரணில் பதவி ஏற்றதனாலேயே அவருக்கு சர்வதேச நாணய நிதி கிடைத்துள்ளது என்று சஜித் கூறியிருப்பது இந்த வருடத்துக்கான உச்ச நகைச்சுவை.


1989இல் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணசிங்க பிரேமதாச, பிரதமர் பதவிக்கு தகுதியானவர் எனவும், ஜே.ஆரின் வாரிசு எனவும் எதிர்பார்க்கப்பட்ட ரணிலை ஓரந்தள்ளிவிட்டு, அப்பதவிக்கு சப்பாணி அரசியல்வாதியான தபால் அமைச்சர் டி.பி.விஜேதுங்கவை நியமித்தார். பிரேமதாசவின் அகால மரணத்தின் பின்னர் ஜனாதிபதியான டி.பி.விஜேதுங்க, ஜே.ஆருக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் ரணிலை பிரதமராக்கியதே வரலாறு. இதனைத் தெரிந்திராத சஜித், தமது தந்தையின் பிறந்த நாளை ரணில் தமக்கான நல்வாய்ப்பு நாளாக பார்த்ததாக் கூறியது, எந்தவகையிலும் ஒப்புடைமையானது அல்ல.

அதேசமயம் சஜித்தின் இந்தக் கூற்று, ரணிலை இனி அசைக்க முடியாத ஒரு தலைவராக அவர் நோக்குவதை வெளிப்படுத்தியுள்ளது என்பது மட்டும் உண்மை.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான எதிர்காலம், 13ஆம் அரசியலமைப்பு என்னவாகுமென்ற எதிர்பார்ப்பு என்பவைகளை மறக்கடிக்க வைக்கும் சூழலை பொருளாதார சீரமைப்பு ஏற்படுத்தி வருகிறது. இதற்கூடாகவும், உள்ளூராட்சி தேர்தல் நடத்த வேண்டுமென வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்தித்து சஜித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனப்பிரச்சனைத் தீர்வு, போர்க்குற்றத்துக்கான பொறுப்புக்கூறல், சர்வதேச பொறிமுறையுடனான நீதி விசாரணைகள் பற்றி ஜெனிவாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்போதும், தமிழ் மக்கள் கேட்கும்போதும் நாட்டின் இறையாண்மையை முன்னிறுத்தி எதிர்ப்புக் காட்டுவது சிங்கள அரசியல்வாதி

**கத்தோலிக்கர்களின் புனித தலமான கச்சதீவில் குட்டிப் புத்தர் அரசங்கன்றுடன் முளைக்கிறார். இஸ்லாமியர்களின் மத்ரஸா பாடசாலைகளை தடைசெய்ய வேண்டுமென்கிறார் முன்னாள் கடற்படைத் தளபதி. இந்துக்களின் மத அடையாளங்கள் தமிழர் தாயகத்தில் 'சட்டப்படி' அழிக்கப்படுகின்றன.**




களின் தொடர் செயற்பாடு. ஆனால், உள்நாட்டில் - அதிலும் அடிமட்டமான உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்த ரணில் அரசுக்கு நெருக்கடி கொடுக்குமாறு வெளிநாட்டுத் தூதுவர்களை கேட்கும்போது தங்களின் இறையாண்மைக்கு என்னாச்சு என்று இவர்கள் நினைப்பதில்லையா?

ஜெனிவா அரங்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டது போன்று மதவாதம் என்பது இப்போது நாட்டில் தலைவிரித்தாடுகிறது. இந்துக்கள் மட்டுமன்றி கத்தோலிக்கர்களும் இஸ்லாமியர்களும்கூட இப்போது பாதிக்கப்படுகின்றனர். கத்தோலிக்கர்களின் புனித தலமான கச்சை தீவில் குட்டி புத்தர் அரசங்கன்றுடன் முளைக்கிறார். மத்ரஸா பாடசாலைகளை தடைசெய்ய வேண்டுமென்கிறார் முன்னாள் கடற்படை தளபதியான இந்நாள் எம்.பி. சரத் வீரசேகர.

பொருளாதாரத்தை மீட்பதாக ரணிலின் அரசாட்சி சிங்கள தேசத்தை முழுமையாக கையகப்படுத்தும் வேளையில் இனவாதத்தை விஞ்சியதாக மதவாதமும் மொழிவாதமும் வேகமெடுக்கிறது. இது சகல சிறுபான்மை இனங்களின் எதிர் காலத்தையும் கேள்வி நிலைக்குள் தள்ளுகிறது.

# சர்வதேச நாணய நிதியக் கடனும் இலங்கை எதிர்நோக்கும் சவால்களும்



கந்தையா
அருந்தவபாலன்

மறுசீரமைப்புக்காக கடன்வழங்குநர்களின் ஒப்புதலைப் பெறுவதற்கான விட்டுக்கொடுப்புகள், கட்டமைப்பு மாற்றங்ளுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாடு, அதனை உறுதிப்படும் வகையில் புதிய நாணயங்கள் அச்சிடாமை, வருமான வரி உயர்வு,எரிபொருள், மின்சாரம்போன்றவற்றின் விலை உயர்வு போன்ற சில முன்னெடுப்புக்கள் எனப் பலமாதக் காத்திருப்புக்களின் பின் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 'நீடித்த நிதி வசதி' திட்டத்தின்கீழ் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கியுள்ளது. தொகையளவில் இது குறைந்ததொன்றாக இருப்பினும் இதன்மூலம் சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களுக்கான நம்பிக்கைக்குரிய ஒரு நாடாக இலங்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளைப் பொறுத்து கையறுநிலையைப் பிரகடனப்படுத்தியிருந்த இலங்கையை மீளவும் கடன் வழங்குநர்களின் நம்பிக்கைக்கான காப்புறுதியை இது வழங்கியுள்ளது. இதன்மூலம் புதிய கடன்களைப் பெறவதற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளதுடன் வர்த்தகம் மற்றும் முதலீடுகளில் சாதகமான போக்குகளை எதிர்பார்க்கமுடியும். இவ்வகையில் சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதிவசதியின் தன்மை, அதற்கான நிபந்தனைகள், அதன் மூலம் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பாக ஆராய்வதே இப்பத்தியின் நோக்கமாகும்.

சர்வதேச நாணய நிதியம் இரண்டாம் உலகப்போரினால் பாதிப்படைந்த சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்காக்கவும் மேம்படுத்தவும் 1944ஆம்ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் முதன்மை நோக்கம் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதாக இருப்பதால் உறுப்புநாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்த்தல், வெளிநாட்டுச் சொத்துக்களைப் பேண உதவுதல், வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களையும் நாணயக் கொடுக்கல் வாங்கல்களையும் ஒழுங்குபடுத்துதல், இந்நோங்கங்களுக்காக நிதிவசதி அளித்தல் போன்றன அதன் குறிக்கோள்களாக உள்ளன. இன்று 190 உறுப்பு நாடுகளைக் கொண்டியங்கும் இந்நிறுவனம் அந்நாடுகளுக்கு 35 வகையான நிதிவசதிகளை வழங்கும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இதற்காக அந்நிறுவனம் 1 றில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கி வைத்துள்ளது.

இந்நிதி நிறுவனம் வழங்கிவரும் 35 வகையான நிதிவசதிகளில் ஒன்றுதான் இலங்கை தற்போது பெற்றுள்ள நீடித்த நிதி வசதி கீழான கடனாகும். இது கடன் எனப்பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் சர்வதேச நாணய நிதிய அகராதியில் அது உறுப்பு நாடுகளுக்கான 'சிறப்பு எடுப்பனவு உரிமை' (Special Drawing Rights-SDR) என்றே கருதப்படும். இலங்கை 1965-2016 காலப்பகுதியில் 16 தடவைகள் இந்நிதியத்திடமிருந்து கடன்களைப் பெற்றுள்ளது. இக்கடன்கள் மூன்று வகையான கடன் திட்டங்களின் கீழ் பெறப்பட்டுள்ளன.

சிறப்பு எடுப்பனவு உரிமை - தனது உறுப்பு நாடுகளின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பைப் பேணுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தினால் உருவாக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுச் சொத்து. இது ஒருநாணயமன்று. ஆனால் ஒருநாணய அலகாகக் கருதப்படும். இன்று ஒரு ஞனுசு இன் பெறுமதி அமெரிக்கடொலர், யூரோ, யுவான், யென், ஸ்ரேலிங் பவுண் ஆகிய ஐந்து நாணயங்களின் கூடைப் பெறுமதியாகக் கணிப்பிடப்படுகிறது. தற்போது 1SDR=1.33 $. கணக்கீட்டு முறையில் இச்சொத்தை அடிப்படையாகக்கொண்டு ஒரு நாடு தனக்குத் தேவையான வெளிநாட்டு நாணயத்தைப் பெறமுடியும்.

1. நிலையியல் ஏற்பாடு
2. கட்டமைப்புச் சீராக்கத்துக்கான நிதிவசதிக் கடப்பாடு
3. நீடித்த நிதி வசதி

நீடித்த நிதி வசதியின் கீழ் தற்போது இலங்கைக்கு ஆறாவது தடவையாக சுமார் 2.9 பில்லியன் சிறப்பு எடுப்பனவு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட 3.3பில்லியன் அமெரிக்க டொலருக்குச் சமமான தொகையாகும்.

நீடித்த நிதிவசதி என்பது உறுப்பு நாடொன்றின் பொருளாதாரக் கட்டமைப்புப் பலவீனங்களால் ஏற்படும் இடைக்காலச் சென்மதி நிலுவைப் பிரச்சினையிலிருந்து அந்நாடு மீள்வதற்கான நீண்டகால நிகழ்ச்சித்திட்ட நிதியுதவியாகும். மீளச்செலுத்தும் வசதி பத்து ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம். இதனால் இந்நிதியுதவி படிமுறையான கட்டமைப்பு மாற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது தேவையான கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சுட்டிப்பான நிபந்தனகளுடன் வழங்கப்படுகிறது. இந்தவகையில் இக்கடனுக்காக எதிர்காலத்தில் இலங்கையால் நிறைவேற்றப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் விடயங்கள் அல்லது நிபந்தனைகள் பொருளாதாரக் கட்மைப்பு மாற்றத்துக்கான முக்கியமான ஐந்து தூண்களாகக் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

1) சமூகநலன் வலைப்பின்னலைக் கொண்ட உறுதியான இறைக்கொள்கையைக் கடைப்பிடித்தல். அதாவது அவசியமான சமூகநல வசதிகள் பேணப்படும் அதேவேளை அரசானது அதன் செலவுகளை ஈடுசெய்வதற்கான வருமானத்தைத் திரட்டவேண்டும். குறிப்பாக அரச வர்த்தக முயற்சிகளின் வருமானம் அவற்றின் செலவுகளை ஈடு செய்யும் வகையிலான விலைகளைக் கொண்டிருக்கவேண்டும். எரிபொருட்களின் விலைகள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டமை இவ்வகையானதே.

2) அரச படுகடனை மீள நிலைப்படுத்துவதுடன் கடன் மறுசீரமைப்பையும் மேற்கொள்ளுதல்.

3) உள்நாட்டு விலை மட்டத்தையும், வெளிநாட்டு நாணய மாற்றுவீதத்தையும் (ரூபாவின்உள்நாட்டு, வெளிநாட்டுப் பெறுமதிகள்) உறுதிப் படுத்துவதற்கான நீடித்த பல்தர அணுகுமுறைகள் மூலம் முதலீடுகளையும் பொருளாதார வளர்ச்சியையும் மேம்மபடுத்துவதுடன் அவசிய இறக்குமதிகளுக்கான இயலுமையை அதிகரிக்க வேண்டும்.

4) நாட்டின் நிதித்துறையை (வங்கிகள், பிற நிதிநிறுவனங்கள், பங்குச் சந்தை.)பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளைக் கைக்கொள்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில்அவற்றின் வகிபாகத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5) நாட்டில் புரையோடிப் போயுள்ள ஊழல் மூலங்களைக் களைவதற்கான உறுதியான கட்டமைப்பு மாற்றங்கள் உருவாக்கப்படவேண்டும்.

மேலெழுந்தவாரியாக நோக்கும்போது இந்நிபந்தனைகள் சாதாரணமானவையாகத் தோன்றினாலும் இவற்றை நிறைவேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கும்போது நாட்டில் பல்வேறு பிரச்சினைகளும் அரசாங்கத்துக்கு நெருக்கடிகளும் தோன்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. இறுக்கமான மாற்றங்கள் பல்வேறு வசதிகளையும் சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற தரப்புகளுக்கு பாதகமாக மாறக்கூடும். இவை ஏலவே பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள ஆட்சியாளர்க்கு மேலும் நெருக்குதல்களை தரக்கூடும். இதனால் எதிர்க்கட்சிகள் பலமடைவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் உறுதியான இறைக்கொள்கை என்பது அரச வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை இயன்றளவு குறைப்பதாகும். சென்ற ஆண்டின் இறுதியில் இப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 வீதமாக மதிப்பிடப் பட்டுள்ளது. இது மிக உயர்வான மட்டமாகும். இதனைக் குறைப்பது என்பது அரச வருமானத்தை உயர்த்துவதிலும் செலவைக்குறைப்பதிலும் தங்கியுள்ளது. வருமானத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மக்கள் மீதான சுமையைக் கூட்டும் அதேவேளை செலவுக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மக்களுக்கான சமூக நலப்பணிகள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இதற்கான உபாயங்களில் ஒன்றாகவே நட்டத்தில் இயங்கும் அரசநிறுவனங்களை அல்லது அதன் பங்குகுகளை தனியார் மயப்படுத்தும் ஏற்பாடுகள் விரைவுபடுத்தப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக ஏழு அரச நிறுவனங்களைத் தனியாருக்கு வழங்குவதற்கு அண்மையில் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள் சிறிலங்கள் எயர், சிறிலங்கா ரெலிகொம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இக்கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான லிற்றோ எரிவாயு நிறுவனம், லங்கா ஹொஸ்பிடல் போன்ற முக்கிய நிறுவனங்களும் அடங்குகின்றன. இலங்கையில் பெரும்பாலான அரச நிறுவனங்கள் நட்டத்தில் தொடர்ந்து இயங்கிவருவதால் அதற்காகப் பெருந்தொகையை அரசு மாற்றல்களாக ஆண்டுதோறும் வழங்கவேண்டியுள்ளது. அரசின் வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்கறைக்கு இது முக்கியவொரு காரணியாக உள்ளது.

உண்மையில் இந்நிறுவனங்களின் நட்டத்துக்கு அங்கு காணப்படும் மிகை ஊழியர்கள், வினைத்திறனின்மை, மிகைக் கொடுப்பனவுகள், ஊழல், அரசியல் தலையீடுகள் போன்றன பிரதான காரணங்களாக உள்ளன. இக்குறைபாடுகளைக் களைவதற்குப் பதிலாக தனியாரிடம் வழங்குவதுஅரசுக்கு இலகுவான காரியமாக உள்ளது என்பதற்கு மேலாக சர்வதேச நாணய நிதியமும் அதனையே விரும்பும். ஆனால் இங்கு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் மட்டுமன்றி இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களும் தனியார் மயப்படுத்தப்படுவதைக் கொண்டு அரசாங்கத்துக்கும் நாணய நிதியத்துக்கும் வேறு நோக்கங்களும் இருக்குமா என ஐயுற வேண்டியுள்ளது. இவ்வரிசையில் அடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை போன்றனவும் தனியாரிடம் செல்வதற்கான வாய்ப்புகளை மறுக்கமுடியாது. இந்நடவடிக்கைகள் ஏலவே தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கி அரசாங்கத்துக்குக் கால அவகாசம் வழங்கியுள்ள ஊழியர்களை மேலும் இறுக்கமடையச் செய்யும். அதேவேளை அதற்கெதிரான அரசின்செயற்பாடுகளும் கூர்மையடையும். இவை நாட்டில் அசாதாரண நிலைமைகள் தோன்ற வழிவகுக்கலாம். மறுபுறத்தில் நிறுவனங்களில் ஆட்குறைப்புச் செய்தல், புதிய அரச நியமனங்களை வழங்காதிருத்தல், பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள், சலுகைகள் என்பன மட்டுப்படுத்தப்படுதல் அரசின் மீதான அதிருப்திகளை மேலும் அதிகரிக்கும். நாட்டில் வேலையின்மை அதிகரிக்கும். குறிப்பாக நான்கு வருடங்களாக நியமனம் வழங்கப்படாதுள்ள பட்டதாரிகளின் பிரச்சினை பெரிதாகத் தலைதூக்கும். இதேவேளை புதிய அமைச்சர் நியமனங்கள் தொடர்பாக வரும் செய்திகள் உண்மையாகுமெனில் ஜனாதிபதி மீது வளர்ந்து வரும் நன்மதிப்பு கேள்விக்குள்ளாகும். இவை யாவும் எதிர்கட்சிகளின் போராட்டுத்துக் வலுச்சேர்க்கும்.

அரசாங்கம் எதிர் நோக்கவேண்டியுள்ள இன்னொரு முக்கிய சவால் ஊழலை ஒழிப்பதற்கான கட்டமைப்பு மாற்றங்களை ஏற்றபடுத்த வேண்டியிருத்தல். ஊழலை ஒழிப்பதற்கு ஆசியாவிலேயே சிறப்பான கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான சட்டம் ஒன்றை கொண்டு வரப்போவதாக அண்மையில் ஜனாதிபதி கூறியிருந்தார். நடைமுறையில் இது எவ்வளவு சாத்தியம் என்பதை எதிர்காலமே தீர்மானிக்கும். ஏனெனில் இலங்கையில் ஊழல் செய்வது அமைச்சர்கள் தொடங்கி அடிமட்டப் பணியாளர்வரை இரத்தித்திலும் சதையிலும் ஊறிய ஒன்றாகிப் போய்விட்டது. ஆளுந்தரப்பிலோ அன்றி எதிர்த்தரப்பிலோ உள்ள அரசியல்வாதிகளில் ஊழல் கறைபடியாத கையுள்ளவர்களை காண்பது அரிதாகிவிட்டது. இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அரசமட்டத்தில் நிலவிய பாரிய ஊழலும் முக்கிய காரணம் என்பதை சர்வதேச நிறுவனங்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. சட்டத்தை ஆக்குபவர்களும் அதனை அமுல்படுத்துவர்களுமே ஊழலில் அதிகம் ஈடுபடுகின்றனர் என்பது கசப்பான உண்மை. இவ்வாறான ஒரு நிலையில் ஊழலுக்கு எதிரான சட்டங்களை ஆக்குவதால் மட்டும் ஊழலை ஒழித்துவிட முடியாது. அச்சட்டங்கள் நாட்டு மக்களையும் சர்வதேச நாணய நிதியத்தையும் ஏமாற்றமட்டுமே உதவும். நாட்டு மக்களிடையே ஊழலுக்கெதிரான மனப்பாங்கும் பண்பாடும் வளராத வரை சட்டங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களே.

இலங்கை கடன்பொறிக்குள் ஆழமாகச் சிக்கியிருக்கும் ஒருநாடு. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது அரசபடுகடன் சுமார் 125 வீதமாக உள்ளது. இதன் கருத்து ஒருஆண்டுக்கான நாட்டின் மொத்த வருமானத்தை கொடுத்தால் கூட அக்கடனை அடைக்க முடியாது என்பதாகும். இதிலிருந்து நாடு மீள்வது அவ்வளவு இலகுவான காரியமன்று.

இவ்வாறான ஒரு நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மூலம் மூச்சு விடுவதற்கான ஒரு சிறு வாய்ப்பே வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் நாடு எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தூரநோக்குடன் உறுதியாக இருக்கவேண்டும். பொருளாதார உறுதிநிலையை அடைவதற்கு அரசியல் உறுதிநிலை அடிப்படையானது. அரசியல் உறுதியை அசைப்பதற்கு எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும்நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும். இதனை ஒவ்வொரு குடிமகனும் உணரவேண்டும். குறிப்பாக அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்வது மட்டுமல்ல முன்னோடியாகவும் செயற்பட்டு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். மாறாக குறுகிய அரசியல் நோக்கில் செயற்படுவார்களேயானால் பின்னர்ஆரோக்கியமான அரசியல் செய்வதற்கான இடமாக இலங்கை இருக்குமா என்பது கேள்விக்குறியே.

# பௌத்த ஆக்கிரமிப்புக்குள் சிக்கிக்கொண்டது கச்சதீவு



கச்சதீவில் மர்மமான முறையில் கடற்படையினரால் பாரிய பௌத்த விகாரையொன்று கட்டப்பட்டு, இரகசியமான முறையில் பௌத்தமயமாக்கல் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தற்போது பகிரங்கப்படுத்தப்பட் டுள்ளது.

கச்சதீவு இலங்கை இந்திய பக்தர்கள் வருடம் தோறும் ஒன்று கூடி அந்தோனியாரை வழிபட்டு செல்லும் ஒரு புனித பூமியாக காணப்படும் நிலையில், தங்போது அங்கு இரகசியமாக புத்தர் சிலை வைத்து பொளத்தமயமாக்கல் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை இந்திய-இலங்கை உறவில் விரிசலை ஏற்படுத்தக்கூடும் எனவும் சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கும் சிறிலங்கா படையினர் கச்சத்தீவையும் விட்டுவைக்காது அங்கேயும் பாரிய புத்தர் சிலையொன்றை பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், இது வரை காலமும் இந்திய இலங்கை பக்தர்கள் மட்டுமே திருவிழாவில் கலந்துகொண்டிருந்த நிலையில், இந்த வருடம் புதிதாக பௌத்த பிக்குகள் குழு ஒன்றும் கச்சதீவுக்கு சென்றிருந்தைமையும் தற்போது, பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

மேலும் கச்சதீவில் 5 முதல் 10 கடற்படையினரே கடமையில் இருக்கின்ற நிலையில், இவ்வாறு பிரமாண்டமாக புத்தர் சிலை கட்டியிருப்பது சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவில் அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்கவேண்டும் என்றும், அதனைத் தவிர நிரந்தரமான கட்டடங்கள் எவையும் அமைக்கக்கூடாது எனவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வாறான நிலையில், அங்கு கடற்படையினருக்கான இருப்பிடம் கூட நிலையானதாக அமைக்கப்பட்டிருக்கிறது .

இது ஒப்பந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். ஆனால் அந்த ஒப்பந்தத்தையும் மீறி தற்போது நிரந்தரமான பௌத்தமயமாக்கலுக்கான ஒரு திட்டமாக பாரியளவில் புத்தர் சிலை ஒன்று இரகசியமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, அந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதியை சூழ மிக உயரமான கம்பிகள் பாவித்தும் பனை ஓலை வேலி அமைத்தும் மிக மிக இரகசியமாகக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அண்மையில் நடைபெற்ற திருவிழாவின்போதும் அங்கு சென்ற கிறிஸ்தவ மத குருமாரையோ, பக்தர்களையோ மற்றும் ஊடகவியலாளர்களையோ குறித்த இடத்துக்கு அருகில் கூட செல்ல கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை, கச்சதீவு பகுதியில், கடற்கரையை சூழவும் காட்டு மரங்களே வளர்ந்திருந்தன. ஆனால் தற்போது, கடற்படையினர் அரச மரங்களை கொண்டுவந்து குறித்த பகுதியில் வைத்துள்ளனர் என்பதும் அப்பட்டமாகத் தெரிகின்ற ஒரு விடயம்.

“கச்சதீவு இலங்கைக் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கச்சதீவை இந்தியா, இலங்கைக்கு வழங்கும்போது அந்தோனியார் ஆலயத்துடனேயே வழங்கியது.

இவ்வாறான நிலையில், இலங்கை பொருளாதார ரீதியாக அதளபாதாளத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு, சர்வதேச நாடுகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளபோதும், இந்தியா வழங்கிய ஒத்துழைப்பை ஒருபோதும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

ஆகவே இவ்வாறான சிறுமைத்தனமான செயற்பாடுகள் இலங்கை - இந்திய நல்லுறவில் பாரிய விரிசலாக உருவெடுக்கும் சந்தர்ப்பங்களும் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கச்சதீவில் அந்தோனியார் ஆலயம் மாத்திரமே இவ்வளவு காலமாக இருந்தது. ஆனால் இப்போது அங்கே பெரிய புத்தர் சிலை எப்படி வந்தது என்பது விடை காண முடியாத கேள்வியாகவுள்ளது.

இலங்கையில் இருப்பவர்களுக்கும் தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கும் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்கு உரிய இடமென்று தெரியும். இருப்பினும் வடக்கு - கிழக்கில் பௌத்த அடையாளங்களை நிறுவி வருவதைப் போன்று கச்சதீவிலும் தற்போது பௌத்த சின்னத்தை நிறுவியுள்ளனர்.



கச்சதீவையும் விட்டுவைக்காத நிலைமையே தற்போது இருக்கின்றது. ஆனால் கடற்படையினர் வழிபடுவதற்காக அது வைக்கப்பட்டது என்று இனி வரும் காலங்களில் பதில் வரலாம்.

குறித்த விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் அங்கு அமைக்கப்பட்ட பிரமாண்டமான புத்தர் சிலை எவ்வாறு கட்டப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அதனை நிறுவியவர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும் மத தலைவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்படவேண்டும் என கச்சதீவு யாத்திரை தல பரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கச்சதீவில் பௌத்த சின்னங்களில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான புகைப்படங்கள் வெளியான நிலையில் கருத்து தெரிவித்தபோதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கச்சதீவு என்றாலே தமிழக மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏன் அண்மைய காலமாக சிங்கள மக்களுக்கும் ஞாபகத்துக்கு வருவது புனித அந்தோனியார் ஆலயமே.

கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாக தொன்றுதொட்டு காணப்படுகின்றது.

ஆனால் திட்டமிட்ட வகையில் அண்மைய நாட்களில் இரண்டு புத்த பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டதுடன் அரச மரக்கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளன.

யாருக்கும் தெரியாத வகையில் உயரமாக பனை ஓலைகளால் வேலியமைத்து அது மூடப்பட்டு காணப்படுகின்றமையை சில நாட்களுக்கு முன்னர் பார்த்த புகைப்படங்கள் மூலம் அறியக் கிடைத்தது. எதிர்காலத்தில் வரலாற்றை திரிபுபடுத்துவதற்கான முயற்சியே இது.

கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்கின்றது. அங்கு 7 தொடக்கம் 10 வரையான கடற்படையினர் கடமையாற்றுகின்றனர். அவர்கள் வழிபட சிறிய புத்தர் சிலையை வைத்து வழிபடலாம்.

ஆனால் இவ்வளவு பெரிய புத்தர் சிலைகள் எதற்கு? அதை ஏன் மறைத்து வைத்திருக்கவேண்டும். கச்சதீவில் எந்தப் பகுதியிலும் அரச மரங்கள் இல்லை. ஆனால் திட்டமிட்ட வகையில் அரச மரங்கள் நாட்டப்பட்டுள்ளது. வட கிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப் படுகின்றது.

போருக்கு பின்னர் இன ஒற்றுமை பற்றி பேசப்படும்போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்படவேண்டும்.

இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள இவ்வாறான விடயங்கள் அகற்றப்பட வேண்டும்.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதத்திற்கும் தனித்துவத்திற்கும் பாதிக்காத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் - என்றார்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் சட்டவிரோத முறையில் பௌத்த மதத்தின் பெயரால் புத்தரின் சிலைகளை வைத்து ஆக்கிரமிக்கும் மத தீவிரவாதத்தின் தொடர்ச்சி கச்சதீவிலும் அரங்கேற்றப்பட்டுள்ளது.இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெருவிக்கையில்-

மத நல்லிணக்கம் இன நல்லிணக்கம் என அறிக்கை விடும் மதத்தலைவர்களும் அரசியல் தலைவர்களும் ஆட்சியாளர்களும் பொறிமுறை ரீதியான செயல் நடவடிக்கைகளில் இதுவரை செயற்படவில்லை. இதனால் கட்டாய மதத் திணிப்பும் கட்டாய மத மாற்று நடவடிக்கைகளும் வேகமடைந்துள்ளன.

ஏனைய மதங்களைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் அம் மதங்களின் வரலாறுகளை மாற்றியமைக்கும் வகையிலும் இலங்கைத் தீவு பௌத்த சிங்கள நாடு என கொள்கை ரீதியாக மாற்றியமைப்பதற்காகவும் யார் ஆட்சிக் கதிரையில் வந்தாலும் இந்த பௌத்த மத ஆக்கிரமிப்பு தொடரும் என்பதைக் கச்சதீவு விவகாரம் வெளிப்படுத்தியுள்ளது.

பல்லின மக்கள் வாழும் நாட்டை அமைதியான முறையில் வழிநடத்த வேண்டிய அரசாங்கம் மத தீவிரவாதத்தை அரச இயந்திரத்தை கொண்டு ஏனைய இனங்களின் உரிமைகளை ஆக்கிரமிக்கின்றது - என்றார்.

தமிழர் தாயகப் பிரதேசத்தின் பல இடங்களிலும் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த பௌத்த ஆக்கிரமிப்பு இப்போது கச்சதீவையும் சென்றடைந்திருக்கின்றது.

இது எதிர்காலத்தில் எப்படியான கொந்தளிப்பை ஏற்படுத்தப்போகின்றது

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்






**திரைப்படம் - பருந்தாகுது ஊர்க்குருவி**
**இயக்கம் - தனபாலன் கோவிந்தராஜ்**
**இசை - ரெஞ்சித் உன்னி**
**நடிப்பு - நிஷாந்த் ரூசோ, விவேக் பிரசன்னா, காயத்ரி ஐயர்**




இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் ஒரு குறும்படமாக ஓர் அரை மணி நேரத்தில் கூட மொத்த படத்தையும் எடுத்து முடித்திருக்கலாம். ஆனால், இரண்டு மணி நேர முழு நீளத் திரைப்படமாக இப்படி நீட்டி முழக்கி எடுத்திருக்க வேண்டியதில்லை. படம் முழுவதும் படத்தின் நாயகன், ஒருவரது உயிரை காப்பாற்ற அவருடன் ஓடிக் கொண்டே இருப்பது தான் படத்தின் கதை. அதில் எந்த அழுத்தமும் திருப்பமும் இல்லாமல் இப்படத்தை கொடுத்திருக்கிறார் இயக்குநர் தனபாலன் கோவிந்தராஜ்.

நாயகன் நிஷாந்த் ரூசோ ஒரு சிறிய குற்றவாளி. காட்டில் யாரோ கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாக காவல் நிலையத்துக்குத் தகவல் வர நிஷாந்த்தை அழைத்துக் கொண்டு அந்த இடத்துக்கு செல்கிறார் உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி. அங்கு விவேக் பிரசன்னா கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார். ஒரு பாதுகாப்புக்காக விவேக் பிரசன்னாவையும், நிஷாந்தையும் கைவிலங்கிட்டு விட்டுவிட்டு அக்கம் பக்கம் யாராவது இருக்கிறார்களா எனப் பார்க்கப் போகிறார் உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி. அந்த சமயத்தில் விவேக் இன்னும் சாகவில்லை எனத் தெரிகிறது. அவரை காப்பாற்ற அந்த இடத்திலிருந்து அவருடன் ஓடுகிறார் நிஷாந்த். சிலர் அவர்களை கொலை செய்யத் துரத்துகிறார்கள். அதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

நிஷாந்தின் தோற்றத்துக்கு அவர் ஒரு சிறிய குற்றவாளி என்பதை நம்ப முடியவில்லை. இதற்கு முந்தைய படங்களில் தனது நடிப்பால் ரசிகர்களைக் கவரும் விதத்தில் நடிக்கும் விவேக் பிரசன்னாகூட இதில் ஏனோ தானோவென்று நடித்திருக்கிறார். விவேக் பிரசன்னாவின் மனைவியாக காயத்ரி ஐயர். கதாநாயகி போல ஒரு வில்லி கதாபாத்திரம் அவருக்கு. பொறுப்பதிகாரி விநோத் சாகர். படம் முழுவதும் காக்கிச் சட்டை அணியாமலேயே வருகிறார். உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி கோடங்கி வடிவேல். ஒரு காட்சியில் கூட தலையில் பொலிஸ் தொப்பி அணியாமல் சீருடையுடன் மட்டும் சுற்றி வருகிறார்.

மலைப் பிரதேசத்தில் படத்தின் பெரும்பாலான காட்சிகள் நகர்கிறது. ஒளிப்பதிவாளர் அஷ்வின் நோயல் தன் பங்குக்கு கொஞ்சம் உழைத்திருக்கிறார். ரெஞ்சித் உன்னியின் பின்னணி இசை பரவாயில்லை ரகம்தான்.

ஒரு படம் என்றால் ஏதோவொரு விதத்தில் நம்மிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் படத்தில் அப்படி எதுவும் இல்லை. பறப்பதற்கு இன்னும் நிறைய பயிற்சி வேண்டும்.



## ரூ. 100 கோடியில் ஜெயம்ரவி படம்!

நடிகர் ஜெயம் ரவியின் அடுத்த படம் வேல்ஸ் பிலிம் இன்ரர்நஷனல் நிறுவனத்தின் தயாரிப்பில் 100 கோடி இந்திய ரூபாய் செலவில் உருவாகவுள்ளது.

ஜெயம் ரவி நடிப்பில் வெளியான அகிலன் படம் பார்வையாளர்களை பெரிதும் கவராத நிலையில், அடுத்து ஜெயம் ரவி நடிப்பில் 'பொன்னியின் செல்வன் 2' படம் வெளியாகவுள்ளது.

இந்நிலையில் இந்தப் படங்களைத் தொடர்ந்து உருவாகும் ஜெயம் ரவியின் 32ஆவது படமே 100 கோடி இந்திய ரூபாய் செலவில் உருவாகிறது.



## அதிதியின் புதிய படம்


கார்த்தி நடித்த விருமன் படத்தில் அறிமுகமானவர் இயக்குநர் ஷங்கரின் மகளான அதிதி. முதல்படமே அவருக்கு வெற்றியை தேடி தந்தது. இதையடுத்து தற்போது சிவகார்த்திகேயன் நடித்துவரும் மாவீரன் படத்தில் நிருபர் வேடத்தில் அதிதி நடித்து வருகிறார்.

இந்நிலையில் அந்த படத்தை தொடர்ந்து அவர் விஷ்ணுவர்தன் இயக்கி வரும் புதிய படத்திலும் நாயகியாக இணையவுள்ளார். இப்படத்தில் அதர்வாவின் தம்பி ஆகாஷ் முரளி நாயகனாக நடிக்கிறார்.

## ஓகஸ்டில் ஜெயிலர்

நெல்சன் இயக்கி வரும் ஜெயிலர் படத்தில் நடித்து வருகிறார் ரஜினிகாந்த். இந்த படத்தில் அவருடன் ரம்யா கிருஷ்ணன், தமன்னா, ஜாக்கி ஷெராப், மோகன்லால், சிவராஜ்குமார், யோகி பாபு உட்பட பலர் நடிக்கிறார்கள். அதிரடி கதையாக உருவாகும் இதில் ஓய்வு பெற்ற ஜெயிலராக நடிக்கிறார் ரஜினி. இதன் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை நெருங்கி வருகிறது.

முன்னதாக இந்தப்படம் தீபாவளிக்கு வெளியாகும் என கூறப்பட்டது. ஆனால், தற்போது படப்பிடிப்பு ஏப்ரல் 15க்குள் முடிந்துவிடும். இதனால், ஓகஸ்ட் மாதமே திரைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.






## சர்ச்சையில் டாப்ஸி

தமிழில் "ஆடுகளம்" படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் டாப்ஸி.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு பஷன் நிகழ்வில் டாப்ஸி அணிந்த ஆடையும், ஆபரணமும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கவர்ச்சியான சிகப்பு நிற கவுன் அணிந்து, கழுத்தில் மகாலட்சுமி உருவத்துடன் அவர் அணிந்த நெக்லஸ்தான் இந்த சர்ச்சைக்குக் காரணம்.

கடவுள் உருவம் பொறித்த நெக்லசை இப்படி கவர்ச்சியான ஆடையுடன் அவர் அணியலாமா என பலரும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.



## வருகிறது ட்ரெய்லர்

வரும் 29ஆம் திகதி 'பொன்னியின் செல்வன் 2' திரைப்படத்தின் ட்ரெய்லர் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இயக்குநர் மணிரத்னம் இந்தப் படத்தை இயக்கி உள்ளார்.

இந்தப் படம் முதல் பாகம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியானது. இரண்டாம் பாகம் வரும் ஏப்ரல் 28ஆம் திகதி வெளியாகவுள்ளது.

முதல் பாகம் சுமார் 500 கோடி இந்திய ரூபாயை வசூல் செய்துள்ளதாக தகவல். முதல் பாகத்தை காட்டிலும் கூடுதலாக இரண்டாம் பாகம் வசூலில் அசத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாஷிகாவுக்கு பிடியாணை

கடந்த 2021ஆம் ஆண்டு மகாபலிபுரம் அருகே நிகழ்ந்த கார் விபத்து வழக்கில் நடிகை யாஷிகா ஆனந்துக்கு பிடியாணை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கடந்த 2021 ஜூலை 24 அன்று தனது தோழிகளுடன் நடிகை யாஷிகா ஆனந்த் சென்ற கார் மகாபலிபுரம் அருகே விபத்துக்குள்ளானது. இதில் அவரின் தோழி உயிரிழந்தார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த யாஷிகா மீது வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில் 21ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டது. ஆனால், அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. இதையடுத்தே அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.



# பணக்கார கிரிக்கெட் வீரர்கள்




இந்தியாவில் கிரிக்கெட் மிகவும் பிரபலமான விளையாட்டு என்பதில் சந்தேகமில்லை. கிரிக்கெட் வீரர்களுக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். ஒவ்வொரு கிரிக்கெட் நட்சத்திரமும் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள். இது தவிர, விளம்பரங்கள் உள்ளிட்ட பிற வருமானங்களும் உள்ளன.

கிரிக்கெட் வீரர்களின் சம்பளமும், விளம்பர மதிப்புகளும் குவிந்து வருகின்றன. இதனால் அவர்களின் மதிப்பு பல நூறு கோடியை தாண்டி அதிகரித்து வருகிறது. இப்படி இருக்கையில், ஒவ்வொரு ஆண்டும் பணக்கார கிரிக்கெட் பட்டியல் ஆய்வு நடத்தப் படுகிறது.

இந்த பட்டியலில் விராட் கோலி, டோனி போன்ற இந்திய கிரிக்கெட் வீரர்கள்தான் எப்போதும் முன்னிலையில் இருப்பார் கள். இந்நிலையில் இந்த முறை அடம் கில்கிறிஸ்ட் என்ற அவுஸ்தி ரேலியாவின் முன்னாள் வீரர் பெயர் இடம்பெற்றது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இவருக்கு நம் நாட்டு மதிப்பில் 14 ஆயிரத்து 40 கோடி ரூபாய் மதிப்பில் ஆண்டு வருமானம் கிடைக்கிறதாம்.

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி, எம்.எஸ். டோனி அனைவரும் பணக்கார கிரிக் கெட் வீரர் கள். ஆனால் அவர்களில் யாரும் உலகின் பணக்கார கிரிக்கெட் வீரர்கள் இல்லை.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் விக்கெட் காப்பா ளர் மற்றும் துடுப்பாட்ட வீரர் அடம் கில்கிறிஸ்ட் பணக்காரர். இதை உலகின் முன்னணி வணிக இதழான சி. இ. ஓ. வேர்ள்ட் மகசின் வெளியிட்டுள்ளது.



கில்கிறிஸ்ட்டின் வருமானம் 380 மில்லியன் டொலர் கள். இந்தப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் இரண்டாவது இடத்தில் உள்ளார். 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் - 170 மில்லியன் டொலர் சொத்துகள் உள்ளன.

பல முன்னணி நிறுவனங்களில் உயர் பதவிகளை வகிக்கும் கில்கிறிஸ்ட். இதன் மூலம் ஒவ்வொரு வருடமும் கோடிகளை சம்பாதிக்கிறார். இந்திய அணியின் முன்னாள் கப்டன் மகேந்திர சிங் தோனி 4 ஆயிரத்து 500 கோடி 115 மில்லியன் டொலர், நட்சத்திர பேட்ஸ்மேன் விராட் கோலி 4 ஆயிரத்து 140 கோடி 112 மில்லியன் டொலர் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களில் உள்ளனர்.

பத்து பணக்கார கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் இந்தியாவின் முன்னாள் சகலதுறை வீரர் யுவராஜ் சிங், துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் ஆகியோர் இடம் பெற்று உள்ளனர். சேவாக் எட்டாவது இடத்தில் ஆயிரத்து 345 கோடி ரூபாய் - 40 மில்லியன் டொலர் யுவராஜ் 35 மில்லியன் டொலர் வருமானத்துடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

இதேவேளை, இலங்கையின் லசித் மலிங்க 6 மில்லியன் டொலர் - சமார் 186 கோடி ரூபாய் வருமானத்துடன் 40ஆவது இடத்தில் உள்ளார். கிரிக்கெட்டில் அதிகம் சம்பாதிக்கும் முதல் இலங்கையர் இவரேயாவார்.



# எல்லா காலத்திலும் சிறந்த வீரன்...!

உதைபந்தாட்டப் போட்டிகளில் அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் போர்த்துக்கல்லின் கிறிஸ்ரியானோ ரொனால்டோ. 38 வயதான ரொனால்டோ நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆடிய போட்டி அவரின் 197ஆவது போட்டியாகும். முன்னதாக குவைத்தின் படேர் அல் முதாவோ 196 போட்டிகளில் விளையாடியதே ஒரு வீரர் பங்கேற்ற அதிக சர்வதேச போட்டியாக அமைந்தது.

ரொனால்டோவின் 197ஆவது சாதனைப் போட்டி யூரோ கிண்ணம் 2024 தகுதிச் சுற்றின் தொடக்கப் போட்டியாகும். இதில் லிச்சென்ஸ்ரைன் அணியை போர்த்துக்கல் எதிர்த்து ஆடியது.

இந்தப் போட்டியில் லிச்சைன்ஸ்ரைன் அணிக்கு எதிராக 4 கோல்களை போர்துக்கல் அடித்தது. இது ரொனால்டோ அடித்த 120ஆவது சர்வதேச கோலாகும். அத்துடன், இது அவர் கோல் அடித்த 100ஆவது சர்வதேச போட்டியுமாகும்.

ரொனால்டோ 2003ஆம் ஆண்டு சர்வதேச உதைபந்தாட்ட அரங்கில் அறிமுகமாகியிருந்தார். கடந்த ஆண்டு கட்டாரில் நடந்த உலகக் கிண்ணத் தொடர் அவரின் ஐந்தாவது உலகக் கிண்ணத் தொடராக அமைந்தது. இந்த சாதனையை படைத்த ஒரு சில வீரர்களில் ரொனால்டோவும் ஒருவர்.

எனினும், ரொனால்டோ அண்மைக்காலமாக தொடர் சாதனைகளை படைத்து வருகின்றார். இது அவரை எல்லாக் காலத்திலும் சிறந்த வீரர் என்ற பெருமையை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

அவர் தனது உதைபந்தாட்ட வாழ்க்கையில் 7 நாடுகளின் மிகப்பெரிய தொடர்களின் 11 சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார். இதில் 5 சம்பயின்ஸ் லீக், 4 கழகங்களுக்கு இடையிலான உலகக் கிண்ணம் மற்றும் ஒரு ஐரோப்பிய சம்பியன்ஷ் லீக் கிண்ணம். இக்காலப் பகுதிகளில் அவர் ஸ்போர்ட்டிங் லிஸ்பன், மன்செஸ்டர் யுனைற்றெட், ரியல் மட்ரிட், ஜூவன்ட்ஸ் அணிகளுக்காக ஆடியிருந்தார்.

இந்த சாதனைகள் தவிர, கடந்த நவம்பரில் சர்வதேச, கழக மட்டத்திலான போட்டிகளில் 800 கோல்களை அடித்த முதல் வீரராகவும் முத்திரை பதித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரத்தம் சிந்தி ஆடிய மெஸ்ஸி

ஆர்ஜென்ரீனாவின் தலைநகரமான புவனஸ்அயர்ஸ் நகரத்தின் “எல் மானுமெண்டல்“ மைதானம் முழுவதும் கடந்த வியாழக்கிழமை இரவு ஒரே ஒரு பெயரை மட்டுமே உச்சரித்துக் கொண்டிருந்தது. மைதானத்தில் கூடியிருந்த 80 ஆயிரம் பேரின் வாயிலிருந்தும் வந்த அந்த ஒற்றைச் சொல் ‘மெஸ்ஸி’.

உதைபந்தாட்ட உலகக் கோப்பை ஆர்ஜென்ரீனாவுக்கு பெற்றுத் தந்த அந்த அணியின் தலைவர் மெஸ்ஸி, கட்டாரில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதி போட்டிக்குப் பிறகு மீண்டும் ஒருமுறை அந்த அணிக்காக வியாழன் இரவு களமிறங்கினார்.

பனமா நாட்டுக்கு எதிரான நட்பு ரீதியான இந்தப் போட்டி ஆர்ஜென்ரீனா உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய பின்னர் பங்கேற்ற முதல் போட்டியாக அமைந்தது.

ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக மைதானத்தில் ‘சம்பியன்ஸ்’ என்று பொறிக்கப்பட்ட ஆர்ஜென்ரீனா அணியின் பிரமாண்ட ஜெர்ஸி மைதானத்துக்குக் கொண்டு வரப்பட்டது. உலகக் கிண்ணத்தை மைதானத்துக்கு கொண்டு வந்த அந்தத் தருணத்தில், ஆர்ஜென்ரீனா ரசிகர்கள் உற்சாக குரல் எழுப்பி கொண்டாடித் தீர்த்தனர்.

ஆட்டம் தொடங்கியது முதலே ஆர்ஜென்ரீனா அணியும் பனாமா அணியும் ஆக்ரோஷமாக மோதின. முக்கியமான சாதனை ஒன்றைப் படைக்க கோல் கம்பத்தை தொடர்ந்து முற்றுகையிட முயன்றார் லயனல் மெஸ்ஸி.

ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் பனாமா அணி வீரர் கல்வான், மெஸ்ஸியை தடுக்க முயன்று மஞ்சள் அட்டை பெற்றார். கோல் கம்பத்தை முற்றுகையிட மெஸ்ஸி முன்னேறியபோது அவரைத் தடுக்க அவரது காலில் மோதி மெஸ்ஸியை கீழே விழச் செய்தார் பனாமா வீரர்.

கீழே விழுந்த மெஸ்ஸிக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டு, இரத்தம் சிந்தியது. அதைப் பொருட்படுத்தாமல் விளையாடிய மெஸ்ஸி, மஞ்சள் அட்டைக்கு எதிராக கிடைத்த ப்றீ - கிக்கை கோலாக்க தவறினார்.

தொடர்ந்து, ஆர்ஜென்ரீனா அணி கோல் கம்பத்தை முற்றுகையிட்டு வந்தது. அந்த அணியின் மெஸ்ஸி, டி மரியா, என்சோ பெர்னாண்டஸ், ஜூலியன் அல்வாரெஸ் என பலரும் கோலடிக்க முயற்சி செய்தனர். ஆனால் முதல் பாதி வரை பல முயற்சி செய்தும், ஆர்ஜென்ரீனா அணியால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

இரண்டாவது பாதியிலும், ஆர்ஜென்ரீனா அணி தொடர்ந்து கோல் அடிக்க முயற்சி செய்தது. உலக சம்பியன் அணியை தடுக்க பனாமா அணியும் பதில் தாக்குதலைத் தொடுத்து வந்தது. இதனால் பல முறை பனாமா அணி தவறான ஆட்டம் ஆடியது.

75 நிமிடங்கள் வரை இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில், மெஸ்ஸி அடிக்கும் கோலை காண மைதானத்திற்கு வந்திருந்த 80 ஆயிரம் பேரும் அந்த ஒரு தருணத்திற்காகக் காத்திருந்த னர்.

பனாமா அணி செய்த தவறின் காரணமாக, ஆர்ஜென்ரீனா அணிக்கு 4 முறை ப்றீ கிக் வாய்ப்பு கிடைத்தது. முதல் மூன்று வாய்ப்பையும் கோலாக மாற்றத் தவறிய ஆர்ஜென்ரீனா, 77வது நிமிடத்தில் கிடைத்த ப்றீ கிக் வாய்ப்பை கோலாக மாற்றியது.

மெஸ்ஸி அடித்த ப்றீ கிக் கோல் கம்பத்தில் பட்டு திரும்பி வந்த போது, அதை மீண்டும் வலைக்குள் திணித்து கோலாக்கினார் அல் மாடா. 1-0 என முன்னிலை பெற்ற ஆர்ஜென்ரீனா அணி, மற்றுமொரு சாதனையைப் படைக்க தன் முனைப்புடன் ஆடியது. மெஸ்ஸி கோல் அடிக்க எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் எதிரணி முழு திறன் கொண்டு தடுத்தது.

அத்தனை பேரையும் தாண்டி 88ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி கோலடித்த போது அரங்கமே கரவொலியால் அதிர்ந்தது.

தனது இடதுகாலால் மெஸ்ஸி அடித்த ப்றீ கிக் கோல் கீப்பரை தாண்டி வலைக்குள் தஞ்சம் புகுந்தது. இந்த கோல் மூலம் சர்வதேச அரங்கில், 800 கோல்கள் அடித்து சாதனை படைத்தார் மெஸ்ஸி.



சர்வதேச அளவில், ரொனால்டோவுக்கு பிறகு இந்த பட்டியலில் அதிக கோலடித்து மெஸ்ஸி இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.

கிறிஸ்ரியானோ ரொனால்டோ சர்வதேச போட்டிகளின் மூலம் 828 கோல்கள் அடித்திருக்கிறார்.

ஆட்ட நேர முடிவில், 2-0 என்ற கோல் கணக்கில் பனாமா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது ஆர்ஜென்ரீனா அணி.

போட்டி முடிந்த பிறகு, உலகக் கோப்பை வென்ற ஆர்ஜென்ரீனா அணி மைதானத்தைச் சுற்றி கோப்பையுடன் வலம் வந்தது. ஒவ்வொரு வீரரும் உலகக்கோப்பையின் மாதிரியை கையில் வைத்து ரசிகர்களை நோக்கி கையசைத்தனர்.

# ராகுல் காந்தி தகுதி நீக்கம்:
## “சர்வாதிகாரம், ஜனநாயகப் படுகொலை, வரலாற்றின் கரும்புள்ளி”

### எதிர்க்கட்சியினரின் எதிர்வினைகள்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத்தின் சூரத் நீதிமன்றம் மார்ச் 23 அன்று தீர்ப்பு வழங்கியது. இதனையடுத்து ராகுல் காந்தி மறுநாள் எம்.பி. பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்தி கேரள மாநிலம் வயநாடு தொகுதியிலிருந்து போட்டியிட்டு எம்.பி.யானார். இந்நிலையில், ராகுல் காந்தி மீதான இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. காங்கிரஸ் மட்டுமின்றி தேசிய, மாநிலக் கட்சிகள் பலவும் தங்களின் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளன. தமிழகத்தில் கூட்டணிக் கட்சியான திமுகவும் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

**யுத்தம் தொடர்கிறது...**

காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கத்தில், “ஜனநாயகத்தைப் பாதுகாக்க ராகுல் காந்தி தொடர்ந்து போராடுவார். இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கையை எடுப்பார்” என்று பதிவிட்டுள்ளது. மேலும், ராகுல் காந்தியின் புகைப்படம் பகிரப்பட்டு அதற்கு “யுத்தம் தொடர்கிறது” என்றும் தலைப்பிடப்பட்டுள்ளது.

**ஜெய்ராம் ரமேஷ் :**

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தனது ட்விட்டர் பக்கத்தில், “இதை நாங்கள் சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எதிர்கொள்வோம். அதானி விவகாரத்தில் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்திருக்கின்றனர். இந்திய ஜனநாயகம் சாந்தியடையட்டும்” என்று காட்டமாக பதிவிட்டுள்ளார்.

**சசி தரூர் :**

காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் சசி தரூர் தனது ட்விட்டர் பக்கத்தில், “ராகுல் காந்திக்கு எதிரான நடவடிக்கையில் காட்டப்பட்ட துரிதம் என்னை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு வந்த 24 மணி நேரத்திற் குள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது அதிகாரத்திற்கு போட்டிபோடும் அரசி யல். ஜனநாயகத்திற்கு இத்தகைய அரசியல் மிகவும் கேடானது” என்று பதிவிட்டுள் ளார்.

**அசோக் கெலாட் :**

“மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்திருப்பது சர்வாதிகாரத்தனம். இதே போன்றதொரு அணுகுமுறையைத் தான் இந்திரா காந்தியிடமும் பாஜக காட்டியது. பின்னர் விளைவுகளை சந்தித் தது. ராகுல் காந்தி இந்த தேசத்தின் குரல். அந்தக் குரல் இனி இன்னமும் ஓங்கி ஒலிக்கும். இங்கே நிலவும் சர்வாதிகாரத் திற்கு எதிராக ஓங்கி ஒலிக்கும்” என்று இந்தியில் ட்வீட் செய்துள்ளார் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட்.

**மம்தா பானர்ஜி :**

திரிணமூல் காங்கிரஸ் தலைவரும் மேற்குவங்க முதல் வருமான மம்தா பானர்ஜி தனது ட்விட்டர் பக்கத்தில், “பிரதமர் நரேந்திர மோடியின் புதிய இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் தான் முதன்மையான இலக்குகளாகியுள்ளனர்” என்று பதிவிட்டுள்ளார்.

**உத்தவ் தாக்கரே :**

“திருடரை திருடர் என்றழைப்பது நம் நாட்டில் கிரிமினல் குற்றமாக இருக்கிறது. ஆனால், உண்மையான திருடர்களும், கொள்ளையர்களும் இன்னும் சுதந்திரமாகத் தான் இருக்கின்றனர். ராகுல் காந்தி தான் தண்டிக்கப்பட்டுள்ளார். இது ஜனநாயகத்தின் மீதான நேரடி படுகொலை. இங்கே அனைத்து அரசு இயந்திரங்களும் அழுத்தத்தில் இருக்கின்றன. இதுதான் சர்வாதிகாரத்தின் முடிவுக்கான தொடக்கம். இந்த யுத்தத்திற்கு ஒரு சரியான திசை மட்டும் கொடுக்கப்பட வேண்டும்” என்று சிவ சேனா (உத்தவ் தாக்கரே) கட்சித் தலைவர் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

**சுரப் பரத்வாஜ் (ஆம் ஆத்மி) :**

“எங்களுக்கும் காங்கிரஸுக்கும் நிறைய கருத்து வேறுபாடுகள் உண்டு. மத்திய அரசு எங்களை தாக்கிய போது காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கைத்தட்டியும்கூட உள்ளனர். எதிர்க்கட்சிகளின் குரலை மத்திய அரசு ஒடுக்கினால் யார்தான் மக்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேசுவது? சின்னச் சின்ன பிரச்சினைகளுக்காக எதிர்க்கட்சியினர் கைது செய்யப்படுகின்றனர். இதுவே தொடர்ந்தால் பிரதமர் மோடியும், பாஜகவினரும் மட்டுமே தான் எல்லா தேர்தலிலும்




போட்டியிட வேண்டியிருக்கும். இது சர்வாதிகாரம்” என்று ஆம் ஆத்மி டெல்லி அமைச்சர் சுரப் பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

**ஆர்ஜேடி கண்டனம் :**

“இது வெட்கக்கேடானது மட்டும் துரதிர்ஷ்ட வசமானது. இதைவிட நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் மிகப்பெரிய கரும்புள்ளி இருக்க முடியாது” என்று ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சி எம்.பி. மனோஜ் ஜா தெரிவித்துள்ளார்.

---




**தியாகராஜா வினோத், சண்டிலிப்பாய், மானிப்பாய்**

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மத ஆராதனை கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக வருகைதந்த தமிழகத்தின் பிரபல போதகர் போல் தினகரனை யாழ்ப்பாணத்தில் அந்த கூட்டங்களில் கலந்துகொள்ளவிடாமல் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இலங்கை சிவசேன தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் இதுபோன்று தொடர்ந்து முயற்சி செய்தால் மதங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாமல் போய்விடும் அல்லவா?

**வியுக்தியார்:** உங்கள் கவலை நியாயமானதுதான். ஆனால் பலாலி விமானநிலையத்தில் பல மணிநேர விசாரணையின் பின்னர் போல் தினகரன் யாழ்ப்பாணத்தில் ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்தபோது, அவரைச் சந்திக்க முயன்ற ஈழநாடு செய்தியாளரை அவர் சந்திக்க மறுத்து விட்டாலும், அவரது சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தை கவனித்திருப்பீர்கள். சமாதானமாக உள்ள யாழ்ப்பாணத்தில் சமாதானத்திற்கு குந்தகமாக அமையும் என்று கருதுவதால் அந்த நிகழ்வை அவர் தவிர்ப்பதாக தெரிவித்திருந்தார். அவர் தனது மத நம்பிக்கையை எடுத்துச் சொல்வதற்கு அவருக்கு எப்படி சுதந்திரம் இருக்கின்றதோ அதேபோல மற்ற மதத்தவர்களுக்கும் தமது மதத்தை யாரும் நிந்தனை செய்வதை தடுக்கின்ற அல்லது கண்டிக்கின்ற உரிமையும் இருக்கின்றது. போல் தினகரனைப் போன்ற மற்றுமொரு போதகரான மோகன் சி லாசரஸ் ஓர் ஆராதனை நிகழ்ச்சில் பேசிய காணொளி பார்த்தேன். அதில் அவர், தமிழகத்திலுள்ள இந்துக்கோயில்கள் எல்லாவற்றையும் சாத்தான்களின் கோயில்கள் என்கிறார். அதுகும் அனுமதிக்க முடியாததுதான்.

---

**எஸ். நிதர்சன்,**
**கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** பாராளுமன்றம், ஜனாதிபதி மற்றும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்திருப்பது நல்ல யோசனைதானே. ஒரே செலவிலேயே அனைத்து தேர்தல்களையும் நடத்தி விட்டால் பல பில்லியன் ரூபாக்களை மீதப்படுத்தலாம்தானே.

**வியுக்தியார்:** அவர் ஏன் மாகாணசபை தேர்தலை விட்டுவிட்டார் என்று தெரியவில்லை. அவர் சொல்வது போல நடத்தினால் நாட்டின் வரவு - செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை குறைவடையும் என்பது உண்மைதான். ஆனால் அவர் சொல்வது, எதற்காக என்பதை புரிந்துகொள்ள அதிகம் யோசிக்கவேண்டியதில்லைத்தான். அவர் உள்ளூராட்சி தேர்தலை இப்போது நடாத்தவேண்டாம் என்று கேட்பதற்கு பதிலாக அப்படிக்கேட்டிருக்கிறார் என்றுதான் நினைக்கின்றேன். எல்லா தேர்தலையும் ஒன்றாக நடாத்துவதென்றால் அடுத்த ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பரில்தான் நடாத்த முடியும். அதுவரை உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்கச் செல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

---

**க.செல்லத்துரை, கோவில் வீதி, நல்லூர்**

**கேள்வி:** முன்னையை காலங்களில் அரசியல்வாதிகள் தமது தொகுதி மக்களுக்கு செய்கின்ற நன்மைகள், அல்லது எதையாவது திறந்துவைக்கின்ற செய்திகள் தான் பத்திரிகைகளில் வெளிவரும். இப்போது என்றால், செய்திகளில் இடம்பிடிப்பதற்காகவே அரசில்வாதிகள் ஊடகவியலாளர் மாநாடுகளை நடாத்தி அடிக்கடி தமது செய்திகள் வெளிவருவதை உறுதிசெய்துகொள்கின்றார்களே. ஏதேனும் முக்கிய செய்தி ஒன்றை சொல்வ தற்காக அப்படி ஊடகவியலாளர் மாநாடு நடத்தினா லும் பரவாயில்லை. சிலர் நடத்துகின்ற ஊடக மாநாடு களில் செய்திகளை சேரிப்பதே ஊடகர்களுக்கு பிரச்சி னையாக இருக்குமோ தெரியவில்லையே?

**வியுக்தியார்:** அவர்கள் என்னதான் செய்வது எதையாவது தொகுதி மக்களுக்கு செய்தால்தானே அதனை செய்தி ஆக்குவதற்கு? வருடத்தில் இரண்டுதடவை ஜெனிவாவுக்கு போவதை செய்தியாக்கலாம். அதைவிட வேறு எதைத்தான் செய்தி ஆக்குவது. எம்.பி.யாக இருப்பவர்கள் பாராளுமன்றிலாவது பேசலாம். அதுகும் முன்னாள் எம்.பி. ஆகிவிட்டால், இப்படியாவது செய்தால்தானே மக்கள் மறக்காமல் இருப்பார்கள். அடுத்த தேர்தல்வரை மக்கள் மறக்காமல் இருக்கவேண்டுமே.

---

**வி. தனுசன், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** இலங்கைக்கு கடன் கொடுக்கும்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிபந்தனையையும் சர்வதேச நாணய நிதியம் விதிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளாரே. அதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**வியுக்தியார்:** அதுபற்றி சொல்வதற்கு என்ன இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என்றும் நிபந்தனை விதித்திருந்தால் நல்லதுதான். ஆனால் அப்படி விதித்திருந்தால், ரணில் பாடு பெரிய திண்டாட்டமாக போயிருக்கும். அந்த ஒரு நிபந்தனையை நிறைவேற்ற முடியாததால் கடன் கிடைப்பது தடைப்பிட்டிருக்கும். ஆனால் அதுவல்ல நான் நினைப்பது, இந்த சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் கடந்த ஜூலையில் ரணில் ஜனாதிபதியாக தெரிவான உடனேயே தொடங்கிவிட்டது. கிட்டத்தட்ட எட்டு மாதங்களாக பேச்சுவார்த்தை நடந்தபோது அமைதியாக இருந்த நமது செல்வம் அடைக்கலநாதன், அவர்கள் நிபந்தனை விதித்து கடனும் கொடுத்த பின்னர்தான், அதனையும் நிபந்தனையாக விதிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார். அதுகும் பாராளுமன்றத்தில். சிலவேளை, பாராளுமன்ற கலரியில் ஐ.எம்.எவ். பிரதிநிதிகள் யாராவது இருந்தார்களோ தெரியவில்லை. நமது தலவர்கள் எப்போதும் இப்படித்தான் செய்திகளில் இடம்பிடித்தால் போதும் என்று நினைக்கின்றார்கள்.

# பூமியை நெருங்கி வந்த பச்சை நிற வால்வெள்ளி

**கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்**
*(முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகம்)*

வானத்தில் பிரகாசமாக ஒளிர்கின்ற சூரியன், மனிதரின் உயிர் வாழ்க்கைக்குப் பல வழிகளில் அத்தியாவசியமானதாக இருப்பதுடன், ஒளிக்கும் வெப்பத்திற்கும் காரணமாக அமைகின்றது. பல்வேறு பிறைவடிவங்களைக் கொண்ட சந்திரன் வானத்தில் அழகான தோற்றப்பாடாகக் காணப்படுகின்றது. வானத்தில் ஒளிர்கின்ற பிரகாசமான புள்ளியாகக் காணப்படும் நட்சத்திரங்கள் (உடுக்கள்) வியப்பூட்டும் அழகிய தோற்றத்தினைக் கொண்டிருக்கின்றன. சூரியனும் சந்திரனும் உதித்து வானத்திற்குக் குறுக்கே சென்று மறைதல் நமது கண்களுக்குப் புலப்படும் போது நட்சத்திரங்கள் நிலையாக நிற்பது போன்று தென்படுகின்றன. ஆனால் வட வான் முனைவுடன் தொடர்புபட்ட முறையில் அவற்றின் நிலைகள் மாறுபடுவதனைக் காணலாம்.

நாம் பார்க்கின்ற வான்வெளி என்பது உண்மையில் அண்டத்தின் ஒரு பகுதியாகும். புவியின் வானத்தில் ஆட்சி செய்யும் சூரியன் அண்டத்திலுள்ள பல கோடிக்கணக்கான நட்சத்திரங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சிமிட்டும் ஒளிகொண்ட கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் புவியிலிருந்து பல கோடி மைல் தூரத்தில் அமைந்துள்ளன. புவியும், வானத்தில் ஒளிவீசும் கோள்களும் தமது சொந்த ஒளியை வீசுவதில்லை. அவை சூரியனிலிருந்து பெறப்படும் ஒளியைத் தெறிக்கச் செய்கின்றன. எனவே, சூரியனே ஞாயிற்றுத் தொகுதியின் மையமாகும்.

வானத்தில் நாம் காணும் நட்சத்திரம் ஒவ்வொன்றும் சூரியனை ஒத்தவையாக இருப்பதுடன் பெரும்பாலும் பல கோடி மடங்கு பெரிய பருமன் கொண்டவை. அண்டவெளியில் பல இலட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. நமது கண்ணுக்குப் புலனாகின்ற பெரும்பாலான நட்சத்திரங்கள் யாவும் பிரகாசமான ஒளிப்படையாகச் செறிந்திருக்கின்றன. இப்படை ‘பால்வீதி’ (Milky way) எனப்படும். இது பெரியதொரு தட்டுப் போன்ற வடிவுடையதாக, வானத்திற்குக் குறுக்காகப் பரந்து காணப்படுகின்றது. இந்தத் தட்டின் விட்டம் ஏறக்குறைய 100,000 ஒளியாண்டுகள் நீளம் கொண்டது. ஓர் ஒளியாண்டு 60,00,00, 00,00,000 மைலுக்குச் சமமானது.

சூரியனிலிருந்து ஒளி புவியை வந்தடைவதற்கு 8 நிமிடம் 20 செக்கன்கள் செல்கின்றது. இந்த ஒளி ஞாயிற்றுத் தொகுதியில் மிகத்தூரத்தில் அமைந்துள்ள புளூற்றோ என்னும் கோளைச் சென்றடைவதற்கு நான்கு மணிநேரம் எடுக்கின்றது. மிக அண்மையிலுள்ள நட்சத்திரமான ‘அல்பா சென்றோரி’ என்பது ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து ஆகக் குறைந்தது நான்கு ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது.

பால்வீதி என்னும் தட்டைச் சூழ்ந்து அதன் விட்டத்தின் மூன்று மடங்கு தூரத்திற்கு (3,00,000 ஒளியாண்டுகள்) கண்ணுக்குப் புலனாகாத கண்டத் தூசிகள், குறைந்த அடர்த்தி கொண்ட வாயுக்கள் ஆகியவற்றுள் பெரிய நட்சத்திரக் கூட்டமொன்று பரந்துள்ளது. நட்சத்திரங்களையும் அண்டத் தூசிகளையும், வாயுவையும் கொண்ட இந்தப் பிரமாண்டமான தொகுதியே ‘வெள்ளுடுத் தொகுதி’ (Galaxy) எனப்படும். வெள்ளுடுத் தொகுதியின் தொகை பல கோடிக்கணக்கானது. இவற்றுள் பெரும்பாலானவற்றைப் பார்க்க முடியாதவாறு அண்டத்து தூசி மற்றும் வாயு என்பன தடுத்து விடுகின்றன.

விஞ்ஞான தத்துவங்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் இந்த அண்டத்தின் வரலாற்றையும் அதன் முழுமையான கட்டமைப்பையும் ஒழுங்கு முறையாக ஆய்வு செய்ததன் மூலம் விஞ்ஞான அண்டவியல் (Cosmology) என்னும் நவீன கற்கை நெறி உருவாவதற்குக் காரணமாக இருந்தனர். நட்சத்திரங்கள், மற்றும் கோள்களுக்கு இடையிலான வேறுபாடுகளை பண்டைக் கால தத்துவஞானிகள் எடுத்துக் காட்டினர். நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினால் புவி, சூரியன், சந்திரன் ஆகியவற்றுடன் நட்சத்திரங்கள், கோள்கள் மற்றும் அவற்றின் அமைப்பு வடிவம் அவற்றுக்கிடையிலான தொடர்புகளை எவ்வாறு விளக்கலாம் என்பது தொடர்பாக இரண்டு வகையான கல்விக் கூடச் சிந்தனைகள் விருத்தி செய்யப்பட்டன. ஒன்று: அண்டத்தின் மத்தியில் புவி அசைவின்றி அமைந்திருக்க அதனைச் சுற்றி சந்திரன் மற்றும் கோள்கள், நட்சத்திரங்கள் சுழல்கின்றன எனக் கூறும் ‘புவிமையப் படிமம்’ பற்றிய கல்விக் கூடச் சிந்தனையாகும். இரண்டாவது: அண்டத்தின் மத்தியில் சூரியன் அமைந்திருக்க அதனைச் சுற்றி பூமியும் அதன் கோள்களும் சுற்றி வருகின்றன என விளக்கும் ‘சூரிய மையப் படிமம்’ பற்றிய சிந்தனையாகும்.

எகிப்திய கணிதவியலாளரான தொலமியின் (100 - 170 C.E) செல்வாக்குக் காரணமாக முதலாவது கல்விக் கூடச் சிந்தனை படிப்படியாகப் பெரும்பாலான வர்களை ஈர்க்கத் தொடங்கியது. தொலமியினால் விருத்தி செய்யப்பட்ட சமன்பாடுகள் புவிமைய மாதிரியின் அடிப்படையில் கோளங்களின் அலைவை (wandering) வெற்றிகரமாக எதிர்வு கூறுபவையாக இருந்தன. மத்திய காலப்பகுதியில் (-476 - 1400 C.E) ஐரோப்பாவில் கோவில் தலைவர்கள் தொலமி யின் புவிமையப் படிமக் கோட்பாட்டினை மறுக்காமல் ஏற்றுக் கொண்டனர். காரணம் இந்தச் சிந்தனைக்கு எதிரானவர்கள் மதத்திற்கு எதிரானவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனைக்கு உள்ளாக்கப்படு வர். ஏறக்குறைய 1600 வருடங்கள் தொலமி மற்றும் அரிஸ்டோட்டில் என்பவர்களினால் எடுத்துக் கூறப்பட்ட பூமியை மையமாகக் கொண்ட கோட்பாடே நிலைத்திருந்தது. மக்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். நிக்கலஸ் கொப்பநிக்கஸ் முதன் முதலாக “பூமி சூரியக் குடும்பத்தின் மத்தியில் இல்லை, மாறாக சூரியன்தான் மத்தியிலுள்ளது” என்று உலகிற்கு உணர்த்தினார். அவ்வாறு சொன்ன கருத்தைக் கூட அவர் சொன்னதாகச் சொல்லாமல் யாரோ ஒருவர் சொன்னது போல் உலாவ விட்டார். கோவில் மற்றும் மதகுருமார் மீதான பயம் அவருக்கு அதிகமாகவே இருந்தது.


பச்சை நிற வால்வெள்ளி

15 ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய ஆய்வுப் பயண யுகம் மற்றும் விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புக்கள் வெளிவந்தன. நிக்கலஸ் கொப்பணிக்கஸ் (1473 – 1543), கலிலியோ கலிலி (1564 – 1642) ஆகியோரின் முயற்சிகள் காரணமாக மக்கள் படிப்படியாக புவியும் கோள்களும் சூரியனைச் சுற்றிவரும் ஒழுக்கில் உண்மையாகவே அமைந்திருக்கின்றன எனவும், அவை அண்டத்தின் மத்தியில் அமைந்திருக்கவில்லை எனவும் உணரத் தொடங்கினர். ஐசாக் நியூட்டன் (1643 – 1727) ‘ஈர்ப்பு’ என்பதனை விளக்கிய போது இக் கவர்ச்சி விசையானது ஒரு பொருள் இன்னொன்றின் மீது செலுத்தப்படும் போது அது இறுதியில் அப் பொருட்களின் அசைவை விளக்குவதாக அமையும் எனக் குறிப்பிட்டார். இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தான் தனது பெயரிலேயே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

எமது ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களைப் பொறுத்த வரை அவற்றின் பருமன் மற்றும் சேர்க்கை ஆகியன ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுவதைக் காணலாம். புதன், வெள்ளி, புவி, செவ்வாய் என்பன சார்பளவில் சிறியவையாகவும் சூரியனுக்கு மிக நெருக்கமாகவும் அமைந்துள்ள உள்ளகக் கோள்களாகும். வானியல் ஆராய்ச்சியாளர்கள் இவற்றினைப் புவிக்குரிய கோள்கள் (Terrestrial planets) எனக் குறிப்பிடுவர். வியாழன், சனி, யூரேனஸ், நெப்ரியூன் என்பன பாரிய வாயுக் கோள்களாக அமைந்திருப்பதுடன் வெளிச்சுற்றுக் கோள்கள் எனவும் அழைக்கப்படும். அவற்றின் பெரும்பாலான திணிவு வாயுவையும் பனிப் படலத்தையும் கொண்டிருக்கின்றது. இங்கு பனி என்பது பொதுவான பதமாக இருப்பதுடன் பல பொருட்களைத் திண்ம நிலையில் உள்ளடக்கியதாக இருக்கும்.

ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களுடன் மேலும் பல சிறிய பொருட்கள் காணப்படுகின்றன. இலட்சக்கணக்கான சிறுகோள்கள் ஒரு வலயமாக செவ்வாய் மற்றும் வியாழன் ஆகியவற்றுக்கிடையில் காணப்படுகின்றது. எரிகற்கள் (Meteorites) ஒரு சென்ரி மீற்றரிலும் குறைவான அளவிலிருந்து 930 கிலோ மீற்றர் விட்டம் வரையிலான வீச்சுக் கொண்டவை. நெப்ரியூன் சுற்றுவட்டப் பாதைக்கு அப்பால் அங்குள்ள முகில்களில் அல்லது வலயங்களில் ரில்லியன் அளவில் பனிப் பொருட்கள் உள்ளன. பெரும்பாலான இந்தப் பனி உடைவுகள் மிகச் சிறியவையாக உள்ளன. ஆனால், அவற்றில் சில 2000 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட விட்டத்தைக் கொண்டவை. இவை ‘குறுங் கோள்கள்’ (குள்ளக் கோள்கள்) எனவும் கூறப்படும்.

கோள்களில் காணப்படும் ஈர்ப்பு விசையின் இழுப்புக் காரணமாகச் சில பனிப் பொருட்கள் ஞாயிற்றுத் தொகுதியின் உள் வட்டப் பாதைக்கு இழுக்கப்படுகின்றது. அங்கு அவை ஆவியாக்கச் செயற்பாட்டுக்கு உட்படும் போது நீண்ட வால் ஒன்று உருவாகும். அப் பொருட்களையே வால்வெள்ளி என அழைக்கின்றோம். வான் வெளியில் நட்சத்திரங்கள் ஒளிதரும் ஒரு புள்ளி போன்று காணப்படும். அத்துடன் வீசி எரிகின்ற வெப்ப வாயு கொண்ட பெரிய பந்துகள் போன்று காணப்படுவதுடன் அவற்றில் ஏற்படும் அணுக்கதிர் விளைவுகள் செறிவான வெப்பத்தையும், ஒளியை யும் உற்பத்தி செய்கின்றன. எமது சூரியன் நடுத்தரப் பருமன் கொண்ட ஒரு நட்சத்திரமாகவே கருதப்படுகிறது.


வெள்ளுடுத் தொகுதி

நட்சத்திரங்கள் பிரபஞ்சம் முழுவதும் எழுமாற்றாகச் சிதறிக் காணப்படுகின்றன. அவற்றினை ஈர்ப்பு விசை ஒன்றாக இணைப்பதினால் பெரிய பிரிவாகக் காணப்படும். இவையே வெள்ளுடுத் தொகுதிகள் எனப்படும். சூரியனும் 300 மில்லிய னுக்கும் மேற்பட்ட நட்சத்திரங்களும் ஒன்றாக இணைந்து பால்வீதி வெள்ளுடுத் தொகுதியினை உருவாக்கும். ஏறக் குறைய 100 மில்லி யன் வெள்ளுடுக் கூட்டங்கள் பிரபஞ்சத்தின் புலப்படும் காட்சியாக விளங்குகின்றது. எமக்கு அருகாமையில் காணப்படும் வெள்ளுடுத் தொகுதி ‘அன்ரோமிடா’ (Andromeda) ஏறக்குறைய 2.2 மில்லியன் ஒளியாண்டுகள் தூரத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஞாயிற்றினைச் சுற்றி வருகின்ற எட்டு கோள்களில் புவியும் ஒன்றாகும். எமது ஞாயிற்றுத் தொகுதி என்பது மெதுவாகச் சுழல்கின்ற உடுத் தொகுதியொன்றின் வெளி எல்லையில் அமைந்துள்ளது. பிரபஞ்சமானது நூற்றுக் கணக்கான பில்லியன் உடுத் தொகுதிகளைக் கொண்டுள் ளது. மிகத் தூரத்தே அமைந்துள்ள வெள்ளுடுத் தொகுதியிலி ருந்து அவதானிக்கப்பட்ட சிவப்பு ஒளி நகர்வு பிரபஞ்சக் கோட்பாட் டின் விரிவாக்கத்தினைக் குறிப்பிடுகின்றது. வானிலையாளர்கள் இந்த விரிவாக்கமானது 13.7 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பெரு வெடிப்பின் போது ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டனர். பிரபஞ்சத்தில் முதலாவது அணுக்கள் (ஐதரசன் மற்றும் கீலியம்) பெரு வெடிப்பின் பின்னர் ஒரு மில்லியன் வருடங்களுக்கும் குறைவான காலத்திலேயே விருத்தி செய்யப்பட்டது. இந்த அணுக்கள் பரந்தளவான வாயு முகில்களில் திரட்சியடைந்திருந்ததுடன் அதுவே ‘நெபுலா’ (Nebulae) எனவும் அழைக்கப்பட்டது.

ஞாயிற்றுத் தொகுதியில் காலத்துக்குக் காலம் தோன்றுகின்ற வால்வெள்ளிகள் சூரியனைச் சுற்றிப் பெரும்பாலும் நீள் வளைய ஒழுங்கில் இயங்குகின்றன. வால் வெள்ளியைக் குறிக்கின்ற ‘மொமெற்’ (ஊழஅநவ) என்னும் ஆங்கிலச் சொல் “நீள் கூந்தல்” என்னும் கருத்துடைய கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. வால்வெள்ளியின் தலைப் பகுதியில் உறைந்த வாயுக்கள் மற்றும் உலோகக் கனிமங்கள் ஆகியவற்றினால் அமைந்த திரட்சி காணப்படும். ஞாயிற்றுக் கதிர்வீசலில் சில பகுதிகளைத் தேர்ந்து இந்த வாயுக்கள் உறுஞ்சி நீண்ட அலை நீளங்களில் மீண்டும் ஒளி வீசும். சூரியனிலிருந்து வால் வெள்ளி தூர விலகும் போது இந்த வாயுக்கள் யாவும் திண்ம நிலையில் இருக்கும். இவை உறைந்த அமோனியா, நீர், ஐதரோகாபன் ஆகியவற்றின் துண்டுகளைக் குறிக்கின்றன.

வால் நட்சத்திரத்தில் பனிக்கட்டியாகக் காணப்படும் நீர்த் துளிகள் சூரியனுக்கு அருகில் வரும் போது கரைந்து சூரியக் காற்றினால் பின்தள்ளப்பட்டு ஒளிரும் தன்மை கொண்டது. இதனால் வால் எப்பொழுதும் சூரியனிலிருந்து விலகியே காணப்படும். இந்த வால் வெள்ளிகள் சூரிய மண்டலத்தின் கடைசி எல்லையிலிருந்து ஆரம்பமாவதாகக் கூறப்படுகின்றது. இது உருவாகும் இடம் ‘ஊர்ட் முகில்கள்’ எனப்படும். இப்பகுதியில் பில்லியன் எண்ணிக்கையிலான வால்வெள்ளிகள் எவ்வித செயற்பாடும் இன்றிக் காணப்படும். ஊர்ட் முகில்கள் என்பது புளூட்டோ சுற்று வட்டப் பாதைக்கு அப்பால் ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள ஒரு பகுதியாகும். இங்கு இலட்சக்கணக்கான வால் வெள்ளிகள் வட்ட ஒழுங்கில் நகர்கின்றன. இப் பகுதியிலிருந்து சில வால்வெள்ளிகள் விலகிச் செல்லும்போது அவற்றினைக் கடந்து செல்லும் நட்சத்திரங்கள் மற்றும் ஏனைய விசைகளினால் ஞாயிற்றுத் தொகுதியின் உட்பகுதியினை நோக்கி இழுக்கப்பட்டு பின்னர் சுற்றிவர ஆரம்பிக்கும்.

வால்வெள்ளி சூரியனை நெருங்கும் போது அதன் வாலானது நீண்டு கொண்டு செல்லும். சிலவேளை பெரிய பருமனை அடையும். வால் வளரும் போது தலைப் பகுதி சுருங்கத் தொடங்கும். இந்த வால் 50 இலட்சம் தொடக்கம் 10 கோடி மைல் வரை நீண்டதாகக் காணப்படும். 1811 இல் தோன்றிய பெரிய வால் வெள்ளி ஒன்றின் வால் 10 கோடி மைல் நீளமுடையதாகவும், ஒரு கோடி 50 இலட்சம் மைல் வரை அகலமுடையதாகவும் இருந்தது. 1774 இல் தோன்றிய வால்வெள்ளி ஆறு வால்களுடன் காணப்பட்டது.

பச்சை நிற வால்வெள்ளி பனிப் பருப் பொருட்களைக் கொண்டதாக ஊர்ட் முகில் பகுதியிலிருந்தே வருகின்றது. ஹலி போன்ற வால்வெள்ளிகள் சராசரியாக 76 வருடங்களுக்கு ஒருமுறை தோன்றுகின்றன. ஆனால் வால்வெள்ளி சூரியனை ஒவ்வொரு 50,000 வருடங்களுக்கு ஒரு முறை சுற்றி வருகின்றது. புவியின் கற்காலத்திலேயே இந்த வால் வெள்ளி இறுதியாகத் தோற்றம் பெற்றிருந்தது. வியாழன் கோளின் உள்ளக ஒழுங்கில் மார்ச் 2022 இல் முதன்முதலில் இவ் வால் வெள்ளியைக் கண்டுபிடித்தார்கள். பூமிக்கு நெருக்கமாக இவ் வால் வெள்ளி வரும் போது அது 42 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டிருக்கும். அதன் பின்னர் வெளிப்புற ஞாயிற்றுத் தொகுதியின் ஊடாகப் பின்வாங்கிச் செல்லும். ●

# யேமனில் தொடரும் அரபு நாடுகளின் ஆதிக்க போர்!

# சவூதிக்கும் ஈரானுக்கும் இடையிலான நிழல் யுத்தம்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



கிட்டதட்ட 1 கோடி மக்கள் பட்டினியாலும், காலரா நோயினாலும் மிகக் கடுமையாக யேமனில் (Yemen) பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது போல ஒரு பக்கத்தில் தாக்குதல் நடத்த சவுதிக்கு ஆயுதங்களை வழங்கி விட்டு, மறுபக்கத்தில் யேமனுக்கும் உவித் தொகையை மேற்குலகும், ஜி20 நாடுகள் வழங்கியுள்ளன என ஆக்ஸ்பாம் அறிக்கை அண்மையில் கூறியுள்ளது.

2015இல் யேமன் அரசாங்கத்தை கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா தலைமையிலான பன்னாட்டு கூட்டணிக்கு எதிராக போரிடுகின்றனர்.

யேமன் மிகக் கடுமையான உள்நாட்டுப் போர் நிகழ்ந்து வரும் சூழலில் அப்போரில் கடந்த 2015-ம் ஆண்டு முதல் தலையிட்டுவரும் சவுதி அரேபியாவிற்கு கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 43 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை ஜி-20 நாடுகள் வழங்கியுள்ளன என்பதை ஆக்ஸ்பாம் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

கடந்த 2015-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடந்து வரும் தாக்குதல்களால் உலகின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தை யேமன் சந்தித்து வருகிறது. பாதி மருத்துவமனைகள் மட்டுமே செயல்படுகின்றன. மேலும், பத்து நாட்களுக்கு ஒருமுறை மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், நீர்த்தொட்டிகள் மற்றும் குடிநீர் கிணறுகளின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடப்பதாக ஆக்ஸ்பாம் கூறியிருக்கிறது.

**யேமனின் பிரிவுக்கும் - போருக்கும் காரணம் ?**


யேமன் அதன் வடக்கு மற்றும் தெற்கிற்கும் ஐரோப்பிய காலனித்துவத்தின் பாரம்பரியத்திற்கும் இடையிலான மத மற்றும் கலாச்சார வேறுபாடுகளு டன் நீண்டகாலமாக போராடி வருகிறது. வடக்கில் அமெரிக்கா மற்றும் சவூதி ஆதரவு பெற்ற யேமன் அரபுக் குடியரசும், தெற்கில் சோவியத் ஆதரவு பெற்ற யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசும் ஒன்றிணைந்து 1990 ஆம் ஆண்டில் நவீன யேமன் அரசு உருவாக்கப்பட்டது.

1978 முதல் வடக்கு யேமனை ஆட்சி செய்த ராணுவ அதிகாரி அலி அப்துல்லா சலே புதிய நாட்டின் தலைமையை ஏற்றார். ஆனால் நாட்டின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில், ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது கடினம், ஏனெனில் இரண்டு இடங்களுக்கு இடையிலான உறவுகள் கடினமாக இருப்பினும், ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு பயணிக்க பல நிபந்தனைகள் உள்ளன. நகரத்தில் பயணம் செய்வதும் சாதாரணமானதாக இல்லை. ஏனெனில் அதற்கு நீண்ட நேரம் ஆகும்.

**ஆதிக்க போராக மாற்றம்**

யேமன் நாடு போருக்கு மத்தியில் கடுமையான பொதுமக்கள் துன்பப்படும் இடமாக மாறியுள்ளது. இப்போது எட்டு ஆண்டுகளாக இந்த சண்டை ஒரு மறைமுக ஆதிக்க போராக மாறிவிட்டது என்று பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர். யேமன் அரசாங்கத்தை கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா தலை மையிலான பன்னாட்டு கூட்டணிக்கு எதிராக போரிடுகின்றனர்.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆதரவு பெற்ற தீவிரவாத இஸ்லாமிய குழுக்கள் மற்றும் பிரிவினைவாதிகள் உள்ளிட்ட பிற போராளி களின் தலையீடு, முழு நாட்டையும் சிக்கலாக்கியுள்ளது.




**2018 ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம்**

இந்த நெருக்கடிக்கு தீர்வாக, ஐ.நா. ஆதரவுடன் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் மட்டுப் படுத்தப்பட்ட முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. 2018 ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம் உதவிக்கான முக்கிய மையமான துறைமுக நகரமான ஹொடெய்டாவில் ஒரு போர் நிறுத்தத்தை உருவாக்கியது.

ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளுக்கு இடையிலான உரசல் போரை நீட்டிப்பதாக அவதானிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சவூதி எண்ணெய் நிலையங்கள் மீதான ஏவுகணை தாக்குதலுக்கு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் பொறுப்பேற்றபோது நிலைமைகள் மேலும் மோசமடைந்தன. ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலை நடத்தவில்லை என்று ஐ.நா கண்காணிப்பாளர்கள் முடிவு செய்தனர், அதே நேரத்தில் சவுதி



தலைமையிலான கூட்டணி ஈரான் மீது குற்றம் சாட்டியது.

ஏப்ரல் 2022 இல் யேமனின் புதிய நிர்வாகக் குழு ஹவுத்தி எதிர்ப்பு படைகளை ஒருங்கிணைக்க உதவியபோது அமைதி முயற்சிகள் வேகமடைந் தன. இது அனைவரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தைகளுக்கு களம் அமைத்தது. பிற்பகுதியில், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் கூட்டணிப் படை களும் பல ஆண்டுகளில் தங்கள் முதல் நாடு தழுவிய போர்நிறுத்தத்தை ஒருங்கிணைத்தனர்.

இதன் பின் தலைநகர் சனாவில் இருந்து வணிக விமானங்களை மீண்டும் தொடங்க அனுமதித்தது மற்றும் சில எரிபொருள் கப்பல்கள் ஹொடெய்டாவில் நிறுத்த அனுமதிக்கப்பட்டன.

போரிடும் கட்சிகள் பல முறை போர்நிறுத்தத்தை நீட்டித்தன, ஆனால் ஆறு மாத ஒப்பீட்டு அமைதிக்குப் பிறகு, அதை மீண்டும் புதுப்பிக்கத் தவறிவிட்டன. இந்த ஒப்பந்தம் முறிந்ததற்கு யேமன் அரசும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். இது மீண்டும் கடுமையான சண்டைக்கு வழிவகுத்து, யேமனை ஒரு முழு அளவிலான நெருக்கடிக்குள் தள்ளியது.

**அமெரிக்க ஆயுதங்கள்**

அமெரிக்க அரசு சவுதி அரேபியாவிற்கு ஆயுதங்களை கொடுத்தது மட்டுமல்லாமல் அதற்கு அரசியல் ரீதியிலான பாதுகாப்பையும் வழங்கியது.

சவுதிக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள வாய்ப்புகள் வந்தபோது, அமெரிக்க அரசு பேசாமல் வாய்மூடி இருந்தது. அதேவேளை ஐநாவின் பல் வேறு நிறுவனங் களுக்கு வழங்கி வரும் நிதியாதாரத்தை நிறுத்துவதாக ரியாத் தலைமை மிரட்டியதாக கூறி சவுதியின் பெயரை அந்த பட்டியலிலிருந்து நீக்கினார் அன்றைய ஐ.நா தலைவர் பன்-கி-மூன்.

சவுதி தலைமையிலான எட்டு நாடுகள் யேமன் அரசுக்கு ஆதரவாக உள்நாட்டு மோதலில் தலையிடத் தொடங்கியது பிரச்சினையை மேலும் தீவிரப் படுத்தியது. அனைத்து வான் வழித் தாக்குதல்களுக்கும் இந்த நாடுகளே பொறுப்பானவையாகும்.

அதற்கு தேவையான உத்திகள், தொழில்நுட்ப வசதிகளை அமெரிக்க செய்து கொடுத்தது. சவுதி மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கு 2015-2019 காலப்பகுதியில் சுமார் 31.4 பில்லியன் டாலர் மதிப்பிலான அயுத ஏற்றுமதி நடந்துள்ளது.

இக்காலகட்டத்தில் ஜி-20 நாடுகள் யேமனுக்கு அளித்த மனிதாபிமான உதவிகளை ஒப்பிடும் போது ஆயுத ஏற்றுமதி ஐந்து மடங்கு அதிகமானதாகும். கூடுதலாக சவுதியும் தன் பங்கிற்கு 3.8 பில்லியன் டாலர் நிதியை நிவாரணமாக வழங்கியது.

அமெரிக்க மற்றும் இங்கிலாந்து நாடுகள் யேமனுக்கு தாங்கள் வழங்கும் உதவித்தொகையை விட பன்மடங்கு ஆயுத விற்பனையை செய்கின்றன. இதேவேளை ஜப்பான் யேமனுக்கு உதவித்தொகையை வழங்குகிறது ஆனால் சவுதிக்கு ஆயுதங்கள் எதுவும் ஏற்றுமதி செய்யவில்லை.

ஒவ்வொரு நாடுகளிலும் உள்நாட்டுப் போர்களை ஊக்கப்படுத்தி வளர்த்துவிட்டு, பில்லியன்கணக்கான டாலர்களை ஆயுத ஏற்றுமதி மூலம் சம்பாதித்துக் கொண்டே, மற்றொரு புறத்தில் தாம் உருவாக்கி வளர்த்த போரால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களுக்கு உதவி அளிப்பதாக வள்ளல் வேடம் போடுகின்றன.


பெரும் பணக்கார ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார அடித்தளம், பல நாட்டு மக்களின் மரண ஓலங்களின் மீதும் பிணங்களின் மீதும்தான் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன

**குழந்தைகள் உள ஆரோக்கியம்**

யேமனில் நடக்கும் மோதல் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தாலும், அது அவர்களின் மன நலனுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

சேவ் தி சில்ட்ரன் நடத்திய ஒரு ஆய்வில், பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் சோகம் மற்றும் மனச்சோர்வு உணர்வுகளுடன் போராடுவதாகக் கூறினர், பத்தில் ஒருவர் தொடர்ந்து அவ்வாறு உணர்கிறார். கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில் ஐந்தில் ஒருவர் எப்போதும் பயப்படுவதாகக் கூறினார்.

குழந்தைகள் குண்டுகள் மற்றும் நோய்களால் அன்புக்குரியவர்களை இழந்துள்ளனர், அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களைச் சுற்றியுள்ள வன்முறையைக் காண்கிறார்கள், மேலும் தங்கள் சகோதர சகோதரிகள் பள்ளியி




லிருந்து திரும்ப மாட்டார்கள் என்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, 56 வீத குழந்தைகள் தனியாக நடக்கும்போது பாதுகாப்பாக உணரவில்லை, 16 வீத குழந்தைகள் ஒருபோதும் அல்லது அரிதாகவே ஓய்வெடுக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள், மேலும் 38 வீத பராமரிப்பாளர்கள் குழந்தைகளின் கனவுகள் அதிகரிப்பதாக தெரிவித்தனர்.

இன்று உலகெங்கிலும் மோதல் மண்டலங்களில் வாழும் சுமார் 24 மில்லியன் குழந்தைகள் அதிக அளவு மன அழுத்தத்தை அனுபவிக்கக்கூடும் என்றும் லேசான மற்றும் மிதமான மன ஆரோக்கியத்தைக் கொண்டிருக்கலாம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. கூடுதலாக 7 மில்லியன் குழந்தைகள் கடுமையான மனநலக் கோளாறுகளை உருவாக்கும் அபாயத்தில் உள்ளனர்.

# விளையாட்டுத்துறை முன்னேற்றத்தை வகுக்க நிபுணர் குழுவை நியமியுங்கள்!

## ஜனாதிபதி ரணில் பணிப்புரை

கொழும்பு, மார்ச் 26

இலங்கை விளையாட்டுத்துறையின் முன்னேற்றம் மற்றும் அதன் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கான நிபுணர்கள் குழுவொன்றினை நியமிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் உட்பட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கினார்.

விளையாட்டு, கல்வி அமைச்சர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் உட்பட பாராளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களின் பங்கேற்புடன் கூடியதாக மேற்படி குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுத் தொகுதியைப் பார்வையிட நேற்று மேற்கொண்டிருந்த கண்காணிப்பு விஜயத்தின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து விளையாட்டுத் துறைகளும் உள்ளடங்கும் வகையில் 100 வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு அவசியமான வசதிகள் மற்றும் பயிற்சிளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி இதன்போது விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார் .

வருடாந்தம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சர்வதேசத்தை வெற்றிக்கொள்ளக்கூடிய வீர வீராங்கனைகளை ஒரு சில வருடங்களுக்குள்ளேயே இந்நாட்டில் உருவாக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அதேபோல் பிள்ளைகளின் விளையாட்டுத் திறன்களை அவர்களில் 10 -12 வயது காலத்தில் அறிந்துகொள்ள வேண்டியுள்ளதோடு, அதன்படி அவர்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொழும்பின் பிரதான பாடசாலைகள் உள்ளடங்களாக நாட்டின் 100 பாடசாலைகளில் பேஸ் போல் விளையாட்டை இவ்வருடத்தில் பிரபல்யப் படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, பேஸ் போல் விளையாட்டில் ஆசியாவின் பிரதான தளமாக இலங்கை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பல்வேறு விளையாட்டுத் துறைகளிலும் தாய் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தி, பின்னர் ஓய்வு பெறும் வீர வீராங்கனைகளுக்கு, அந்தத் தகுதிகளை அடிப்படைத் தகைமையாகக் கருதி பட்டப் படிப்பை பூர்த்தி செய்வதற்கான வசதிகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் வலியுறுத்தினார்.

நேற்றுக் காலை தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, பிரதான விளையாட்டு மைதானம், பேஸ்போல் மைதானம் மற்றும் பயிற்சித் தளத்துக்குச் சென்று அங்கு விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விளையாட்டு வீரர்களின் விபரங்களைக் கேட்டறிந்தது டன் அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

விளையாட்டு வீர வீராங்கனைகளின் பயிற்சிக்காக உள்ள நீச்சல் தடாகம், கிரிக்கெட் மைதானம், ஓடுதளங்கள் போன்ற பல்வேறு இடங்கள் பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பொருத்தமற்றதாக இருக்கின்றமை இதன்போது அவதானிக்கப்பட்டது.

அதற்கிணங்க, முன்னுரிமைப் பட்டியலொன்றைத் தயாரித்து, குறித்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, விளையாட்டுத் தொகுதியைப் புனரமைப்பதற்கு அரசாங்கம் தேவையான நிதியை ஒதுக்கியுள்ளதாகவும், அதிகாரிகள் பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்து தேவையற்ற செலவுகளை முன்வைக்க வேண்டாம் என்றும் தெரிவித்ததுடன், அவ்வாறு நிதி வழங்க இந்த நேரத்தில் அரசாங்கம் முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த மைதானத்தின் பராமரிப்பு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சு கடந்த காலங்களில் உரிய கவனம் செலுத்தவில்லை எனவும், அரசாங்கம் செலவிடும் ஒவ்வொரு ரூபாவிற்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாடு பூராகவும் உள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடக்கூடிய முழுமையான விளையாட்டுத் தொகுதியாக தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கம், பேணப்படவேண்டுமென ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் , எதிர்காலத்தில் விளையாட்டுப் பட்டப் படிப்பை நிறைவுசெய்யக் கூடிய ஒரு விளையாட்டு பல்கலைக்கழகமாக அதனை உருவாக்கும் இலக்கிற்கு அமைவாக செயற்படவேண்டுமெனவும் தெரிவித்தார்.

தியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டுத் தொகுதியின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் லால் சந்திரசிறி, விளையாட்டு தொகுதியின் தற்போதைய நிலை மற்றும் தேவைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

நீர்ப்பாசனம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த, முன்னாள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் பசிது குணரத்ன, விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதி காரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

---

கல்வி tv CHANNEL-1

**26.03.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**26.03.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# யாழின் நடமாடும் 'பெட்டி மீன்கள் வீடு தேடி வரும் மீன் வியாபாரிகள்!

தே.கவினயா

பீம் பீம் என்கின்ற மீன் கோனின் சத்தம் கேட்டால் போதும் நம்ம ஊர் நடமாடும் பெட்டி மீன் வியாபாரி களை சுற்றியும் சனம் தான். முச்சந்திக்கு மீன் வியாபாரி கள் வந்துவிட்டால் இந்த மீன் என்ன விலை?, இன்னும் கொஞ்ச மீன் போடுங்கோ, மீனை வெட்டி கொடுங்க என்ற சத்தங்கள் ஒலிக்க தொடங்கிவிடும். இவ்வாறாக நடமாடும் பெட்டி மீன் வியாபாரிகளுக்கு என்று தினசரி வாடிக்கைாளர்களே உள்ளனர். வாடிக் கையாளர்கள் மீன் பெட்டியை எட்டிப் பார்த்து விட்டால் சரி மீன்காரன் குரலினையும், மீன் கோனின் சத்தத்தையும் உயர்த்த ஆரம்பித்து விடுவான்.

"என்னம்மா வழமை போல கைல பையோட வந்துட் டீங்க. இன்னைக்கு என்று பாத்து மீனும் குறைவா தான் இருக்கு"

"கிட்ட வா முதல்ல பெட்டியைப் பாப்பம். ஏன் டாப்பா வீணாப் போன மீன்களை கொண்டந்திருக் கிறியே?"

"ஏன் இப்படி சொல்லுறியள், நல்ல மீன் இப்படித் தான் இருக்கும். வேணும் எண்டா வடிவா பாருங்க." என்று கூறிக்கொண்டேயே மீன் பெட்டியை சுற்றி மூடிக்கிடந்த போர்வையை அகற்றி...

"வேணுமென்றால் மற்ற மீன் பெட்டிகளையும் பாத்துவிட்டு வாங்கோம்மா?"

"சரி இந்த மீனில ஒரு 250 ரூபாவுக்கு போடு"

அவனும் சரி என்று எட்டு மீன்களை பெட்டியின் மேலே எடுத்து வைப்பான்.

"ஏன்டா தம்பி 250 ரூபாவுக்கு வெறும் எட்டு மீன் தானிருக்கு. அதுவும் வெறும் சின்ன மீனா கிடக்கு. இன்னும் ரெண்டு மீன வை"

"அம்மா இந்த கொஞ்ச நெஞ்ச காசுல தான் எங்கட புலப்பும் ஓடுது. இதே மீன சந்தைக்கு போய் வாங்கு வீங்களா இருந்தா டபிள் வில குடுத்து இருப்பீங்க. விலையும் பேசமாட்டீங்க உண்மை தானே."

"அது என்னமோ உண்மை கததான். நீங்க ஊருக்க மீன் கொண்டு வாரதால சந்தைக்கு போற செலவும் மிச்சம், சுலபமா மீனும் வாங்குறம். அதோட சந்தையில் கிடைக்கிற மீனெல்லாம் ஓரளவுக்கு நினைச்ச மாதிரி கிடைக்குது."

"அப்ப காசப் பாக்கம ஓரளவுக்கு பாத்து வாங்குங் கம்மா. நின்னு விக்கிறதிலயும் சைக்கிள் மிதிக்கிறதிலயும் நம்ம காலம் முடிஞ்சிடும் போல. மோட்டர் சைக்கிளில மீன கொண்டு திரிஞ்சு விற்கலாம் என்னு பாத்தா இந்த காலத்தில மீன் விக்கிற காசு எரிபொருள் சிலவுக்கே போயிடும்" என கதையும் காரியமுமாய் மீனினை விற்று முடித்து விடுவான். பின் வழமை போல அருகில் உள்ள தேநீர் கடையில் தேநீர் குடிக்க அமர்ந்து விடுவான். தேநீர் அருந்தியபடியே தனது தொழில் பற்றியும், கடலுக்கு சென்று மீன் பிடித்து வருபவர்கள் பற்றியும் கூறிக்கொண்டிருந்தான்.

யுத்த காலப்பகுதியில் அடிக்கடி இடம்பெற்ற இடம் பெயர்வு காரணமாக நான் மூன்றாம் வகுப்புடனேயே கல்வியை நிறுத்திவிட்டேன். பதினாறு வருடங்களாக மீன் விற்கும் தொழிலிலினை செய்து வருகின்றேன். என்னைப் போல ஊருக்குள் மீன் விற்பவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடிப்பதில்லை. தினமும் அதிகாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம், தொண்டமனாறு, வல்வெட் டித்துறை என மீனைக் கொள்வனவு செய்யக் கூடிய இடங்களுக்கு சென்று குறிப்பிட்ட அளவு மீனினை கொள்வனவு செய்து ஊருக்குள் விற்கின்றோம். மோட்டார் சைக்கிள் என்றால் தான் 5.00 மணி இதுவே சைக்கிளாக இருப்பின் 3 மணிக்கே மயிலிட்டியில் இருந்து புறப்பட்டு விடுவோம். சைக்கிளில் பருத்தித் துறை சென்று மீன் கொள்வனவு செய்வதாக இருந்தால் ஒரு மணித்தியாலம் எடுக்கும். மீன்பிடிக்காக கடலுக்கு சென்று முதலில் வரும் வள்ளத்தில் உள்ள மீன்களை கொள்வனவு செய்வதிலும் பார்க்க அடுத்தடுத்த வள்ளத்தில் வரும் மீன்களை கொள்வளவு செய்வது இலாபகரமானது. காரணம் அதிகளவான மீன் வியா பாரிகள் முதல் வள்ளத்தில் வரும் மீன்களை கொள்வனவு செய்து கொண்டு தொழிலுக்கு சென்று விடுவார்கள். 100 பேர் நின்று மீனை கொள்வனவு செய்யும் இடத்தில் வெறுமனவே 20 அல்லது 10 மீன் வியாபாரிகள் நின் றால் குறைவான விலையில் மீனைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். கடற்றொழிலுக்கு சென்று வரும் முதல் வள்ளம் காலை 6 மணிக்கு கரை சேர்ந்து விடும். அடுத்த வள்ளம் கரையை வந்து சேர்வதற்கு கிட்டத்தட்ட 8 மணி ஆகிவிடும். அதனால் பெரும் பாலான மீன் வியாபாரிகள் 6மணி வள்ளத்தில் பிடித்து வருகின்ற மீன்களை கொள்வனவு செய்துவிடுவார்கள். நெத்தலி, சூடை, போன்ற சின்ன இன மீன்களையும் விளைமீன், சீலா, ஊலா போன்ற பெரிய வகை மீன் களையும் நண்டு, இறால், கணவாய் போன்றவற்றையும் விற்பனைக்காக கொள்வனவு செய்கின்றோம்.

இன்றைய நிலைமையில் 1கிலோ கிராம் மீனை 1200, 800, 900 ரூபா என பல விலைகளில் கொள்வனவு



**தினமும் மொத்தமாக 15000 ரூபாவிற்கு மீனை கொள்வனவு செய்து ஊருக்குள் விற்கின்றோம். அதில் 5000 ரூபாவை இலாபமாக பெற்றுக் கொள்வதுண்டு. இதில் மீனினை விற்பதற்கான பொலித்தீன் பை, எரிபொருள் செலவு, உணவுச் செலவு என்பவை போக மீதமுள்ள பணத்தை அன்றாட செலவுக்கு எடுத்துக் கொள்கின்றோம்.**

செய்கின்றோம். மீனினை கொள்வனவு செய்யும் சமயங் களில் தராசில் 1கிலோக்கிராம் 100கிராம் என மீன் எடை காட்டும் போது 100கிராமிற்கு எங்களிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஒரு நாளைக்கு மீன்பிடித்து வருபவர்களிடம் இருந்து மொத்தமாக 15000 ரூபாவிற்கு மீனை கொள்வனவு செய்து ஊருக்குள் விற்கின்றோம் எனில் அதில் இருந்து 5000 ரூபாவை இலாபமாக பெற்றுக் கொள்வதுண்டு. இதில் மீனை விற்பதற்கான பொலித்தீன் பை, எரி பொருள் செலவு, உணவுச் செலவு என்பவை போக மீத முள்ள பணத்தை அன்றாட செலவுக்கு எடுத்துக் கொள் கின்றோம். எரிபொருள் செலவைக் குறைக்க நினைக் கும் மீன் வியாபாரிகள் மீனை விற்க துவிச்சக்கர வண்டி களை பயன்படுத்தி கொள்கின்றார்கள்.

"கடற் தொழிலில் மறக்க முடியாத விடயம் ஒன்று இருக்கின்றது. யுத்தகாலத்தில் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற எனது அப்பாவிற்கு பெரிய பாரை மீன் கிடைத் திருந்தது. பாரை மீன் என்பது நல்ல சுவையான, அதே சமயம் அதிக பெறுமதியான மீன் வகையாகும். அன் றைய காலத்திலேயே அதனை ஐந்து லட்சம் ரூபாவிற்கு விற்றிருந்தோம்"

கணவாய், நண்டு, இறால் போன்ற கடல் உணவுகள் சாதாரணமாகவே விலை அதிகம். அதிலும் கடலில் இருந்து பிடித்து வரப்படுகின்ற இவ் உணவுகளில் முதலாம் தர கணவாய், இரண்டாம் தர கணவாய் என தெரிவு இடம்பெறும். இதில் முதல் மூன்று தடவை களில் தெரிவுக்குட்படுத்தப்படும் நண்டு, இறால், கண வாய் போன்றன நிறுவனங்களால் கொள்வனவு செய்யப் படுகின்றது. அனேகமாக தெரிவுக்குட்படுத்தப்பட்ட நண்டு, இறால், கணவாய்களில் இருந்து நான்காம் தர தெரிவினையே கொள்வனவு செய்து ஊருக்குள் விற்க கூடிய மாதிரி இருக்கும்.

மீன் பிடிக்கும் சமயம் மீன் வலையில் படும் போது மீனிலிருந்து இரத்தம் கசியும். இவ்வாறு பிடிக்கப்படு கின்ற மீன்கள் மேல் ஐஸ் கட்டியைக் போட்டு பாது காத்து விற்க வேண்டும். ஐஸ் கட்டியினை நாளுக்கு நாள் மாற்ற வேண்டும் இல்லையென்றால் மீன் பழுத டைந்து விடும். பெரும்பாலும் இவ்வாறு பாதுகாக் கப்படும் மீன்களை ஒரு கிழமைக்குள்ளேயே விற்றுவிட வேண்டும். கரைவலை மூலம் பிடிக்கும் மீன்களை சில மணி நேரங்கள் ஐஸ் போடாமல் விற்கலாம்.

மக்கள் மீன்களை சந்தைக்கு சென்று வாங்குவதற்கும் நம்மைப் போன்ற நடமாடும் மீன் வியாபாரிகளிடம் வாங்குவதற்கும் இடையில் வித்தியாசம் உண்டு. தினக்கூலித் தொழிலாளர்கள் சந்தைக்கு சென்று மீன் வாங்குவதற்குப் பதிலாக எங்களிடம் மீனினை வாங்குவது இலாபமாக உள்ளது என்பார்கள். நாங்கள் மீனினை தராசில் அளந்து விற்பதில்லை. பெரும்பாலும் மீனினை கைக்கணக்கிற்கே விற்கின்றோம். மக்களும் எங்களுடன் சகயமாக பேரம்பேசி மீனினை பெற்றுக் கொள்கின்றார்கள். சில சமயம் வாடிக்கையாளர்களின் வீடுகளிற்கே சென்று மீனினை கொடுத்து விட்டு பணத்தினை பெற்றுக் கொள்வோம். மக்கள் அசைவு உணவு எடுத்துக் கொள்ளாத நாட்களில் ஊருக்குள் மீன் வியாபாரிகளும் குறைவாகவே காணப்படுவர். அவ் வாறு பார்த்தால் மீன் வியாபாரிகள் பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளில் மீன் விற்பனைக்காக ஊருக்குள் வருவதில்லை.

மீன்களை சந்தையில் விற்கும் மீன் வியாபாரிகளிடம் இருந்து மீனின் எடைக்கு ஏற்றால் போல கிலோவிற்கு 10 ரூபா வரி அறவிடப்படுகின்றது. இதனை விட ஊருக்குள் சில திறந்த வெளிக் கொட்டகைகளில் மீன் விற்பதற்கு 100 ரூபா வரி அறவிடப்படுகின்றது. நடமாடும் மீன் வியாபாரிகளுக்கு என்று சமாசப் பதிவு என்று ஒன்று இருக்கும். அதில் குறிப்பிடப்படும் ஊருக்குள் அப்பால் சென்று மீனினை விற்பதாக இருந்தால் வரி கட்ட வேண்டும். குறிப்பாக மீன் சந்தை இருக்கின்ற எல்லலைக்குள் சென்று மீன் விற்பனை தவிர்த்துக் கொள்வோம். இதுவே நகர்புறங்களில் நடமாடும் மீன் விபாரிகளின் நடமாட்டம் குறைவாக இருப்பதற்கான காரணமாகும். சுருக்கமாக கூறினால் வரி செலுத்தினால் தான் உரிமையோடு தொழிலை மேற்கொள்ளலாம்.

ஊருக்குள் அலைந்து திரிந்து மீன் விற்பதனை விட கடலுக்கு சென்று மீன்பிடித்து மொத்தமாக மீன் வியாபாரம் செய்வது இலகுவான தொழில் என்று கூறிவிட முடியாது. கடலுக்கு செல்லும் மீனவர்கள் முதல் நாளே மதியம் 2.00 மணிளவில் உணவுகளையும் தயார்படுத்திக் கொண்டு கடலுக்கு புறப்படுவார்கள். குறைந்தது 2மணித்தியாலங்கள் வள்ளத்தில் பயணம் செய்த பின்னரே கடலில் மீன் உள்ள இடத்தினை அறியும் திசைகாட்டி மூலம் மீனுள்ள இடத்தினை அறிந்து வலை வீசி விட்டு வள்ளத்தில் அணியம் எனும் இடத்தில் தங்கிக் கொள்வார்கள். பின்னர் அதிகாலை 2 அல்லது 3 மணியளவில் வீசிய வலையினை இழுத்து அதில் உள்ள மீன்களை வள்ளத்தில் ஏற்றிக் கொண்டு கரை வந்து சேர்வார்கள். ஒரு தடவை வள்ளத்தில் கடலுக்கு சென்று மீன் பிடித்து கொண்டு வருவதாக இருந்தால் ஐம்பது லீட்டர் மண்ணெண்ணெய் தேவைப் படுகின்றது. அதனாலேயே எரிபொருள் விலையேறும் போது மீனின் விலை ஏறுகின்றது. சில சமயம் மீன்பிடி வலைகள் நண்டு மற்றும் பெரிய வகை மீன்கள் கடித்து வலை சேதாரமாவதுண்டு.

மாரிகாலங்களில் அதிகமான மீன்கள் வலையில் பிடிபடும் என்று கூறுவார்கள். தைப்பூச காலங்களில் அதிகமாக வாலை மீன் பிடிக்கப்படும். நிலவு நேரங் களில் மீன் பிடிக்க வலை வீசினால் வலையில் மீன் வராது என்பார்கள். ஏன்னெனில் நிலவு நேரங்களில் கடல் வெளிச்சமாக இருக்கும் மீன்களின் கண்களுக்கு வலை தென்படும் என்பதனால் மீன் வலையில் அகப்படு வதில்லை. இதனால் செக்கல் நேரத்தில் (மாலைப் பொழுதில்) கடலில் மீன் பிடித்துக் கொள்கின்றனர். கடலுக்கு மீன்பிடிக்க என்று சென்று மீன் இல்லாமல் வந்த சமயங்களும் உண்டு.

கடலுக்கு சென்று மீன் பிடிப்பவர்களுக்கான கடல் வரியை கடல்வரிக்கு என்று அமைக்கப்பட்டிருக்கும் சங்கம் தீர்மானிககின்றது. இச் சங்கத்தில் தலைவரும், 10 பேர் கொண்ட குழுவும் காணப்படுகின்றார்கள். இவர் கள் குறிப்பிட்ட சங்கத்தை சுற்றி இருக்கின்ற சமூக அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்படுகின்றார்கள். மீனவர்களிடம் கடல்தொழிலுக்கென்று சங்கப்பதிவு ஒன்று இருக்க வேண்டும். கடற்பரப்பில் மீன்பிடிக்கும் போது இச் சங்கப் பதிவு அட்டைகளை கைவசம் வைத்திருக்க வேண்டும். கடற்பரப்பில் சில எல்லைகளை தாண்டி மீனவர்கள் மீன்பிடிக்க இயலாது. குறிப்பாக இந்திய கடற்பரப்பிற்குள் சென்று மீன்பிடித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறான அசாதா ரண சூழ்நிலைகளில் இச் சங்கப் பதிவு அட்டைகளே உதவிகரமாக இருக்கும். எதிர்பாராதவிதமாக சங்கத் திற்கு சார்பான ஒரு மீனவர் இறந்தால் மீனவர்கள் கடற்தொழிலுக்கு செல்ல சங்கத்தினால் தடை விதிக்கப் படுவதுமுண்டு. தடையை மீறி கடலுக்க சென்று கடற் றொழிலில் ஈடுபட்டால் தண்டப்பணம் அறவிடப் படுகின்றது.

இவ்வாறாக சங்கத்தில் சேரும் தண்டப்பணமானது, சில சமயம் கடலுக்கு மீன்பிடிக்க சென்றவர்கள் மீண் டும் கரைக்கு வராது போனால் அவர்களை தேடி செல்வ தற்கும், மீனவன் ஒருவன் இறந்திருந்தால் அவனின் குடும்பத்திற்காகவும் செலவு செய்யப்படுகின்றது.

கடற்றொழிலில் உயிர்ஆபத்துக்களும் அதிகமாகவே உள்ளது. தரையினை விட கடலில் தான் விஷம் கூடிய பாம்பு வகைகள் இருக்கின்றது. இவை சில சமயங்களில் வலையில் மீன்களுடன் சேர்ந்து பிடிபட்டு கடற் றொழி லில் ஈடுபடுபவர்களுக்கு ஆபத்தாக அமைந்துவிடு கின்றது. இத்துடன் கடற்தொழிலுக்கு செல்பவர்கள் நீந்த தெரிந்திருக்க வேண்டும். வள்ளங்களில் துவாரம் ஏற்பட்டாலோ, அல்லது வேறு காரணங்களினால் வள்ளம் கடலில் மூழ்குவதற்கான வாய்ப்பு இருந்தாலோ நீந்த தெரிந்திருந்தால் உயிரை காப்பாற்றிக் கொள்ள லாம். இதற்காகவே போயா உடை போன்ற மிதவை களை முன்னாயித்தம் செய்து வைத்திருப்பார்கள். பல சமயங்களில் புயலினால் வள்ளங்கள் புரண்டு மீனவர்கள் கடலில் காணமல் கூட போயிருக்கின்றார்கள். சில சமயம் காணமல் போனவர்களின் உடல் கூட கிடைப்ப தில்லை. எவ்வாறு இருப்பினும் இன்னமும் உயிரை கையில் பிடித்து இத் தொழிலை செய்து கொண்டு தான் இருக்கின்றோம். என கூறி முடித்தார்.

(கட்டுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை நான்காம் வருட மாணவி)

## நாவலர்...

யாழ்.மாநகர சபை அமர்வுகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது 45 மாநகரசபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரம் குறித்த விடயம் நிராகரிக்கப்பட்டதுடன் எக்காரணம் கொண்டும் மத்திய அரசாங்கத்திடம் அதனைக் கையளிக்கமாட்டோம் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிற்பாடு இந்து கலாசார அமைச்சும் யாழ்.மாநகர சபையும் இணைந்து குறித்த மண்டபத்தை நிர்வகிப்பது தொடர்பில் இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட வரைவு தொடர்பாக சபையில் விவாதிக்கப்பட்டு உறுப்பினார்களினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் இந்து கலாசார அமைச்சுக்கு அறிவித்து அதனை நிர்வகிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் முதல்வராக வி.மணிவண்ணன் பணிபுரிந்த காலத்தில் குறித்த மண்டபம் தனியார் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டது. அத்துடன் சைவமகா சபையின் அனுசரணையுடன் யாழ்.மாநகர சபை ஆறுமுகநாவலரின் சிலையையும் நிறுவியிருந்தது.

அத்துடன் குறித்த மண்டபத்தை புனரமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி யாழ்.மாநகர சபையின் வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டு யாழ்.மாநகர சபையினால் கோள்வி கோரப்பட்டு குறித்த பணிகள் யாழ்.மாநகர சபையினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ்.மாநகர சபையை வெளியேறுமாறும் அதன் பிற்பாடு இந்து கலாசார அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பதவியை...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

தேர்தலுக்காக - அதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நாம் போராடி வருகின்றோம். உயர் நீதிமன்றம் சென்று சாதகமான தீர்ப்பு ஒன்றையும் பெற்றுள்ளோம். நீதிமன்றத் தீர்ப்பை மீறுகின்றவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும்.

ரணில் விக்கிரமசிங்கவும் தண்டனையை அனுபவிப்பார். அவர் ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரை தப்பித்துக்கொள்ளலாம். பதவியை இழந்ததும் அவர் நீதிமன்றம் செல்ல வேண்டிவரும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு நடநதது தெரியும்தானே. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அவருக்கு எதிராக நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

அப்படித்தான் ரணிலும் தண்டனையை அனுபவிப்பார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவு என்னவாக இருக்கும் என்று அரசுக்குத் தெரியும். அதனால்தான் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது அரசு.

தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் இல்லை என்கிறார் ஜனாதிபதி ரணில். ஜனநாயகத்தை இப்படி மீற முடியாது. தேர்தலை நடத்தினால்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்கள். ஜனநாயகம் உள்ளது என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்.

பொருளாதார வளர்ச்சிக்குத் தேர்தல் மிகவும் அவசியம். மகிந்தவின் ஆட்சியில் ஜனநாயகம் மீறப்படுகின்றது என்று கூறி ஜி.எஸ்.பி. பிளஸ் இல்லாமல் போனது. பொருளாதார வளர்ச்சி என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் தான் தங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ரணிலின் ஆட்சியிலும் அது மீண்டும் இல்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு-என்றார்.

## பொலிஸ்மா...

தொடர்பில் இழுபறி நிலை காணப்பட்டது.

தற்போதைய பொலிஸ்மா அதிபருக்குத் தற்காலிக பதவி நீடிப்பை வழங்குவதற்கும், அதன்பின்னர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக்குவதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், ஜனாதிபதி செயலாளர், பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (அ)

## உள்ளூராட்சி..

மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாகத் தெரிவித்த அவர் , சவாலை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதிக்கு நாட்டை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

நேற்று கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளபோதிலும் , மக்களுக்கு பரந்தளவில் சலுகைகளை வழங்குவது சிரமமானதாகும்.

எவ்வாறிருப்பினும் எம்மால் விரைவில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி கிடைக்கப் பெற்றுள்ளமைக்கு இந்தியா மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் எதிர்க்கட்சியிலுள்ளவர்களைத் தவிர வெளிநாட்டவர்கள் உட்பட ஏனைய தரப்பினருக்கு பொறுப்புணர்வு காணப்படுகிறது.

நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதை அவர்கள் விரும்பவில்லை. இந்நாட்டில் கடன் பெறாத எவரேனும் உள்ளனரா? அவ்வாறிருக்கையில் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் எனக் கூறுவது அடிப்படையற்றது.

இன்னும் தாமதமாகவில்லை. எனவே அரசாங்கத்துடன் இணையுமாறு எதிர்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம். நட்டத்தில் இயங்கும் எந்தவொரு நிறுவனத்தையும் பொறுப்பேற்பதற்கு எவரும் முன்வருவதில்லை.

அத்தோடு அரசாங்கம் வர்த்தகத்தில் ஈடுபடவேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை. அரசாங்கத்தின் பொறுப்பு மக்களுக்கான சேவைகளை வழங்குவதாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக நாட்டை மாற்ற முடியாதல்லவா? சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களை நிறைவு செய்து, நாடு சற்று கட்டியெழுப்பப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்தலாம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மாத்திரமல்ல. ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது பாராளுமன்றத் தேர்தலையோ நடத்தி எவரும் நாட்டை ஆட்சி செய்யலாம்.

அரசியலை முன்னிலைப்படுத்தியமையின் காரணமாக இதுவரை காலமும் நாம் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தோம். அநுரகுமார திஸாநாயக்கவோ , சஜித் பிரேமதாஸவோ சவாலை ஏற்கவில்லை.

எனவே சவாலை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதிக்கு நாட்டை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இன்னும் ஒரிரு வாரங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணைவார்கள். இதனை நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன் - என்றார். (அ)

# யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் தலைவராக பூங்குழலி சிறிசங்கீர்த்தனன்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் புதிய துறைத் தலைவராக விரிவுரையாளர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனனை நியமிக்க யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று கூடிய மாதாந்த பேரவை கூட்டத்தின்போதே இந்த நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம் கலைப்பீட பீடாதிபதியாக பொறுப்பேற்ற நிலையில் ஊடகக் கற்கைகள் துறையின் துறைத் தலைவர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

இந்த நிலையில், ஊடகக் கற்கைகள் துறையின் பதில் துறைத் தலைவராக விரிவுரையாளர் பூங்குழலி சிறிசங்கீர்த்தன் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது துறைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# வண்ணார்பண்ணை ஞான வைரவர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். வண்ணார்பண்ணை நல்லதண்ணீர்க் கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9.20 மணிமுதல் 10.40 மணிவரையுள்ள ரிஷப லக்கின சுபவேளையில் நடைபெறுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த பூர்வாங்க கிரியைகளையடுத்து, நேற்று முதல் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறுகின்றது.

கொக்குவில், 'தற்புருஷசிவம்' சிவஸ்ரீ சந்தனக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறுகின்றன.

## நாணய...

இந்தியாவே ஏற்படுத்திக் கொடுத்ததாக தெரிவித்த அவர், முதலாவதாக கடன் மறுசீரமைப்புக்கு இந்தியாவே உடன்பட்டது என்பதையும் நினைவுபடுத்தினார். (அ)

## இழுபறியில்...

ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான எந்தவொரு வாக்குச் சீட்டும் அரச அச்சுத் திணைக்களத்திடமிருந்து இதுவரைல் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

## தென்னாபிரிக்கா...

அதன் அடிப்படையில் இலங்கைக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்க தென்னாபிரிக்க அதிகாரிகள் முன் வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

1948 முதல் 1994 வரை தென்னாபிரிக்கா வில் நிலவிய, நிறவெறி முடிவுக்குப் பிறகு அந்த நாட்டில், இன சமூகங்களுக் கிடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்து வதற்காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்குவதும் இந்த திசையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளில் அடங்கும் என இலங்கை முன்னதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவித்திருந்தது.

அந்த வகையில் தென்னாபிரிக்கத் தலைவர்கள் இத்தகைய பொறிமுறையின் ஊடாக நல்லிணக்கத்திற்கான ஏற்படுத்தும் அணுகுமுறைகளை பகிர்ந்து கொண்டதாக அமைச்சர் சப்ரி கூறினார்.

இதன் அடிப்படையில் தென்னாபிரிக்க அனுபவத்தின் அடிப்படையில் இலங்கையில் பொறிமுறையை அமைப்பதற்கு ஒரு செயற்குழு நியமிக்கப்படும்.

இதற்காக இலங்கையின் அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்படும் என்றும் சப்ரி தெரிவித்தார். (அ)

## பயங்கரவாத...

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் எற்பாட்டில், பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும், மக்கள் சக்தியை கட்டியெழுப்புதல் தொடர்பான பொதுக்கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கின் பிரச்னையை அறியும் தெற்கு மனிதர்களும், தெற்கின் பிரச்னையை அறியும் வடக்கு மனிதர்களும் உருவாக்கப்பட வேண்டும். அதுவே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு. அதற்கான முதற்கட்டமாகவே கருத்தரங்கு யாழில் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கவேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே ஆணித்தரமான எமது நிலைப்பாடு. தற்போது அரசாங்கம் புதிதாகச் சட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

அதில் போராட்டங்களின்போது சமூக ஊடங்களின் மூலம் அரசுக்கு எதிராகச் செயற்பட முடியாது என்பதைக் கொண்டுவந்துள்ளனர் - என்றார். (அ)

## ஹர்ஷவை...

ரணில் விக்கிரமசிங்க கைவிடாது தொடர்ந்தும் முயற்சி செய்து வருகின்றார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

குறிப்பிட்ட தகவலின்படி ரணிலுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ஹர்ஷ டி சில்வா ஆகிய மூவரே தேவைப்பட்டனர்.

மனுஷ, ஹரின் ஆகியோர் ஏற்கனவே அரசுடன் இணைந்து விட்டார்கள்.

ஹர்ஷவை அரசுடன் இணையுமாறு ரணில் பல தடவைகள் பேசிவிட்டார். நிதி அமைச்சு தருவதாக வாக்குறுதி வழங்கியுள்ளார்.

ஆனால், ஹர்ஷ விரும்புவதோ தனித்துச் செல்லாமல் கட்சியுடன் போய்ச் சேர்வது தான்.

ஆரம்பத்தில் ஹர்ஷவை ஜனாதிபதியாக்குவோம் என்ற கூற்றை முன்வைத்தவர் ஹரின்.

அரசுடன் இணையும் முன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் பல தடவைகள் பேசினார் ஹரின்.

குறைந்தது கட்சியில் இருந்து 5 பேரையாவது அரசுடன் சேர்ப்போம். இந்தப் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உதவுவோம் என்றார் ஹரின். ஆனால் ஹரினின் எந்த கதையையும் சஜித் கேட்கவில்லை.

இதனால் மனுஷவையும் இணைத்துக்கொண்டு அரசுடன் சேர்ந்தார் ஹரின்.

இப்போது ஹரின், ரணிலின் பணிப்புரைக்கமைய ஹர்ஷவையும் அரசுடன் சேர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார் என்று அறிய முடிகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## 20ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கும் சம்பளம்!

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை தொழில் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜாஎல பிரதேசத்தில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

அடுத்த சில மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் இருபதாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும்.

மேலும் பலர் வருமான வரி செலுத்துபவர்களாக மாறுவார்கள் - என்றார். (அ)

## 900 சுற்றுலாப் பயணிகளுடன் கொழும்பு வந்த சொகுசு கப்பல்



கொழும்பு, மார்ச் 26

900 சுற்றுலா பயணிகள் மற்றும் 463 பணியாளர்களுடன் 'வைக்கிங் நெப்டியூன்' என்ற அதிசொகுசு பயணிகள் கப்பல் இலங்கையை வந்தடைந்தது.

நோர்வேயின் 227 மீற்றர் நீளமான குறித்த அதிசொகுசு பயணிகள் கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

தாய்லாந்திலிருந்து இருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் இன்று வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, கண்டி, காலி, பெந்தோட்டை, பின்னவல போன்ற இடங்களை அவர்கள் பார்வையிட உள்ளனர் என தகவல்கள் தெரிவித்தன. (அ)

# 61 பில்லியன் டொலராக உயரும் இலங்கையின் அரசமுறை கடன்

### சுட்டிக்காட்டுகின்றார் தயாசிறி

கொழும்பு, மார்ச் 26

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கடனை தொடர்ந்து இலங்கையின் அரசமுறை கடன் 61 பில்லியன் டொலராக உயர்வடையும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஆகவே நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைவதும், பட்டாசு வெடித்துக் கொண்டாடுவதும் அர்த்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும்போது சமூக கட்டமைப்பில் என்றும் அமைதி நிலவாது, போராட்டம், முரண்பாடுகள், ஏற்றத்தாழ்வு ஆகியன மாத்திரம் மிகுதியாகும்.தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு துறைசார் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்களை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தவேண்டும்.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம், ஆனால் அந்த திட்டங்கள் வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு என குறிப்பிட்டுக் கொண்டு அரச நிறுவனங்களை விற்கும் தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. நாட்டில் விற்பதற்கு மிகுதியாக அரச வளங்கள் ஏதும் இல்லாத காரணத்தினால் துறை சார் நிறுவனங்களில் அரசுக்கு சொந்தமான பங்குகளை விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ரெலிகொம் நிறுவனம் கடந்த ஆண்டு (2022) வரி செலுத்தலுடன் 108 மில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்யும்போது அதனுடன் தொடர்புடைய மொபிடெல் தரவு கட்டமைப்பையும் வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்க நேரிடும். நாட்டில் விற்பதற்கு தேசிய வளங்கள் ஏதும் இல்லாத நிலையில் நாட்டின் இறையாண்மையுடன் தொடர்புடைய முக்கிய அம்சங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். - என்றார். (அ)

# தேர்தலுக்கு அஞ்சும் ஆட்சியாளர்கள் நாட்டை எப்படிக் கட்டியெழுப்புவர்?

### சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, மார்ச் 26

"நாட்டை ஆட்சி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரச தரப்பினர் தேர் தலை நடத்தினால் தாம் படுதோல்வி அடைவோம் என்று தெரிந்தே தேர்தலை ஒத்திவைத்திக் வைத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சும் அணியினர் எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றார்கள்?" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

பொரளை குப்பியவத்தையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

ரணில் தலைமையிலான யானை - காகம் - மொட்டு அரச தரப்பினர் தேர்தலை நடத்தாதிருப்பதற்குப் பாரிய சதித்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

தேர்தலுக்கு ஒதுக்கப்படும் பணத்தை வழங்காமல், நீதிபதிகளை விமர்சனம் செய்தும், அவர்களைக் குறைமதிப்புச் செய்தும் மிரட்ட முயற்சிக்கின்றனர்.

நாட்டு மக்கள் பட்டினியால் வீதியில் இறங்கும் போது அரச மிருகத்தனத்தையும் பயங்கரவாதத் தையும் பிரயோகிப்பதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது.

இந்த ஏகாதிபத்தியத்தைப் பார்த்துக்கொண்டும் பொறுத்துக்கொண்டும் இருக்க முடியாது.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்த்து இந்தச் சர்வாதிகார அரச பயங்கரவாதத்தை தோற்கடிக்க வீதியில் இறங்கி ஜனநாயக ரீதியிலான அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

# மேலும் 7 பில்லியன் டொலர் கடன் இலங்கைக்கு கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 26

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 330 மில்லியன் டொலர்கள் விரிவான கடன் வசதி கிடைத்ததைத் தொடர்ந்து, மேலும் 7 பில்லியன் டொலர்களை சலுகைக் கடனாக இலங்கை பெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் உதவியின் கீழ் இந்தக் கடன்கள் பெறப்படும் என அவர் குறிப்பிட்டார்.



இந்த கடன்கள் தொடர்பில் அண்மையில் உலக வங்கியின் இலங்கை பணிப்பாளர் சியோ கன்டா மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெறப்பட்டதன் பின்னர் நடைபெற்ற முதல் பேச்சுவார்த்தை இதுவாகும்.

இதன்போது எதிர்கால பொருளாதார நடவடிக்கைகளுக்கு உலக வங்கியின் ஆதரவு குறித்து தொடர்ந்து விவாதிக்கப்பட்டது. அதன்படி, இலங்கைக்கு ஆதரவாக இந்த கடன் தொகை வழங்கப்பட உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியால் இலங்கை சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதுடன் எதிர்காலத்தில் மேலும் கடன் உதவி கிடைக்கும் என நம்பப்படுகிறது.

## தப்பிச் செல்ல ஆற்றில் குதித்த கைதி!

கொழும்பு, மார்ச் 26

தப்பிச் செல்ல முற்பட்ட கைதி ஒருவர் ஆற்றில் மூழ்கிக் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, பல்லேகல திறந்த வெளி சிறைச் சாலையில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்ட கைதியே மகாவலி ஆற்றில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

குறித்த கைதி ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பை சேர்ந்த 34 வயதுடைய நபரே தப்பிச் செல்வதற்காக மகாவலி ஆற்றில் குதித்துள்ளார்.

இந்நிலையில், பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து கைதியைத் தேடும் பணிகளை முன்னெடுத்துள்ளனர். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.